பக்கங்கள்: இருபத்துஎட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை (13.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 017



21 எதிர்க்கட்சிகளும் இனைய வேண்டும்



23 ஆளுநரின் அட்டகாசத்தை ஏற்கமுடியாது



24 ஈழத்தமிழ் இளைஞர் சாதனை

# காணாமற்போனோர், அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### கோட்டை ரயில் நிலையம் முன்பாக உறவுகளைத் தொலைத்தோர் திரண்டனர்

கொழும்பு, டிசெம்பர்13

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி காணாமல்போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களை தேடிப்பிடித்து மீட்டுத் தருமாறு கோரியும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி கலந்துரையாடலுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக் கணக்கானோர் தமது காணாமற்போன, கடத்தப்பட்ட உறவுகள் மற்றும் கைதிகள் குறித்து வேதனையுடன் கோஷங்களை எழுப்பினர்.

பக் 27



## வடக்கில் மீன்பிடி பாஸ் நடைமுறை நீக்கப்படும்

கொழும்பு, டிசெ.13

வடக்கில் மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பாஸ் நடைமுறை முற்றாக நீக்கப்படும் - என்று கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அதேவேளை, தென்பகுதியில் உள்ளவர்கள் வடக்கிற்குச் சென்று மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தின் கடற்றொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக

பக் 27

# கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஆஸ்திரேலிய எம்.பிக்கள் பார்வை

### கண்டாவளைக்கு நேரில் விஜயம்

கிளிநொச்சி, டிசெ.13

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், செனற் சபை உறுப்பினர்களும் கண்ணி வெடி அகற்றும் பணிகளை நேரில் அவதானித்தனர்.

இந்தக் குழுவில் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களான கிறிஸ்தோபர் பற்றிக் ஹெய்ன்ஸ், ரொவான் எரிக்ரம்சே, அன்ரூ ஜோன்,

பக் 27

## மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் அரசியல் யாழ்ப்பாணத்தில் உள்ளதா?

யாழ்ப்பாணம், டிச.13

பொது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு அரசியல் நடவடிக்கைகள் இங்கு இடம் பெறுகின்றதா? மக்கள் சுதந்திரமாகச் செயற்படக் கூடிய சூழல் யாழ்ப்பாணத்தில் உள்ளதா? மக்களின் உண்மையான பிரதிநிதித்துவம் அரசியலில் இருக்கின்றதா? என்ற கேள்விகளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்கா, கனடா, இராஜதந்திரிகள் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் எழுப்பியுள்ளனர்.

அமெரிக்க தூதரகத்தின் தகவல் அதிகாரி கிறிஸ்தோபர் லெம்ஸ், அமெரிக்காவின் 'சமாதானத்துக்கான தூண்டுதல்' குழுவின் ஸ்தாபகர் ஜொப்ஸ் நியூ ஆகியோர் நேற்றுமுன்தினம் அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை நேற்றுத் திங்கட்கிழமை காலை கனேடிய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த கேற்பியன்டர் மற்றும் கனேடிய தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் மேகன் போஸ்டர் ஆகியோர் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பாக மாவட்ட செயலகத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் அரச அதிபர் தெரிவித்தமை வருமாறு:-

அமெரிக்க அதிகாரிகளுடனான சந்திப்பின் போது, சமகால அரசியல் நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாகத் தற்போதைய அரசியல்

பக் 26

# வடக்கில் அவலச் சாவுகள் அதிகரிப்பு நாளாந்தம் பொலிஸில் முறைப்பாடு

### தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றும் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.13

வடக்கில் அண்மைக் காலத்தில் அவலச்சாவுகள் திடீரென அதிகரித்துள்ளன. தூக்கில் தொங்கியும், கிணற்றில் தவறி வீழ்ந்தும், குளத்தில் அல்லது கடலில் மூழ்கியும் பலர் உயிரிழந்த சம்பவங்கள் கடந்த சில வாரங்களில் பதிவாகியுள்ளன.

ஊடகங்களில் நாளாந்தம் அவலச் சாவுகள் குறித்த தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

நேற்றும் எமக்குக்கிடைத்த தகவல்களின்படி தூக்கில் தொங்கிய நிலையில் இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஒரு சம்பவம் உரும்பிராய் மேற்கிலும், மற்றைய சம்பவம் கைதடி மேற்கில் இடம்பெற்றுள்ளன.

உரும்பிராய் மேற்கில் உயிரிழந்தவர் உயர்தர வகுப்பு மாணவன். வயாவிளான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற யோகேஸ்வரன் புதர்சன் (வயது-18) என்ற இந்த மாணவனின் சடலம் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத

பக் 26

## பிரான்ஸ் குடியுரிமை பெற்ற யாழ். வாசிகளுக்கு அடிக்கிறது அதிர்ஷ்டம்!

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் பிரான்ஸ் நாட்டில் சட்ட பூர்வமான பிரஜைகளாக இருந்தால் அவர்கள் இலங்கையில் உள்ள தமது குடும்ப அங்கத்தவர்களையும் தங்களுடன் பிரான்ஸுக்கு அழைக்க விரும்பினால் அந்தக் கோரிக்கை பற்றிச் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரைன்

பக் 27

# நாகர்கோவில் கிழக்கு, தெற்கில் 2012 முற்பகுதியில் மீள்குடியமர்வு

### கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதம்

மருதங்கேணி, டிசெ.13

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மக்கள் மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்படாத பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் மக்களை மீள்குடியமர்த்துவதற்கு வசதியாக இந்தப் பணி மேற்கொள்ளப்படுவதாக உதவி அரசாங்க அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இன்னும் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகள் விடுவிக்கப்படாமல் உள்ளன.

நாகர்கோவில் கிழக்கு,நாகர்கோவில் தெற்கு ஆகிய பகுதிகளில் கண்ணிவெடிகள் அதிகளவில் புதைக்கப்பட்டுள்ளன.

மருதங்கேணிக்குச் செல்லும் வீதியின் இருமருங்கிலும் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாதை மட்டும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு கட்டைக்காடு, மருதங்கேணி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வீதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வீதியின் இரு பக்கமும் கண்ணிவெடிகள்

பக் 27

## எனது மரணச் சான்றிதழை தாருங்கள்; அரச அதிபரிடம் கோரிய பெண்மணி

யாழ்ப்பாணம், டிச.13

"எனது மரணச் சான்றிதழை எனக்குப் பெற்றுத் தாருங்கள்" என்று உயிருடன் உள்ள ஒருவர் தன்னிடம் வந்து கோரியதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்த விநோதக் கோரிக்கை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொக்குவிலைச் சேர்ந்த பெண்ணொருவர் நீண்ட காலத்துக்கு முன்னர் சுவிஸ் சென்றுள்ளார். தற்போது அவர் தனது 6 பிள்ளைகளுடன் இங்குள்ள தனது வீட்டுக்கு வந்தபோது, வீட்டிலிருந்த உறவினர்கள் அந்தக் காணி குறித்த பெண்மணியின் பெயரில் இல்லை என்று சொல்லி அவரை விரட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பெண்மணி தீர விசாரித்த போது, பெண்ணின் வீட்டுக்குரிய காணியை வைத்து

பக் 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியாவில் மழையும் பிற மாவட்டங்களில் இடி மின்னலும் நிலவக் கூடிய சாத்தியம் அதிகமாக உள்ளது.

# வடக்கு முதல்வர் பதவிக்கு போட்டியிட டக்ளஸ் கனவு!

கொழும்பு, டிசெ.13

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு சபையை கைப்பற்றுவேன் இவ்வாறு சூளுரைத்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அத்துடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் முன்வரவேண்டும் எனவும் அவர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர்களை அமைச்சர் டக்ளஸ் நேற்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

நாம் தோற்றுப்போனதொரு சமூகம் அல்ல. எம்மிடையே அவ்வப்போது பலம் பெற்றிருந்த சக தமிழ்த் தலைமைகளின் மதிநுட்பம் மறந்த - நடைமுறைக்கு ஒவ்வாத வழிமுறைகளே தோற்றுப்போயுள்ளன.

எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சகல தமிழ்க் கட்சிகளும் கடந்தகால தவறுகளை திருத்திக்கொண்டு செயற்பட முன்வரவேண்டும் என்பதே எனது விருப்பம். இதில் ஈ.பி.டி.பியினராகிய நாம் தவறுவிட்டிருந்தாலும், அதை நியாயபூர்வமாக யாரும் சுட்டிக்காட்டினால் அதை ஏற்று திருந்தி நடக்கவும் தயாராக இருக்கின்றோம்.

கிடைத்த சந்தர்ப்பங்கள் யாவற்றையும் நாமே தவறவிட்டோம். சிங்களம் எமக்கு ஒருபோதும் தீர்வு வழங்காது என்று ஏட்டிக்குப் போட்டியான இனவாத சிந்தனைகளும், தீர்வை அடைவதற்கான எந்தவொரு நடைமுறை சார்ந்த வழிமுறையையும் கொண்டிருக்காமல், உரிமை குறித்த வெற்றுக் கோஷங்களை மட்டும் எழுப்புவதால் எந்தப் பயனும் இல்லை.

அதற்காக எவரும் யாரிடமும் சரணாகதியடையவேண்டும் என்று அர்த்தமல்ல.

அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசி வருவதை நாம் வரவேற்கின்றோம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஆலோசனைகளையும் பெற்று, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதற்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி, மேலும் அதை வளர்த்தெடுப்பதற்கான அரசியல் தீர்வு முயற்சி இப்போது தொடங்கியுள்ளது. இது யுத்தத்திற்குப் பிந்திய புதியதொரு முயற்சி. குறிப்பிட்ட கால எல்லையை நிர்ணயித்தே இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு செயற்படவுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் பலவும் தத்தமது பிரதேசங்களில், மாகாணசபைகளில் பங்கெடுத்து வருகின்றன.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் என சகல தரப்பும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுக்கின்றன. ஆகவே, இந்த ஆலோசனைகளின் மூலம் கிடைக்கும் அரசியல் தீர்வானது பலமானதாக அமையும். எனவே, கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பம் அரியதொரு வாய்ப்பாகும்.

ஆகவே, சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டு, ஒருவருக்கொருவர் அர்த்தமின்றி முரண்படாமல், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுப்பதன் மூலம் எமது மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்த விடயங்களை ஒரே குரலில் வலியுறுத்தி கூறவேண்டிய தருணம் இது.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்காத ஏனைய தமிழ்க் கட்சிகளும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக தமது யோசனைகளைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தையும் நாமே உருவாக்கிக் கொடுப்போம்.

எனவே, நம்பிக்கையுடனும், அக்கறையுடனும், உண்மைத் தன்மையுடனும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து தமிழ்க் கட்சிகளும் முன்வர வேண்டும் - என்றார்.

## போதைப் பொருளுடன் மன்னாரில் ஒருவர் கைது

கொழும்பு , டிச.13

மன்னார் தாழ்ப்பாடு பிரதேசத்தில் கடற்படையினரால் சுமார் பத்துக்கோடி ரூபா பெறுமதி வாய்ந்த போதைப் பொருள்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் நான்கு கிலோ நிறையுடைய 'பிறவுண் சுகர்' மற்றும் ஹெரோயின் ஆகிய போதைப் பொருள்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

போதைப் பொருள் களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஒன்பது 'சிம்' அட்டைகளும், 2,000 ரூபா இந்திய நாணயத்தாளும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-60)

## மாட்டுடன் சென்றவர் மாட்டினார்

அனுமதிப்பத்திரமின்றி 2 பசுக்கள் 2 கன்றுக்குட்டிகள் என்பவற்றை ஏற்றிச் சென்ற ஒருவர் உடுப்பிட்டி சங்கக் கடை பகுதியில் வைத்துவல் வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் நேற்று பருத்தித் துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தீர்ப்பளித்தார். (ந-319)

## சகஜ யோகப் பயிற்சி நாளை நல்லூரில்

யாழ்ப்பாணம்,டிசெ.13

சகஜ யோகா முறையில் தியானப் பயிற்சி செய்து, வாழ்க்கையில் சமநிலை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த பயிற்சியும் விளக்கமும் கொண்ட நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு, நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீமாதாஜி நிர்மலா தேவியாரால் அறிமுகம் செய்யப்பட்ட சகஜயோகாவின் சிறப்புகள் குறித்த அறிமுக விளக்கங்களும் பயிற்சியும் இந்நிகழ்வில் இலவசமாக வழங்கப்படும்.

மக்கள் தமது விருப்பங்களையும் அபிலாசைகளையும் அடைவதற்கு மேற்கொள்ள வேண்டிய சக்தியை தமக்குள்ளேயே உருவாக்க சகஜயோகா வழிசெய்யும் என்று மலேசியாவில் இருந்து வருகை தந்துள்ள அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (அ)

## புதுக்குடியிருப்பில் குடியமர்ந்த மக்கள் வைத்திய உதவிகள் இன்றித் தவிப்பு

### ஒரேஒரு வைத்தியர் மட்டுமே கடமையில்

புதுக்குடியிருப்பு, டிசெ.13

புதுக்குடியிருப்புப் பிரதேச அரச வைத்தியசாலையில் ஒரேயொரு வைத்தியர் உள்ளதுடன் ஆண், பெண் நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு ஒரு விடுதி மட்டுமே இருக்கின்றது. இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர் பெரும் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல தரப்பட்ட வசதியீனங்கள் மத்தியில் வாழ்ந்து வரும் இப்பகுதி மக்கள் அடிப்படை வசதிகளில் ஒன்றான வைத்திய சேவையை ஒழுங்காகப் பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்களில் இதுவரை சுமார் 25 ஆயிரம் மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்காக ஒரேயொரு வைத்தியசாலை மட்டும் இயங்கி வருகின்றது. இந்த வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டும் கடமையாற்றி வருகிறார். இவர் விடுமுறையில் செல்லும் காலப்பகுதியில் பதில் வைத்தியர் எவரும் நியமிக்கப்படாதமையால் அங்கு செல்லும் நோயாளர் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். இவர்கள் 30 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள முல்லைத்தீவு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களுக்குத் தகுந்த சிகிச்சை பெற முடியாமல் திண்டாடுகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி வைத்தியசாலையில் ஆண், பெண் நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு ஒரேயொரு விடுதி மட்டும் இருப்பதனால் அங்கு செல்லும் நோயாளர் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள். சகலதையும் இழந்த நிலையில் மீள் குடியேறிய தமக்கு சீரான வைத்திய சேவையை வழங்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (த-115)

## பரீட்சை எழுத 7 கிலோ மீற்றர் சைக்கிளில் பயணித்த மாணவர்

### பஸ் சேவை இல்லாமையால் கொட்டும் மழையிலும் நனைந்தனர்

முல்லைத்தீவு,டிசெ.13

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளுக்கான பஸ் சேவைகள் சீரற்ற நிலையில் உள்ளமையால் நேற்று ஆரம்பமான ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையை எழுதுவதற்காக சுமார் 80 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கொட்டும் மழையில் நனைந்தவாறு 7 கிலோ மீற்றர் தூரத்துக்குச் சைக்கிளில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சைக்கிள் ஓடிக் களைத்துப் போன மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதும் போதும் பெரும் சிரமப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மாணவர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு, நட்டாங் கண்டல், பாண்டியன்குளம், பாலிநகர் ஆகிய இடங்களில் இருந்து மல்லாவி நகருக்குச் செல்லும்பஸ்கள்சீரானமுறையில் உரிய நேரத்துக்குச் சேவையில் ஈடுபடு வதில்லை. இந்த நிலை நேற்றும் ஏற்பட்டது. இதனால் பாண்டியன்குளம், நட்டாங் கண்டல் ஆகிய இடங்களில் இருந்து சுமார் 7 கிலோமீற்றர் அப்பால் மல்லாவி நகரில் அமைந்துள்ள பரீட்சை நிலையத் துக்குச் செல்ல வேண்டிய சுமார் 80 க்கும் அதிகமான மாண வர்கள், உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண் டனர்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பஸ்ஸுக்காகத் காத்திருந்து களைத்துப்போய் காலை 8 மணிக்குப் பின்னர் பெரும் சிரமங்களின் மத்தியில் கொட்டும் மழையில் நனைந்தவாறு சைக்கிள்களில் பரீட்சை நிலையத்துக்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை மாங்குளம் சந்தியில் இருந்து மல்லாவி, துணுக்காய் ஆகிய இடங்களுக்குக் காலை 8 மணிக்கு நடைபெற வேண்டிய பஸ்சேவை உரிய நேரத்தில் இடம் பெறாமையினால் மல்லாவி, துணுக்காய் செல்லவேண்டிய அரச உத்தியோகத் தர்கள், பொதுமக்கள் காலை 8.45 மணிக்குப் பின் குறித்த இடங்களுக் குப் பயணித்தனர். (த-6)

## நிகழ்வுகள் இன்று

**பரிசில் வழங்கல்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சமயப் பொது அறிவுப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**விழிப்புணர்வு நிகழ்வு**

இதம் உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளர்களுக்கான தொழிற் பயிற்சி, தொழில் வாய்ப்புகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை சாவகச்சேரி சிவன் கோயில் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 18 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்ட மாற்றுத் திறனாளர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம். இதில் சாவகச்சேரி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர், மோட்டி வேயுன் நிறுவன உத்தியோகத்தர்கள், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க நிறுவன உத்தியோகத்தர்கள், ஜெய்ப்பூர் நிறுவன உத்தியோகத்தர்கள் விழிப்புலனற்றோர் சங்க நிறுவன உத்தியோகத்தர்கள் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது நிறுவனங்கள் மூலம் மாற்றுத் திறனாளர்களுக்கு வழங்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாகவும் தொழில் வாய்ப்பு, தொழில் பயிற்சி தொடர்பாகவும் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (ம-313)

**ஆன்மிகச் சொற்பொழிவு**

உலக சின்மயா மிஷன் தலைவர் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தர் முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் வழங்கும் ஆன்மீக சொற்பொழிவு மாலை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இந்த ஆன்மிக சொற்பொழிவு ''அமைதியற்ற உலகில் அமைதி'' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது. (ம-313)

### அகழ்வாராய்ச்சி என்ற பெயரில்

# தமிழரின் வரலாற்றுச் சின்னங்கள் அழிப்பு பௌத்த அடையாளங்கள் நிர்மாணிப்பு

### நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி

கொழும்பு, டிசெ.13

13ஆம் நூற்றாண்டில் சுயநிர்ணயத்துடன் வாழ்ந்த தமிழர்களின் மரபுரிமை, வரலாறு மற்றும் சுயநிர்ணயம் போன்றவை இப்போது வடக்கு, கிழக்கில் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் அழிக்கப்பட்டு, பௌத்த அடையாளங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தில் தேசிய மரபுரிமை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சிங்கள தேசிய இனம், தனியான சுயநிர்ணயம், கலாசாரம் மற்றும் மரபுரிமை போன்றவற்றை கொண்டிருப்பதுபோல் தமிழ்த் தேசிய இனமும் கொண்டிருக்கின்றது. தமிழரின் இந்த விடயங்கள் இப்போது அழிக்கப்பட்டு, பௌத்த அடையாளங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

ஓர் இனத்தின் தேசிய மரபுரிமையைப் பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கையின்போது இன்னொரு இனத்தின் மரபுரிமை அழிக்கப்படக்கூடாது.

வரலாற்றில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்கின்றனர். மாதகல் மற்றும் கந்தரோடை போன்ற இடங்களில் அதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஆனால், அவற்றை தனிச்சிங்கள வரலாறாகக் காட்ட முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

மாதகல், ஜம்புகோலப் பட்டினம் என்றும், நயினாதீவு, நாகதீவு என்றும் பெயர் மாற்றப்பட்டுள்ளன. யாழ். பழைய பூங்கா வட மாகாண ஆளுநரால் அழித்தொழிக்கப்படுகின்றது.

சாவகச்சேரியில் கட்டடங்கள் கட்டப்படுகின்றபோது அங்குள்ள தமிழ் மரபுரிமை அழிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் உள்ள சிவாலயத்தில் இருந்த அம்பிகையின் சிலை கொழும்பு நூதனசாலையில் 40 வருடங்களாக வைக்கப்பட்டிருந்தது. புத்தகம் ஒன்றிற்காகப் புகைப்படம் எடுப்பதற்கு அந்த நூதனசாலைக்குச் சென்றபோது அந்தச் சிலையைக் காணவில்லை.

திருகோணமலையின் ஓரிடத்திலிருந்த அம்மன் சிலை நீக்கப்பட்டு புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. கிண்ணியா நீருற்றில் இருந்த சிவாலயம் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் பௌத்த விகாரை அமைக்கப்படுகின்றது.

வன்னியில் பண்டாரவன்னியனைத் தோற்கடித்த ஆங்கிலேயர், அங்கு பண்டார வன்னியனின் சிலையை வைத்தனர். இப்போது அந்தச் சிலை நீக்கப்பட்டுள்ளது.

பூநகரியில் பல சிவாலயங்கள் நிலத்தின் அடியில் புதைந்து கிடக்கின்றன. இவற்றை வெளியில் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

யாழ். கோட்டையைக் காட்சிப்பொருளாகக் காண்பிப்பதற்காக நிதி ஒதுக்கப்படுகின்றது. சிங்களவர்களைக் கைதிகளாக அடைத்துவைப்பதற்கு ஆங்கிலேயர்கள் பயன்படுத்தி அந்தக் கோட்டையை தேசிய சொத்தாக - பெரும் நினைவுச் சின்னமாகக் கருதி அதைப் பாதுகாக்கும் அரசு, இந்த நாட்டின் தேசிய இனமான தமிழ் இனத்தின் மரபுரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதில்லை.

தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர்கள் அல்லர். அவர்கள் தேசிய இனத்தவர்கள். 13ஆம் நூற்றாண்டில் சுயநிர்ணயத்துடன் வாழ்ந்தவர்கள். அவர்களின் வரலாறு மற்றும் மரபுரிமை ஆகியவற்றைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவற்றை அழித்தொழிக்கும் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும் - என்றார்.

(ஒ-சி)

## ஹைகோப் வழக்கு தீர்ப்பு ஜனவரியில்

கொழும்பு, டிசெ.13

சரத் பொன்சேகா மீதான ஹைகோப் நிதி மோசடி வழக்கு விசாரணையைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நாள் குறித்துள்ளது.

அதன்படி அடுத்த வருடம் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி இது குறித்துத் தீர்மானிக்கப் படவுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்குடன் தொடர்புடைய அடிப்படை எதிர்ப்புகள் குறித்து நீதிபதி சுனில் ராஜபக்ஷ விரிவுரைவழங்கியுள்ளார்.

எனினும், ஹைகோப் வழக்கை தொடர்ந்தும் நடத்திச் செல்ல சட்ட அதிகாரம் உள்ளது என சட்டமா அதிபர் வாதிட்டுள்ளார்.

ஆனாலும் இரண்டாம் இராணுவ நீதிமன்றில் சரத் பொன்சேகாவுக்கு 30 மாதகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் ஹைகோப் வழக்கை தொடர்ந்தும் நடத்திச் செல்ல சட்ட அதிகாரம் இல்லை என சரத் பொன்சேகா சார்பில் ஆஜரான நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்-என்பது குறிப்பிடத்தக்கது.

(ங-சி)

## நேற்று ஆரம்பமானது ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.13

ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சை நேற்றைய தினம் ஆரம்பமானது. இந்த வருடம் நாடளாவிய ரீதியில் 5 இலட்சத்து 31 ஆயிரத்து 325 மாணவர்கள் இந்தப்பரீட்சையில் தோற்றுகின்றனர். மாணவர்கள் இயல்பு நிலையில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வசதியாக 3 ஆயிரத்து 921 பரீட்சை நிலையங்கள் செயற்படுகின்றன. இதற்காக 532 இணைப்பு நிலையங்களும் 33ஒருங்கிணைப்பு நிலையங்களும் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் பரீட்சைக்கு பாடசாலைப் பரீட்சார்த்திகளாக 3 இலட்சத்து 85 ஆயிரத்து 94 மாணவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 1 இலட்சத்து 46 ஆயிரத்து 231 மாணவர்களும் தோற்றுகின்றனர்.

இதேவேளை கடந்த வருடம் ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் பங்குபற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் 32 ஆயிரத்து 418 மாணவர்கள் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது மாறாக பாடசாலை பரீட்சார்த்த மாணவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்தைவிட இந்த வருடத்தில் 9509 மாணவர்களுடைய எண்ணிக்கையாக குறைவடைந்துள்ளது.

இந்த வருடம் புனர்வாழ்வளிக்கப்பட்ட தடுப்பில் உள்ள போராளிகளுக்காக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் விசேட தேவையுள்ள மாணவர்களுக்காக ரத்மலான மற்றும் தங்கட்டுவ பகுதியிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் 12 கல்வி வலயங்களிலிருந்து இந்த வருடம் 44 ஆயிரத்து 544 மாணவர்கள் தோற்றுகின்றனர் இதில் 36 ஆயிரத்து 463 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 8 ஆயிரத்து 81 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

நேற்று ஆரம்பமான இந்தப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

( ங-323-11)

## இரட்டை வேடம் போடும் தேசியப் பட்டியல் சுமந்திரன் அரியம், செல்வத்திடம் அரசியல் பாடம் கற்க வேண்டும்

### பிரபா கணேசன் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.13

தமிழ்த் தேசியம் பேசி - தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்கள்தான் எனக் கூறிக் கொண்டு, மறுபுறம் அரசுடன் கிரிக்கெட் விளையாடும் தமிழ் அரசியல்வாதிகளை தமிழ்மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு கூறியுள்ளார் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டிக்கும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

இன்று தமிழ் மக்களுக்குத் தீராத இனப்பிரச்சினை இருந்து கொண்டிருக்கும்போது கிரிக்கெட் போட்டிகள் தேவைதானா என்று அரியநேத்திரன் காரசாரமாக விமர்சித்துள்ளார். இந்த விமர்சனத்திற்கு சுமந்திரன் பதிலளிக்கவேண்டும்.

தென்னிலங்கை தமிழ்மக்களின் தேவை வேறுவிதமாக இருக்கின்றது என்பதற்காக அரசுக்கு நாங்கள் ஆதரவு தெரிவித்துள்ளோம். அதை நாங்கள் நேரடியாகத் தெரிவித்திருக்கிறோம். ஆனால், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஒரு முகத்தையும், அரசுக்கு இன்னொரு முகத்தையும் காட்டி புலம்பெயர்ந்தவர்களிடம் வடக்கு, கிழக்கு இணைப்பு தேவையில்லை என்று இன்னொரு முகத்தையும் காட்டி வருகிறார்.

நாங்கள் அரசுக்கு நேரடியாக ஆதரவை வழங்கிவருகின்றோமே தவிர, இரட்டை வேடம் போடுவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய அரியநேத்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்களிடம் இவர் அரசியல் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.-என்றார். (ஒ-சி)

## இந்துமா கடலில் சீன இராணுவத்தளம்

இந்தியப் பெருங்கடலில் உள்ள ஷெசல்ஸ் தீவில் இராணுவத் தளம் ஒன்றை அமைக்கப் போவதாக சீனா அறிவித்துள்ளது. இதனால் இந்தியா பெரும் கவலையடைந்துள்ளது.

கடற்படைக்கு எரிபொருள், ஆயுத விநியோகம் செய்யவே இந்தத் தளத்தை அமைக்கவுள்ளோம் எண்கிறது சீனப் பாதுகாப்பு அமைச்சு. ஏற்கனவே தனது தென் சீனக் கடல் பகுதியிலிருந்தும், இலங்கையின் வட பகுதியில் அமைத்துள்ள கடற்படைத் தளத்தின் மூலமும் ஏற்கனவே இந்திய நீர்மூழ்கிகள், போர்க் கப்பல்களை சீனா கண்காணித்து வருகிறது.

இப்போது ஆபிரிக்க கண்டத்துக்கு கிழக்கே உள்ள இந்த ஷெசல்ஸ் தீவிலும் தனது இராணுவத் தளத்தை அமைப்பதன் மூலம் இந்தியாவை மூன்று பக்கத்தில் இருந்து சீனா கண்காணிக்க முடியும்.

இராணுவத் தளம் மட்டுமின்றி, ஷெசல்ஸ் நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சி அளிக்கவும் சீனா ஒப்புக் கொண்டுள்ளது.

சோமாலியாவை ஒட்டியுள்ள இந்தப் பகுதியில் கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்த சீனாவின் இந்தத் தளம் உதவும் என ஷெசல்ஸ் கூறியுள்ளது.

இதையெல்லாம் கவலையோடு பார்த்துக் கொண்டு, இந்தியா கையை பிசைந்து கொண்டிருக்கிறது.- என்கின்றனர் அவதானிகள். (ஒ-சி)

## சுமந்திரன் கிரிக்கெட் விளையாட்டுக்கு புலம்பெயர் தமிழர்களின் பதில் என்ன?

### பியசேன எம்.பி கேள்வி

கொழும்பு, டிசெ.13

அமைச்சர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மாத்திரம் விளையாடியமைக்கு புலம்பெயர் தமிழர்கள் என்ன காரணம் கூறப் போகின்றனர் - என்று நாடாளுமன்ற உறுப்பினரான பியசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன மேலும் கூறியவை வருமாறு:-

இவர்கள் தமிழ் மக்களின் பலவீனத்தை நன்கு அறிந்து கொண்டு, அவர்கள்மீது சவாரி செய்து கொண்டிருக்கிறார்கள். தமது சமூகத்தை ஏமாற்றுவதில் இவர்கள் விற்பன்னர்கள். இது ஒருபோதும் தமிழ் மக்களுக்கு விளங்கப்போவதில்லை.

நாடாளுமன்றத்துக்கு வந்து வீர வசனம் பேசி அறிக்கை விடுவார்கள். அது தலைப்புச் செய்தியாகப் பத்திரிகைகளில் வரும். அதுபோதும் தமிழ் மக்களுக்கு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏக பிரதிநிதிகள் என்று கூறுகின்ற அனைத்துத் தமிழர்களும் முட்டாள்களே!

கூட்டமைப்பில் நான் இருந்தபோது, ஜனாதிபதி எம்மை அழைத்துப் பேச்சு நடத்தினார். அப்போது, எமது தமிழ் மக்களுக்கு பசளையும், நெல்லும் மட்டும் தந்தால் போதுமென்று கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்கள் கூறினர். இதுதான் தமிழ் மக்கள் வணங்கும் தலைவர்களின் இலட்சணம்.

இதன் பின்னர்தான் அவர்களை விட்டு வெளியேறத் தயாரானேன். அவர்களின் நடிப்பாற்றலை வெகுவிரைவில் தமிழ்ச் சமூகம் விளங்கிக்கொள்ளும்.

பொருளாதாரத்தில் உச்ச நிலையிலிருக்கும் முஸ்லிம்களின் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே இன்று அரசுடன் இணைந்து தான் சார்ந்த சமூகத்துக்குப் பெரும் உதவிகளைச் செய்து வருவதை கூட்டமைப்பு விளங்கிக் கொள்ளாமல், தமிழ்ச் சமூகத்தை வீராப்பு வசனங்களால் பின்னடையச் செய்துகொண்டிருக்கின்றது.

தமிழ்ச் சமூகம் விழித்துக் கொள்ளாதவரை இவர்கள் கிரிக்கெட் மட்டுமல்ல, இன்னும் பல விளையாட்டுகளையும் விளையாடுவார்கள் - என்றார். (ங-சி)

# துணுக்காய் செயலர் பிரிவில் வயிற்றோட்ட நோய் அதிகரிப்பு

அக்கராயன்,டிசெ.13

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் வாழும் மக்களிடையே வயிற்றோட்ட நோய் அதிகரித்துக் காணப்படுவதாக மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தற்போது பெய்துவரும் மழையால் வெள்ளம் ஏற்பட்டுக் குடிதண்ணீர் மாசடைந்து காணப்படுவதால் வயிற்றோட்ட நோய் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே மக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

குறிப்பாகச் சுத்தமான குடிதண்ணீரை அருந்தவேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது. இங்கு வாழுகின்ற மக்கள் பாதுகாப்பற்ற திறந்த நிலையில் காணப்படும் கிணறுகளிலிருந்து நீரைப்பெற்று அருந்துகின்றனர். அத்துடன் சில குழாய்க் கிணறுகளும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அசுத்தமடைந்துள்ளன.

எனவே மக்கள் கவனமாக இருந்து இந்த வயிற்றோட்ட நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேலும் இப்பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகளின் பெருக்கம் ஏற்படுவதோடு டெங்கு,மலேரியா போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-410)

## வென்று வருக...



நம்பிக்கையே பெரும் பலம்: துணுக்காய் கோட்டைகட்டிய குளம் அ.த.க. பாடசாலையிலிருந்து க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகள் தமக்களிக்கப்பட்ட விருந்துபசார நிகழ்வின் போது அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (410)

# முழங்காவில் மகாவித்தியாலய மாணவர்களுக்கு கௌரவிப்பு

அக்கராயன்,டிசெ.13

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, முழங்காவில் மகாவித்தியாலயத்தின் தரம் 5 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு பாடசாலை முதல்வர் சு.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

கற்பித்த ஆசிரியர்களுக்குப் பெற்றோர்கள் பரிசில்கள் வழங்கினார்கள். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

முழங்காவில் மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு தனிப் பாடசாலையாக இயங்கவுள்ள நிலையில் இந்த நிகழ்வு இறுதி நிகழ்வாக அமைந்துள்ளது.

(க-410)

# யாழ்ப்பாணம் –நெடுங்கேணி பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடையில் பஸ் சேவையொன்றை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களில் யாழ். மாவட்டத் திலிருந்து வருகை தரும் உத்தியோகத்தர்களே அதிகளவில் கடமை புரிகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து நெடுங்கேணி வருவதற்கு மூன்று பஸ்களில் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் உரிய நேரத்தில் இவர்கள் தமது கடமைகளை ஆற்றமுடிவதில்லை. இத்தகைய நிலையினால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதோடு, அரச திணைக்களங்களும் பாதிக்கப்படுகின்றன.

தற்போது ஒதியமலை, நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய இடங்களுக்கான தனியார் பஸ்சேவைகள் நடைபெற்று வருகின்றன. இதனை யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரிக்குமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டபோதிலும் இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்பட வில்லை.

ஆகவே இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து யாழ்ப்பாணம் நெடுங்கேணிக்கான அரச அல்லது தனியார் பேருந்து சேவையை நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-435)

# புனரமைக்கப்பட்டபோதும் பழைய தோற்றத்துடன் காட்சியளிக்கும் கிளிநொச்சி அக்கராயன்குளம்

கிளிநொச்சி அக்கராயன்குளத்தின் 55 வீதமான புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில் அக்கராயன் குளத்தின் நீர்வடிகால் படிக்கட்டுப் பகுதிகள் முற்றாக அரிக்கப்பட்டு பெரும் குன்றும் குழியுமாக மாறியுள்ளதுடன் 150 ஏக்கருக்கு மேலான வயல் நிலங்கள் கிரவல் நிலமாக மாறியுள்ளன.

அக்கராயன்குளம் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுவுக்கு அடுத்த மிகப் பெரிய குளமாகும். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இக்குளம் முழுமையான புனரமைப்பு வேலைகள் செய்யப்படாத நிலையில் இருந்தது. இவ்வாண்டு இதன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வான் கட்டு ஒரு அடி உயர்த்தப்பட்ட நிலையில் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அக்கராயன்குளத்தின் வான் வழியாக வெளியேறும் மேலதிக நீர் புனரமைப்பு வேலைகள் தொடங்குவதற்கு முன்னர் வான் பகுதியின் தொடக்கத்தில் பெரிய குழிகளை உருவாக்கியிருந்தது. இக்குழிகள் அணைக்கட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்ததுடன் குளம் மழை காலத்தில் எந்த நேரமும் உடைப்பெடுக்கும் அபாயமும் தோன்றியிருந்தது.

தற்போது நிறைவடைந்துள்ள புனரமைப்பு பணிகளில் குளத்தின் வான் பகுதி ஒரு அடி உயர்த்தப்பட்டதோடு வெள்ளம் பாயும் குழிகள் மூடப்பட்டு வான் பாயும் 200 மீற்றர் நீளமான பகுதிக்குக் குறுக்கே சீமெந்திலான அடுக்குத் தடுப்பரண்கள் அமைக்கப்பட்டன.

முன்பு உடைப்பெடுத்திருந்த நீர்த்தடுப்பணை புனரமைப்புச் செய்யப்படவில்லை. குளத்தின் மேலதிக நீர் பாயக்கூடிய வகையிலேயே அமைக்கப்பட்டது. அக்கராயன் குளம் மக்களின் பெரும் சொத்து என்ற வகையில் விவசாயிகள் காலபோக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் குளம் புனரமைக்கப்படாத வேளையில் நிகழாத அவலம் ஒன்று அக்கராயன்குளம் வான் பாய்ந்து கொண்டிருப்பதால் உருவாகியுள்ளது.

வான் வழியாக வெளியேறிய பெருமளவு நீர் புதிதாக உருவாக்கப்பட்ட சீமெந்திலான தடுப்பரண்களை உலுப்பியதுடன், பெரும் குழிகளை உருவாக்கி மூடப்பட்ட பெருங்குழிகளின் கிரவல் மண்ணை, அக்கராயன் வயல் நிலங்களில் 150 ஏக்கர் மேலான பரப்பில் பரப்பியுள்ளதால் விவசாயிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர். குளத்தின் புனரமைப்பு வேலைகளில் ஏதோ ஒரு இடத்தில் தவறு நிகழ்ந்து விட்டது.

வான் கட்டுப் பகுதி உயர்த்தப்பட்டு வெள்ளத் தடுப்பரண்கள் தாழ் நிலப்பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக குளத்தில் இருந்து நீர்வடிகால் படிக்கட்டு வழியாக வேகமாக வெளியேறும் நீர், சிறிய சீமெந்திலான தடுப்பரண்களை முட்டி மோதிப் பெரும் குழிகளை உருவாக்கியுள்ளது.

300 மில்லியன் செலவில் 55 வீதமான புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த வேளையில் தற்போது புனரமைப்புச் செய்யப்படாத குளம் மாதிரியான நிலை உருவாகியுள்ளது.

தொடர்ந்து நீண்டகாலம் இருக்க வேண்டிய குளத்தின் கட்டுமானம் ஒரு மழை வெள்ளத்துடன் அள்ளிச் செல்லப்பட்ட அவலம் நேர்ந்துள்ளது. கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி வான் பகுதி வேலைகளை நிறைவு செய்த ஒப்பந்ததாரர் மூடை கட்டி விட்டதாகத் தெரிகிறது. இந்த ஒப்பந்ததாரர் வான் பகுதியின் குழிகளில் இடவேண்டிய கிரவல் மண்ணை அக்கராயன் மத்திய பகுதியின் வீதிப் புனரமைப்புக்குப் பயன்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அக்கராயன் குளத்தின் புனரமைப்புப் பணிகளில் 55 வீதம் நிறைவடைந்துள்ள நிலையில் குளத்தின் வான் கட்டின் நீர் வடிகால் திருத்தமும் அதன் தொழில் நுட்பக்கோளாறுகளும் என்ற வகையில் இனங் காணப்பட்ட பிரச்சினைகள் பின்வருமாறு:

1. நீர் வடிகால் படிக்கட்டு தொழிநுட்ப முறை சீராகப் பேணப்படவில்லை.

2. இதன் காரணமாகப் பெரிய மண்படுக்கைகள் அரிக்கப்பட்டுச் செல்வதோடு, புதிதாகக் கட்டப்பட்ட தடுப்பணைகளும் உடைந்து விடும் அல்லது சரிந்து விழும் நிலையில் உள்ளன.

3. மண் அரிப்புக் காரணமாக கிரவல், கழி, கூழாங்கற்கள் அனைத்தும் அக்கராயன் ஆற்றினுள் செல்கின்றன.

4. இவை ஆற்றினுள் செல்வதனால்,

✱ வலதுகரை வாய்க்காலிலுள்ள விளை நிலங்களின் வெள்ளத் தடுப்பணை பல இடங்களில் சீரற்று இருப்பதனால் கிரவல் மண் வயல் நிலங்களில் படியும் அபாயம் உள்ளது.

✱ ஆற்றில் மண் படிவதனால், ஆற்றின் படுக்கை உயர்ந்து ஆறு அகலமாகச் செல்லும் நிலை தோன்றும். இதனால் பயிர் நிலங்கள் நீரில் மூழ்கிப் பயிரழிவு ஏற்படும்.

5. வான்கட்டின் வால்க்கட்டு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளம் காரணமாக உடைக்கப்பட்டிருந்தது. அது இதுவரை சீர் செய்யப்படாமலேயே உள்ளது.

கடந்த பத்து வருடங்களாக இது உடைப்பதும் சீர் செய்யப்படுவதுமாக உள்ளதாயினும், பல வளங்கள் இருந்தும் இதனை சீரான முறையில் திருத்தியமைத்தல் தொடர்பில் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை. இவ்வால்கட்டு உடைந்த நிலையில் உள்ளதனால்.

✱ திருமுறிகண்டி- வன்னேரிக் குளம் பிரதான வீதியை வெள்ள நீர் ஊடறுத்து செல்வதால் வாகனப் போக்குவரத்து பெரும் சிரமங்களுக்கு இடையிலேயே நடைபெற்று வருகின்றது.

✱ அக்கராயன் குளத்தின் வலது கரையில் வசித்துவருகின்ற மக்கள் அத்தியாவசிய தேவைகளான வைத்தியம், கல்வி, விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளல், சந்தை வசதி என்பவற்றிற்காக இடது கரைக்குச் செல்ல வேண்டியுள்ளனர்.

✱ வலது கரையில் வசிக்கின்ற க.பொ.த சாதரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அக்கராயன் குளம் வான் பாய்கின்ற காலத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டே பரீட்சை நிலையமான அக்கராயன் மகா வித்தியாலயத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.

6. மீள்குடியமர்வின் பின்னராக அக்கராயன் குளத்தின் திருத்த வேலைக்காக பிரதேச விவசாயிகள் தமது சிறுபோக நெற்செய்கையை (வலது கரை மற்றும் இடது கரை இருபுறமுமாக) விட்டுத்தந்தும் குளத்தின் திருத்தப்பணிகள் சீராக நடைபெறாமையானது விவசாயிகளுக்கு மனவேதனை தரும் விடயமாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக இவர்களது வாழ்வாதாரமும் பாதிப்புற்ற நிலையிலேயே உள்ளது.

அக்கராயன் குளத்தின் புனரமைப்பு வேலைகள் அடுத்த ஆண்டு ஒக்டோபரில் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் குளத்தின் வான் கட்டுப் பகுதியில் நடைபெற்ற வேலைகள் பயனற்றதாகவே தெரிகின்றன.

300 மில்லியன் நிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் வீணாகிவிட்டதேயென்ற ஆதங்கம் அக்கராயன் பகுதி விவசாயிகள் மற்றும் மக்களிடையே தோன்றியுள்ளது.

கி.பிருதிவி

புனரமைப்புச் செய்யப்பட்டும் புனரமைக்கப்படாத ஒரு குளத்தின் வான் கட்டுப் பகுதி போன்று தோற்றமளிப்பது இங்குள்ள அனைவருக்கும் வேதனையைக் கொடுத்துள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யார் விட்டுக்கொடுப்பது? அரசா, கூட்டமைப்பா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கோரிக்கைகள் தொடர்பாக அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் இணக்கம் ஒன்று ஏற்படும் சாத்தியம் மேன்மேலும் அரிதாகி வருகிறது. அரச தரப்புடனான பேச்சுகளின் போது கூட்டமைப்பு மூன்று கோரிக்கைகளை முன்வைத்தது.

★ பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைத்தல்.
★ மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குதல்.
★ மாகாண சபைகளுக்கான காணி அதிகாரங்கள்.

இந்த மூன்று கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே சமாதானப் பேச்சுகளில் விரிசல் நிலைமை ஏற்பட்டது. பேச்சு முறிந்து போகும் ஆபத்து உருவானது. அத்தகைய நிலையிலும் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற பேச்சில் கூட்டமைப்பு கலந்துகொண்டது.

அரசுடனான பேச்சின்போது கூட்டமைப்பு தமிழீழம் கோரவில்லை; சமஷ்டி கோரவில்லை. பொலிஸ், காணி அதிகாரங்கள் உடைய வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையே கூட்டமைப்பின் கோரிக்கை. அதில் விட்டுக்கொடுப்புக்கு இடம் இல்லை.1987ஆம் ஆண்டு ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் மூலம் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் தற்பொழுது வடமாகாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் இயங்கி வருகின்றன. ஆனால், அவற்றுக்கு பொலிஸ் - காணி அதிகாரங்களை அரசு வழங்கவில்லை.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மேற்சொன்ன அதிகாரங்களைத்தான் கூட்டமைப்புக் கோருகிறது. அதாவது, 1987 ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்டு விடுதலைப்புலிகளினால் நிராகரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் இது. நிராகரிக்கப்பட்ட ஒன்றுக்காக 24 வருடங்களுக்குப் பின்பு அரசிடம் மண்டியிடும் நிலைமை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது துரதிர்ஷ்டமே.

கூட்டமைப்பு பிடிவாதப் போக்கைக் கைவிடவேண்டும். அடம் பிடிக்கக்கூடாது என்கிறார் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல.

பேச்சு வார்த்தை மேசையில் அரசுதான் பிடிவாதப் போக்கைக் கைவிட வேண்டும். அரசு அடம்பிடிக்கக்கூடாது. கூட்டமைப்பு அரசுடன் இணக்கம் ஒன்றைக் காண்பதற்கு ஆகக் குறைந்த கோரிக்கைகளையே முன்வைத்துள்ளது என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

கூட்டமைப்பின் கோரிக்கைகளில் ஒன்றான வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபை பெரும்பாலும் 'அவுட்' ஆகிவிட்டது. நீதிமன்றத் தீர்ப்பு மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. அதில் தலையிட முடியாது என்கிறது அரசு. சர்வ அதிகாரங்களையும் தம்மிடத்தே வைத்துள்ள ஜனாதிபதி இதில் தலையிட்டுத் தனது அதிகாரத்துடன் செல்வாக்கையும் பயன்படுத்த முடியும்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்ற தமிழ் மக்களின் நிலைப்பாட்டில்,அரசியல் அபிலாசைகளில் மாகாண இணைப்பு ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்பட்டது. அதனால்தான் வடக்கு, கிழக்கை மீண்டும் பிரிப்பதற்கு மிகவும் நுட்பமாகத் திட்டம் தீட்டப்பட்டது. நீதிமன்றம் மூலம் அரசியல் தலைமைத்துவத்தின் அதிகாரச் செல்வாக்குடன் செயற்படுத்தப்பட்டது.

ஆகவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களை அரசு மீண்டும் இணைக்கச் சம்மதிக்கும் என்று,செயற்படுத்த முனையும் என்று எதிர்பார்க்க முடியாது. எந்த ஒரு தீர்வும் நிலையானது அல்ல என்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாணப் பிரிப்பு நல்லதோர் உதாரணம். பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் மூலம் வடக்கு, கிழக்கில் பிரதேச சுயாட்சி முறைக்கு வகைசெய்யப்பட்ட போதிலும் அதுவும் இன்னும் செயல்வடிவம் பெறவில்லை.

கூட்டமைப்பின் மற்றைய கோரிக்கையான பொலிஸ் அதிகாரங்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு விடப்படவுள்ளது. மிகவும் குறைந்த அதிகாரங்களை வழங்கத் தெரிவுக்குழு சிபார்சு செய்யலாம்; அல்லது நிராகரிக்கலாம். மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதற்கு அரசுக்குள்ளயே கடும் எதிர்ப்பு இருக்கிறது. அவ்வாறிருக்க அரச தரப்பைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அங்கீகாரத்தை எவ்வாறு எதிர்பார்ப்பது?

கூட்டமைப்பின் இன்னொரு கோரிக்கையான காணி அதிகாரத்தை மீள் பரிசீலனை செய்ய முடிவுசெய்துள்ளதாக அரசு கூறுகிறது. மத்திய அரசும் மாகாண அரசும் சமஅதிகாரம் கொண்ட கூட்டு ஆணைக்குழு ஒன்று இதனைக் கையாளும் என்று கூறப்படுகிறது. எந்த விடயத்திலும் மாகாணசபை தனித்துத் தீர்மானம் எடுக்கமுடியாது.இதுவும் பிரகாசமான ஒன்றாகத் தென்படவில்லை.

ஆகவே, இந்த மூன்று கோரிக்கைகள் தொடர்பாகவும் அரசு நியாயத்துடன் செயற்படும் அறிகுறிகள் எதுவும் இதுவரை தெரியவில்லை. பேச்சின் வெற்றி அரசின் விட்டுக்கொடுப்பில்தான் தங்கி உள்ளது.

போர் முடிவடைந்துவிட்டதால் உண்மையான சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்று கூறமுடியாது. அதற்கான காரணிகள் கண்டறியப்பட்டு நிவிர்த்தி செய்யப்படும்போதே, உண்மையான சமாதானம் உருவாகும்,உண்டாகும். அரசு இதனை மனதில் கொண்டு செயற்பட வேண்டும்.

கூட்டமைப்பு முன்வைத்திருப்பது தமிழ் மக்களின் ஆகக் குறைந்த கோரிக்கை என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.தனது தரப்பில் விட்டுக்கொடுப்புகளை செய்வதன் மூலமே தீர்வு ஒன்றை எட்டமுடியும். மிழர் தரப்பில் விட்டுக்கொடுக்க இனி எதுவுமில்லை என்பதனை அரசாங்கம் மட்டுமன்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளார்ந்து உணர வேண்டும். அரசின் வெறும் மினுமினுப்புகளைக் கண்டவுடன் மயங்கி விடக்கூடாது.

இப்போது கிடைத்திருப்பது கடைசிச் சந்தர்ப்பம் என நினைத்து பாழ் கிணற்றில் வீழ்ந்துவிடலாகாது. தமிழ் மக்களுக்குள்ள பிறப்புரிமைகளைப் பெறுவதற்குரிய தந்திரோபாயங்களை வகுக்க தக்காரின், புத்திஜீவிகளின் ஆலோசனைகளையும் பெற்றுச் செயற்படுவதற்கு காலத்தை வாங்குவதும் ஒரு வகையில் அவசியம்.

# இலங்கையில் மீண்டும் கிளர்ச்சி ஏற்படாதிருக்க இனங்களிடையே அரசியல் சமநிலை அவசியம்

## ஐரோப்பிய நாடாளுமன்ற பாதுகாப்புச் செயலாளர்

கொழும்பு, டிச.13

சர்வதேச சமூகத்தால் இலங்கைமீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமையும் எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற பாதுகாப்புச் செயலாளர் ஜெப்ரி வேன் ஒடன், இலங்கையில் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படாதிருப்பதற்கு இனங்களிடையே அரசியல் சமனிலை தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் கடப்பாட்டை அவர்களிடமே ஒப்படைத்தல் சிறந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய எதிர்பார்ப்புக்களுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை இலங்கையில் காணக்கூடியதாக உள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவரது இலங்கை விஜயத்தின்போது அவதானித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

30 வருடங்கள் யுத்தத்தால் பாதிப்படைந்து சமாதானத்தைப் பெற்றுள்ள இலங்கைக்கு சர்வதேச சமூகத்தில் இருந்து அனைத்து உதவிகளும் கிடைக்கவேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மீண்டும் தீவிரவாதம் ஏற்படாதிருக்க இனங்களுக்கு இடையில் ஒற்றுமையும், அரசியல் சமநிலையும் விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(வ)

# வருமான வரி முற்பணக் கொடுப்பனவை அறவிடும் யாழ். இறைவரித் திணைக்களம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

வருமான வரிக்கான முற்பணக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்கான ஏற்பாடுகளை யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது என யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் பி.சிவாஜி தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2011/2012 வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான சுயவரி மதிப்பீட்டின் அடிப்படையில் வருடத்தின் காலாண்டுக்கான முற்பண வரிக் கொடுப்பனவுகளை உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி செலுத்துதல் வேண்டும்.

இந்த வரிகளின் அடிப்படையில் 15.8. 2011, 15.11.2011,15.2.2012 ஆம் திகதிகளில் காலாண்டுக்குரிய வரி கொடுப்பனவுகள் செலுத்துதல் வேண்டும். மிகுதி வரியினை 30.9.2012 க்குள் செலுத்துதல் வேண்டும்.

அதாவது, 2011/2012 ஆம் ஆண்டுக்கான வருமான வரி 1லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஆயின் அந்த வரியை ஏற்கனவே செலுத்தியிருந்ததால் காலாண்டுக்கான 1ஆம், 2ஆம், 3 ஆம், 4ஆம் ஆகிய தவணைக் கட்டணங்களில் சுயவரி மதிப்பீட்டுக் கட்டணமாக தலா 30 ஆயிரம் ரூபா செலுத்துதல் வேண்டும்.

தற்போது வரி மதிப்பீட்டு ஆண்டான 2011, 2012 முடிவடைந்த பின்னர் இந்தவரி மதிப்பீடாக ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு வரி செலுத்தியிருந்தால் ஏற்கனவே செலுத்தியிருந்த ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவைக் கழித்து மிகுதி 40 ஆயிரம் ரூபாவை 30.09.2012 க்கு முன் செலுத்துதல்வேண்டும்.

இதன் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட காலாண்டுக்கான சுயவரி மதிப் பீட்டுக் கொடுப்பனவு விவரம் யாழ். பிராந்தியத்தில் உள்ள வருமான வரிக் கோவை வைத்திருப்பவர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வருமானவரி செலுத்துவோர் உரிய காலங்களில் வரிகளைச் செலுத்தி வரிக் கொடுப்பனவுகளை மேற்கொண்டு வரும் வரித் திணைக்களத்துக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

(த-311)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை ஒருங்கிணைக்கும் வானொலி

யாழ்ப்பாணம்,டிசெ.13

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளை நேரடியாக பெற்றுக்கொள்ளும் வகையிலான வேலைத்திட்டத்தைப் பிரான்ஸிலுள்ள சி.ஆர்.ரி என்ற தனியார் வானொலி மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:- யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மிகக் கஷ்டமான நிலையில் உள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்கள் உண்மையில் கஷ்டப் பட்டவர்களா? என்பதை உறுதி செய்த பின்னர் அவர்கள் தொடர்பான விவரங்களை குறித்த தனியார் வானொலி தனது நிகழ்ச்சியில் வெளியிடுகிறது.

இதனடிப்படையில் அந்த மக்களுக்கு யாராவது உதவி செய்ய விரும்பின் அவர்களைப் பாதிக்கப்பட்ட குடும்பத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்தி அவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைக் கடந்த ஒரு மாதகாலமாக மேற்படி தனியார் வானொலி மேற்கொண்டு வருகின்றது.

இந்த வானொலி மேற்கொண்ட முயற்சியினால் நெடுங்கேணி, முழங்காவில், நாச்சிக்குடாப் பகுதிகளில் உள்ள மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-15)

# சனி. ஞாயிறு தினங்களில் கடைகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.13

நத்தார் மற்றும் புதுவருடப்பிறப்பு என்பவற்றை முன்னிட்டு எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள சனி, ஞாயிறு தினங்களிலும் மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் அனைத்து வியாபார நிலையங்களையும் திறந்து வியாபாரத்தை மேற்கொள்ளலாம் என்று யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

எனினும் குறித்த தினங்களில் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலன் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் வணிகர் கழகம் கேட்டுள்ளது.

(ங-311)

**நாளை**

கார்த்திகை 28 புதன்கிழமை 14.12.2011
திதி: சதுர்த்தி மு.இ. 9.22 வரை
நட்சத்திரம்: பூசம் மு.இ. 10.22 வரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 4.51-6.21வரை, ராகு காலம்: 12.21 - 1.51 வரை

# வைத்திய அதிகாரி எவரும் இன்றி ஊறணி இந்திராணி வைத்தியசாலை

## பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மக்கள்

வடமராட்சி,டிசெ.13
வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குள் இயங்கும் அரசினர் பிரதேச வைத்தியசாலையான ஊறணி இந்திராணி வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரியை நியமிக்குமாறு வல்வெட்டித்துறை நகர சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சைக் கோரும் தீர்மானம் ஒன்று வல்வெட்டித்துறை நகரசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நகர எல்லைக்குள் இயங்கி வரும் பல வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைக்கு பல வருடங்களாக வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஒரேயொரு வைத்தியருடனேயே வைத்தியசலை இயங்கி வந்தது.

இந்த வைத்திய அதிகாரியின் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் மாவட்ட வைத்திய அதிகாரி இன்றி வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

இதனால் வல்வெட்டித்துறை நகர மக்கள் மட்டுமன்றி இந்த வைத்தியசாலையின் சேவைகளைப் பெற்றுவரும் இன்பருட்டி, பொலிகண்டி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு ஆகிய பகுதி மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே பொருத்தமான மாவட்ட வைத்திய அதிகாரியை நியமித்து இந்த வைத்தியசாலை சீராக இயங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.- என்று அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-236)

# கிளிசீரியா மர இலையொன்றில் குரங்கு முகத்தை ஒத்த உருவம்



யாழ்ப்பாணம், டிசெ.13
மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் நின்ற கிளிசீரியா மர இலையில் குரங்கு முகத்தை ஒத்த உருவமொன்று அமைந்திருந்ததை அப்பகுதி மக்கள் மிகவும் ஆச்சரியத்துடன் பார்வையிட்டனர்.

மானிப்பாய் சேர்ச் வீதியில்உள்ள வீடொன்றில் நின்ற கிளிசீரியா மரத்தின் இலையில் குரங்கு முகம் போன்ற உருவமொன்று இருந்ததை அந்த வீட்டு உரிமையாளர்கள் அவதானித்துள்ளனர்.

குரங்கு முகச் சாயலை ஒத்ததாக இந்தச் சிறிய இலையில் உள்ள ஒருவம் பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்த உருவம் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ம-319)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 10 கணினிகள் விரைவில் கிடைக்கும்

## கல்லூரியின் அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிச.13
கல்வி அமைச்சால் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 10 கணினிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் எஸ். கே.யோகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் தகவல் தொழில்நுட்ப அறைக்கான கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதி கல்வியமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து 10 கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, எமது கல்லூரியில் தகவல் தொழில் நுட்பத்துக்கான விரிவுரையாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய விரிவுரையாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

எமது கல்லூரியைப் பார்வையிட்ட ஜெய்கா நிறுவனத்திடம் எமது கல்லூரியின் தகவல் தொடர்பாடல் பாடத்தைக் கற்பிப்பதற்கான விரிவுரையாளர் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவித்தோம்.

இதற்குக் குறித்த நிறுவனம் விரிவுரையாளர் ஒருவரை அடுத்த வருடத்தில் தொண்டர் அடிப்படையில் வழங்க முன்வந்துள்ளது.-என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-319)

# நாகர்கோவிலுக்கு இ.போ.ச.பஸ்சேவை

வடமராட்சி,டிசெ.13
சுமார் 25 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் நாகர்கோவில் பகுதிக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவ்வ ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாகர்கோவில் வடக்குப் பகுதியில் மீள்குடியமர்வு நடைபெற்றதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்களின் வசதி கருதி 755ஆம் பாதை இலக்கத்தைக் கொண்ட பஸ் சேவையை பருத்தித்துறை டிப்போ ஆரம்பித்துள்ளது.

தினமும் காலை 7.30 மணி, மதியம் 12.30 மணி, மாலை 5 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவில் வடக்குக்கு பஸ் சென்று திரும்பி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-236)

# கொழும்புத்துறையில் மின் விளக்குகள் எப்போது ஒளிரும் எனக் கேட்கும் மக்கள்

கொழும்புத்துறை,டிசெ.13
கொழும்புத்துறை வீதியில் உள்ள மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் பல இடங்களில் இரவு நேரங்களில் ஒளிராது காணப்படுகின்றன.

பாண்டியன் தாழ்வு மற்றும் கணக்கர் சந்தியிலிருந்து இலந்தைக் குளம் வீதி வரையில் பல விளக்குகள் ஒளிராமை யால் அந்தப் பகுதிகள் கடும் இருளாகக் காணப்படுகிறன.

இங்கு மின் விளக்குகள் ஒளிராது இருள் சூழ்ந்துள்ளமையால் பயணிகள் விபத்துக்களை எதிர்நோக்கும் நிலையும் தோன்றியுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் திருட்டு மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கும் இது சாதகமாக அமைந்துள்ளதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை ஆனந்தன் வடலி வீதி துண்டிச் சந்திக்கும் உம்புக்குளம் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வீதி மின் விளக்குகளும் ஒளிராது காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய மழைக் காலத்தில் இப்பகுதிகளில் இருளில் நடமாடுவது பல அசௌகரியங் களை உண்டாக்குவதால் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின் றனர். (ம-135)



சமுர்த்தி வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்றைக் கையளிக்கிறார். (ம-7)

# தற்காலிக குடியிருப்புகள்

கொழும்புத்துறை,டிசெ.13
கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புக் கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தாழ்வான நிலங்களில் குடிசைகள் அமைந்திருந்தமையால் மழை வெள்ளம் உட்புகுந்த நிலையில் சில குடும்பங்கள் அவலங்களைச் சந்தித்து வந்தன.

இந்த நிலையில் இவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் இந்தக் கூடாரங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

# பல்வேறு துறைகளிலும் சுயமாகச் செயற்பட்டு வளர்ந்துவரும் எமது மக்கள்

## யாழ்.அரச அதிபர் இமெல்டா பெருமிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.13
வறுமைக் கோட்டுக்குக் கீழ் என்ற நிலை இப்போது மாறிவிட்டது. எமது மக்கள் இப்போது பல்வேறு துறைகளிலும் சுயமாகச் செயற்பட்டு வளர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

52ஆயிரத்து 763 சமுர்த்தி பயனாளிகளில் இதுவரை ஏழாயிரம் குடும்பங் கள்வரை தமது வாழ்வில் உயர் நிலை அடைந்துள்ளன. ஏனைய 45 ஆயிரத்து 623 பயனாளி களுக்கும் வெவ்வேறு திட்டங்கள் ஊடாக உதவிகள் கிடைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தியுடன் வீடமைப்பு அவசியம். இங்கு இன்னும் 27 ஆயிரம் வரையான வீடுகள் தேவை. இது விரைவில் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். இங்கு சமுர்த்தித் திட்டங்கள் நல்ல முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. 455 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தமது பணியை மிகவும் திறமையாக முன்னெடுத்து வருகின்றார்கள். மாவட்டத்தில் வறுமையை ஒழிக்க கைகொடுக்கிறார்கள்.

ஏற்கனவே இந்தப் பணிகளில் கிடைத்த முன்னேற்றம் காரணமாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் என்ற நிலை அருகிக் கொண்டு வருகின்றது. இங்கு வாழ்வாதாரத்துக்கென 964 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. வாழ்வின் எழுச்சியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி மக்களிடையே நம்பிக்கையை உருவாக்கியுள்ளனர்.

இப்போது 29 ஆயிரம் விதவைகளும் 5 ஆயிரத்து 500 மாற்று வலுவுடையோரும் உள்ளனர். இவர்களின் வாழ்வுக்கு உதவக் கூடியதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும். இவர்களையும் சமுர்த்திக் குடும்பத்தில் உள்வாங்க வேண்டும். புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஏழ்மை, வறுமை எமது மாவட்டத்தில் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும். மிகவும் சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்தத் திட்டம் பொருளாதார வளத்தை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய ஒன்று என்பதை இன்று இடம் பெற்ற கண்காட்சியின் மூலம் ஒவ்வொருவருமே ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இங்கு செயற்படுத்தப்பட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இருந்த போதும் எல்லாவற்றிலும் பார்க்க முதன்மையான ஒன்றாக சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டம் உள்ளது.

சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தில் சுபீட்சமான வாழ்வை எட்ட முடியாதென எவரும் கூறமுடியாது.- என்றார்.(ம-7)

# யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 36.6 சதுர கிலோமீற்றர் பரப்பில் மிதிவெடி அகற்றல்

## அடுத்த ஆண்டு பணிகள் ஆரம்பிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அடுத்த ஆண்டு 36.6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மிதிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக மிதிவெடி செயற்பாட்டலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ்.மாவட்ட செயலக மிதிவெடி செயற்பாட்டலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஹலோட்ரஸ்ட், டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு, டாஸ், இராணுவத்தின் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பொறியியல் பிரிவு, சர்வோதயம் என்பன கலந்துகொண்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவால் 3.7 சதுர மீற்றர் பரப்பிலும் டாஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் 2 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும் ஹலோ ரட்ஸ் நிறுவனத்தால் 15.5 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும் கண்ணிவெடி அகற்றுதற்கு இனங்காணப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் 30 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும், ஹலோட்ரஸ் நிறுவனத்தால் 4 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும், இராணுவத்தி னரால் 8.4 சதுர கிலோமீற்றர் பரப்பிலும் கண்ணிவெடி அகற்ற இனங்காணப்பட்டுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகள் அகற்றப்படாத நிலையில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

# மீள் குடியமர்ந்துள்ள நிலையிலும் நெற்செய்கை மேற்கொள்ளாத அரியாலை கிழக்கு விவசாயிகள்

கொழும்புத்துறை,டிசெ.13

அரியாலை கிழக்குப் பகுதி விவசாயிகள் 15 வருடங்களுக்குப் பின்னர் தமது பகுதியில் மீளக்குடியமர்ந்த போதும் இந்த முறை பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் ஏது நிலையை ஏற்படுத்தித் தரவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு இடம்பெயர்ந்திருந்த நிலையிலும் கூட கட்டாக்காலி மாடுகளிடமிருந்து நெல் வயல்களைப் பாதுகாக்க முட்கம்பி வேலி அமைக்க அரியாலை விவசாய சம்மேளனம் உதவிபுரிந்தது.

இந்த முறை நாவலடி,கட்டடி, பூம்புகார் பகுதிகளில் உள்ள கட்டாக்காலி மாடுகள் பிடித்து அகற்றப்பட்ட போதிலும் அரியாலை கிழக்குப் பகுதியில் உள்ள காடுகளில் பெருக்கமடைந்துள்ள கட்டாக் காலி மாடுகள் பிடிக்கப்படவில்லை. இதனால் அவை வயல் நிலங்களுக்குள் புகுந்து அட்டகாசம் புரிவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாடுகளால் நெற்பயிர்கள் அழிக்கப்பட்டுவிடும் என்ற அச்சத்தில் இந்தப் பகுதியில் இம்முறை எவரும் விவசாயத்தை மேற்கொள்ளவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய பகுதி விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள்ளும்போது இந்தப் பகுதி விவசாயிகள் நெற் செய்கை மேற்கொள்ளாமை கவலை தருவதாகவும் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து அடுத்த முறையாவது சீரான முறையில் விவசாயத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை வீடுக்கின்றனர். (ம-135)

# வண்ணார் பண்ணைப் பகுதியில் மூளை மலேரியா தடுப்பு நடவடிக்கை

சண்டிலிப்பாய், டிசெ.13

வண்ணார் பண்ணைப் பகுதியில் மூளை மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் தடுப்பு நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

வண்ணார்பண்ணை பெரிய தம்பிரான் கோயில் பகுதியில் வசிக்கும் 18 வயது இளைஞர் ஒருவர் பிரான்சுக்குச் செல்வதற்காக மேற்கு ஆபிரிக்காவில் தங்கியிருந்த சமயம் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பியிருந்தார்.

வீட்டுக்குத் திரும்பிய அவர் தொடர்ந்தும் காய்ச்சல் இருந்தமையால் யாழ்.ஆஸ்பதிரியில் அனுமதிக்கப்பட்டார்.

சிசிச்சை பயனிக்காததைத் தொடர்ந்து இரத்த பரிசோதனை மேற்கொண்டதை அடுத்தே குறித்த இளைஞர் மூளை மலேரியாவால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவருக்கு அதற்குரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இதைத் தொடர்ந்து, குறித்த பகுதியில் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் இரத்த பரிசோதனைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ம-115)

# மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.13

ஆவரங்காலைச் சேர்ந்த முருகநாதன் குகன் (வயது-45) என்பவர் கடந்த 9 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நேற்று காலை முறைப்பாடு செய்துள்ளார் என்று பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 9 ஆம் திகதி மாலை வீட்டிலிருந்து ஜே.வி.பி. மாற்றுக் குழுவான மக்கள் போராட்டக் குழுவின் மாவட்ட அமைப்பாளர் லலித்குமார் வீராஜ் என்பவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு இவர் சென்றுள்ளார்.

அதன்பின்னர் அவரின் தொடர்பு எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர் காணாமல் போயுள்ளதாகவும் அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது மனைவி தனது முறைப்பாட்டில் தமக்கு இது வரையில் தொலைபேசி மூலம் எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ம-15)

# தென்னைச் செய்கையை ஊக்குவிக்கத் திட்டம்

வரணி, டிசெ.13

யாழ். தெங்கு பயிர்ச் செய்கைச் சபையால் இலவச தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வரணி பிரதேசத்தில் உள்ள 11 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் பிரிவு தோறும் அமைக்கப்பட்ட கப்றுக சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டவர்களுக்கு இந்தத் தென்னம் பிள்ளைகள் வழங்கப்படும் என்று இந்தச் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அங்கத்தவர்களுக்கு மேலும் ஒரு தொகுதி தென்னம்பிள்ளைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

போரால் அழிவுற்ற தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-122)

# கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் வெள்ளத்தை அகற்ற துரித நடவடிக்கை

கொழும்புத்துறை, டிசெ.13

கொழும்புத்துறை நெடுங்குளம் புதிய குடியிருப்புப் பகுதியில் தேங்கி நின்ற மழை வெள்ளத்தை அகற்ற யாழ். மாநகரசபை துரித நடவ டிக்கை மேற்கொண்டது.

கடந்த சில நாள்களாகப் பெய்த மழை காரணமாக இந்தப் பகுதியில் நீர்தேங்கி நின்றமையால் 75 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பகுதி மக்கள் யாழ்.மாநகர மேயரிடம் நேடியாக இந்தக் குறைபாட்டை எடுத்துக் கூறியதையடுத்து மழை வெள்ளத்தைக் கடலுக்குச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

'பைக்கோ' இயந்திரத்தின் மூலம் நெடுங்குளத்திலிருந்து வசந்தபுரம் வழியாக நீண்ட கால்வாய் தோண்டப்பட்டு மழை நீர் கடலுக்கு வழிந்தோட விடப்பட்டது. தற்போது இந்தப் பகுதியில் வெள்ள நீர்த் குறைவடைந்து இயல்பு நிலை தோன்றியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-135)

# பெண்களுடன் சேஷ்டை விட்ட குற்றச்சாட்டில் இளைஞர் கைது

வலி. வடக்கு டிசெ. 13

வீதியால் செல்லும் பெண்களுடன் சேட்டை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏழாலை மத்திய மகா வித்தியாலத்துக்கு முன்பாக நின்று ஒரு இளைஞர் கும்பல் நாளாந்தம் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்கள் செல்லும் பெண்களுடன் சேட்டை செய்வது வழமையாகும்.

இந்த இளைஞர் கும்பலிடையே எற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து இவர்கள் இரு பகுதியாகப் பிரிந்து கைகலப்பிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட மூன்று இளைஞர்களை சுன்னாகம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சொத்து விவரம் கோரப்படுகின்றது

வரணி, டிசெ.13

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சொத்து விவரங் கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் கோரப்பட்டு வருகின்றன.

நிதி, சொத்துக்கள், வங்கிக் கணக்கு இலக்கம், தளபாடங்கள் விவரம் மற்றும் கணினி, தொலைபேசி, காணி விவரம், அதன் உறுதி, கட்டடத்தின் அளவு, வருமான அதிகரிப்பு சாதனங்கள், அவற்றை வழங்கிய நிறுவனங்கள் விவரம், வழங்கிய திகதி போன்ற விவரங்களே இவ்வாறு கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தருக்கு அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி.ந.ரஞ்சனா கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கையொப்பம் இட்ட அறிவித்தல் கடிதம் தென்மராட்சி பிரதேச சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-122)

# புகையிலை செய்கையில் விவசாயிகள் மும்முரம்

வடமராட்சி,டிசெ.13

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள புலோலி, அல்வாய், கரணவாய், கெருடாவில் போன்ற இடங்களில் உள்ள தோட்டங்களை விவசாயிகள் பண்படுத்தி புகையிலை நாற்று நடுகையைத் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

புகையிலை நாற்று நடுகை ஆரம்பமானதைத் தொடர்ந்து புகையிலை நாற்று மேடைகளை அமைத்தோர் ஒரு நாற்றை 4 ரூபா வீதம் புகையிலைச் செய்கையாளர்களுக்கு விற்பனை செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-236)

# சுன்னாகம் பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிறைவு நிகழ்வு

சுன்னாகம்,டிச.13

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிறைவு நாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சுன்னாகம் பொது நூலகத்துக்கான இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நூலக வாசக வட்ட வெளியீடான வெள்ளிமலை சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. அத்துடன் பிரதேச ஓவிய, சிற்பக் கலைஞர் பொ.பசுபதியின் ஓவிய, சிற்பக் கண்காட்சியும், மகாகவி பாரதியார் ஆவணப்படக் காட்சியும் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து. இராதா கிருஷ்ணனும், சிறப்பு விருந்தினராக தத்துவ கலாநிதி சிவ ஸ்ரீ.க.வைத்தீஸ்வரக் குருக்களும், கௌரவ விருந்தினர்களாக ஓவிய, சிற்பக் கலைஞர் பொ.பசுபதி, சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க.இராஜமனோகரன் ஆகியோரும் கலந்து கொள்வர். மூதறிஞர் சிற்பி சரவணபவன் இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றுவார்.(ம-38)

## ஆறாத் துயருடன்
# ஆண்டு ஐந்து



தோற்றம்: 10.05.1959
மறைவு: 07.12.2006

அமரர்
## சிவசாமி ரஞ்சன்
(முன்னாள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

மலை போன்ற உங்களை
மண்ணில் சரித்து
மாண்டவர் பட்டியல் அணிவித்து
மாலையும் கழுத்துமாய்
கண்ணீர் வழிய வழி அனுப்பி வைத்து
ஆண்டு ஐந்து ஆனது
மனைவியுடன் பிள்ளைகளும் உறவும்
நீங்காத நினைவுடன்
வாசல் நோக்கி வரவை எதிர்பார்த்து
ஏங்கித் தவிக்கின்றோம்

திதி:
13.12.2011

11, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(11544)(1,6,7) குடும்பத்தினர்

# நன்றி நவிலலும்
## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அமரர்
## தம்பிப்பிள்ளை அன்னபூரணம்

கடந்த (14.11.2011) அன்று காலஞ்சென்ற எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்று உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், நாளை (14.12.2011) புதன் கிழமை அதிகாலை 4.00 மணியளவில் நடைபெறும் அந்தி யேட்டிக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் அதன் பின்னர் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளு மாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல்கடி, அல்வாய் கிழக்கு,
அல்வாய். (சி/6849)(2-6-7) - குடும்பத்தினர்.

# பால் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டு றவுச்சங்கம் பாலின் விலையை அதிகரிக்கவுள்ளது.தற்போது வட பகுதியில் இருந்து 'நெஸ்லே' நிறு வனம் பாலைக்கொள்வனவு செய்து தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதால் இங்கு பாலுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அதேசமயம் கறவைத் தீவனங்களின் விலைகளும் சந்தையில் அதிகரித்துள் ளன.

இதேவேளை யாழ்கோ நிறுவனம் பாலின் கொள்வனவு விலையை லீற்ற ருக்கு 8 ரூபாவினால் அதிகரித்து 48 ரூபாவுக்கு கொள்வனவு செய்வது எனவும் விற்பனை விலையை 12 ரூபா வால் அதிகரித்து 60 ரூபாவுக்கு விற்பனை செய்வது எனவும் தீர்மானித்துள்ளது. (ஓ-45)

# ரூ.25 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

வெற்றிலைக்கேணிப்பகுதியில் சட்டவிரோதமாக மதுபான விற்பனை யில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவர் பருத்தித் துறை பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில், நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேக நபருக்கு 25 ரூபா ஆயிரம் அபராதம் விதித் துத் தீர்ப்பளித்தார். (ந-319)

# கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு

தென்மராட்சி,டிசெ.13

கிணற்றில் தவறி வீழ்ந்த குடும்பஸ் தர் பலியானார். இந்தச் சம்பவம் சனிக் கிழமை அல்லாரை வடக்கில் இடம் பெற்றது.

அல்லாரையைச் சேர்ந்த இராச துரை சுகுமார் (வயது-54) என்பவரே மரணமானவராவார். மரணம் தொடர் பாக பொலிஸார் நீதிவானிடம் அறிக் கை தாக்கல் செய்ததையடுத்து மரண விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக் கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பணித்தார்.

இந்தச்சடலமும் அன்றையதினம் கொடிகாமம் கச்சாய் வீதியில் கிணற்றில் வீழ்ந்து பலியான சுந்தரம் வள்ளியம்மை (வயது72) என் பவரின் சடலமும் சாவகச்சேரி வைத் தியசாலைக் குக் கொண்டு வரப் பட்டு நேற்று முன் தினம் உடற்கூற் றுப் பரிசோதனை யின் பின்னர் சடலங் கள் கையளிக்கப் பட்டன. (ஓ-207)


இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல்
சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic

Care

தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 14,15,16 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது. வவுனியா-18,19 ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு-021-2220288.



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.



Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic

Care

முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 14,15,16 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது.
வவுனியா- 18,19 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1980 இல் பிறந்த ஆயிலியம் , லண்டன் B.Sc,M.Sc படித்த Soft Ware Analyst ஆக லண்டன் PR உடன் வேலை செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு: 0779066452 Lingam

## கடைக்கு வேலையாள்கள் தேவை

**சிறி கண்ணன் ஸ்ரோர்**

No-1, பலாலி வீதி, திருநெல்வேலி.

01. சிட்டை எழுதுநர் (பெண்பிள்ளை)
02. விற்பனையாளர் (ஆண்)

தொடர்பு : 0777769231

Note (திருநெல்வேலி சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

# கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் சக ஊழியரான
**மார்க்கண்டு உதயகுமார்**
அவரது மனைவி
**உதயகுமார் வசந்திமாலா**
அவர்களது அகால மரணத்தையிட்டு துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உப தபாலகம் , புத்தூர். உபதபாலதிபரும், ஊழியர்களும்.

(11499)(3,6,7)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை
திருமதி கௌரிமலர் ரவிக்குமார் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி பாக்கியம் செல்லையா**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ். கோப்பாய் தெற்கு, கந்தவேள் த.க.பாடசாலை.

(11542)(3,6,7)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் சிவசுப்பிரமணியம் (கடைமணியம்)



கரவெட்டி மத்தியை பிறப் பிடமாகவும், கரவெட்டி கிழக்கு, கோவிற்சந்தையை வசிப்பிடமா கவும் கொண்ட அம்பலவாணர் சிவசுப்பிர மணியம் (கடை மணி யம்) 11.12.2011 ஞாயிற்றுக்கிழமை யன்று சிவபதமடைந்தார்.

அன்னார் அம்பலவாணர்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நல்லதம்பி- தெய் வானை தம்பதியரின் அன்பு மருமகனும் வதனாவின் அன் புக் கணவரும், பவிதா (கனடா), கவிதா, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரி, கலாநிதி, கலாஞானி, காலஞ்சென்ற விம லாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பால்ராஜ், பாக்கியமூர்த்தி (சுதன் வெற்றிலைக்கடை, கொடிகாமம்) ஆகியோரின் மாமனாரும், ஆரணி, அஸ்வினி, மதுஷிகா, தாமிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வதனா (மனைவி), கவிதா (மகள்), சுதன் (மருமகன்),விக்னேஸ்வரன் (மகன்).

(11543) (2-6)

# யாழ்ப்பாணம் மாநகர சபை
## ஆதனவரி அறிவித்தல் -2011

2011 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியை 2011.12.30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள் - 15%
ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2011 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறித்த நிலுவைத் தொகையைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு XII 252 [1] இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள் கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் 'மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்' என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன். திருமதி யோ.பற்குணராசா,
(சி/6858)(3,6,7) முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# குற்றம் புரிந்த முன்னாள் படையினரை உடன் கைது செய்வதற்கு நடவடிக்கை

## இராணுவப் பேச்சாளர் நிஹால் ஹப்பு ஆராச்சி தகவல்

கொழும்பு,டிசெ.13

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

முப்படை மற்றும் பொலிஸைச் சேர்ந்த முன்னாள் உத்தியோகத்தர்களில் சிலர் நாட்டில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளனர்.

இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த இருபத்தைந்து படை உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தநிலையில் அவர்களை கைது செய்வதற்காக படையினர்,பொலிஸாரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களே அதிகளவான குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. -

தங்கச்சங்கிலி அறுத்தல் உள்ளிட்ட சிறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 475 முன்னாள் படைச் சிப்பாய்கள் பற்றிய தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன - என்றார். (ச)

# வடக்கு, கிழக்கு பாதுகாப்புத் தகவல்களை ஜப்பானுக்காகத் திரட்டி வந்த அதிகாரிகள்

## புலனாய்வுப் பிரிவிடம் சிக்கிய இரகசிய அறிக்கை

கொழும்பு,டிசெ.13

வடக்கு,கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஜப்பான் இரகசியத் தகவல்களை திரட்டி வந்துள்ளமை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக இலங்கையின் முன்னாள் அரச அதிகாரி ஒருவரினால் ஜப்பானுக்கு அனுப்பப்பட்ட மிகவும் நம்பகமான புலனாய்வு அறிக்கை ஒன்று இலங்கை அரச புலனாய்வுச் சேவையினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே இரு முன்னாள் அரச அதிகாரிகள் இந்த இரகசியத் தகவல்களை ஜப்பானுக்கு வழங்கி வந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அதிகாரிகள் அரசியல், பொருளாதார, மற்றும் பாதுகாப்புத் தொடர்பான இரகசியத் தகவல்கள் அடங்கிய அறிக்கைகளை ஜப்பானிய அரசுக்கு அனுப்பி வந்துள்ளனர்.

இந்த அதிகாரிகள் இருவரும் ஜப்பானில் இருந்து நிதியுதவி பெற்றுவரும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் மூத்த ஆலோசகர்களாகப் பணியாற்றி வருகின்றனர் என்று சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

# பஸ் விபத்தில் 29 பயணிகள் காயம்

கொழும்பு,டிசெ.13

இரத்தினபுரி பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 29 பயணிகள் காயமடைந்துள்ளனர். மொனராகலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த இந்த பஸ், இரத்தினபுரி பகுதியில் அமைந்துள்ள மாணிக்கக்கல் விற்பனைநிலையமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பயணிகள் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)



களனி பாலம், ஹங்வெல்ல பகுதிகளில் பிளாஸ்ரிக் பெட்டிகளில் மரக்கறி, பழங்களை ஏற்றிச் செல்லாத 40 லொறிகள் நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் நடவடிக் கையால் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

# மக்களுக்கு சம உரிமைகள் வழங்குதே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாகும்

## சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.13

மக்களுக்கு சம உரிமை மற்றும் சம சந்தர்ப்பம் என்பவற்றை உறுதிப்படுத்தும்போதே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என்று ஜே. வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் இன்று பொதுமக்களின் உரிமைகள் மீறப்படுகின்றன; அவர்களின் சுதந்திரம் மதிக்கப்படுவதில்லை; மக்களுக்கு உரிய இருப்பிடம் மற்றும் உணவு வழங்கப்படுவதில்லை.

இலங்கையில் இன்று அரசியல் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

சிறந்த கல்வி, தொழில் என்பன கிடைக்கவில்லை. எனவே அனைத்து மக்களும் இணைந்து அரசுக்கு தக்கபாடம் புகட்ட வேண்டும்.

இலங்கையில் தொடரும் வன் முறைகளுக்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும்.

பேச்சு சுதந்திரம் மறுக்கப்படுவதன் மூலம் அரசு தமது கடமைகளில் இருந்து விலகியுள்ளமையை உணரமுடிகிறது - என்றார். (ச)

# மஹவ்வ வரையே ரயில்சேவை

கொழும்பு - அநுராதபுரத்திற்கு இடையிலான ரயில் சேவை மீள் அறிவித்தல்வரை மஹவ்வ வரை மட்டுப்படுத் தப்பட்டுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. தம்புத்தேகம பிரதேசத்தில் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளதால் இவ்வாறு ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ள தாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# பிளாஸ்ரிக் பெட்டிகளில் மரக்கறியை ஏற்றிச் செல்லாத லொறிகள் தடுப்பு

## நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தகவல்

கொழும்பு,டிசெ.13

மரக்கறி மற்றும் பழங்களை பிளாஸ்டிக் பெட்டிகளில் ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற கட்டளை நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த பின் நேற்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் மரக்கறி மற்றும் பழங்களை பிளாஸ்ரிக் பெட்டிகளில் ஏற்றிச் செல்லாத 40 லொறி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

களனிப் பாலம் மற்றும் ஹங்வெல்ல ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்த லொறிகள் கைப்பற்றப்பட்டன.

லொறியுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ளதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பைகளில் மரக்கறி மற்றும் பழங்களை இட்டு லொறியில் ஏற்றிச்செல்லும்போது அதில் 25 வீதமானவை சேதமடைவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம் வருடத்திற்கு 20 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# பிளாஸ்ரிக் பெட்டி சட்டத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு,டிசெ.13

சாக்குகளில் மரக்கறி, பழங்கள் என்பவற்றை ஏற்றிச் செல்வதை தடை செய்து நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ள பிளாஸ்ரிக் பெட்டி சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# நாட்டில் நீதி நிலைநாட்டப்படுகிறதா? சந்தேகமே என்கிறார் ஹிருனிகா



கொழும்பு,டிசெ.13

நாட்டில் நீதி நிலை நாட்டப்படுகின்றதா என்பது சந்தேகமே என்று அண்மையில் படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திரவின் புதல்வி ஹிருனிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 12ம் ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தாவது:

நீதி, நேர்மை குறித்து எந்த நாளும் பேசப்படுகிறது. எனினும் அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது சந்தேகமாகவே காணப்படுகின்றது.

அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் நீதி நலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். தற்போதைய அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைக்க வேண்டுமாயின் இலங்கையர் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

இதேவேளை மீண்டும் இடதுசாரி அரசியல் பிரவாகம் ஒன்றை உருவாக்க ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்- என்றார். (ச)

# நாட்டு மக்களது விவரங்களை திரட்டும் பணியில் படையினர்

கொழும்பு,டிசெ.13

நாட்டில் உள்ள அனைத்து மக்களினதும் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கை ஒன்றை படையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

புவிசார் குடிமக்கள் தகவல் முறைமைத் திட்டம் என்ற பெயரில் படையினர் இந்தத் தகவல்களை திரட்டவுள்ளனர்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ், ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையமும் இலங்கை இராணுவமும் இணைந்து இந்தத் தகவல் திரட்டும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளன.

இந்தத் திட்டம் தென்கிழக்காசியாவிலேயே இலங்கையில்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இலங்கையில் வாழும் அனைத்து மக்கள் பற்றிய தகவல்களையும் எண்முறை அடிப்படையில் உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டம் தற்போது கம்பகா மாவட்டத்தில் முன்னோடியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இலங்கை இராணுவத்தின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் கேணல் திரான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் தனிப்பட்ட விவரங்களை மட்டும் கொண்டதல்ல. இடம்சார் தகவல்களையும் கொண்டிருக்கும்.

இந்த விவரங்களைத் திரட்டுவதற்கு களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 140 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உயர்மட்ட அனுமதி கிடைத்துள்ளதால் விரைவில் ஏனைய மாவட்டங்களிலும் தகவல் திரட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

இந்த திட்டம் நிறைவடைந்ததும், திரட்டப்பட்ட தகவல்களில் முக்கியமானவை அரச நிறுவனங்களுக்கும், ஏனைய இராணுவ அமைப்புகளுக்கும், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

உதயன்
13 டிசெம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# கைப்பற்றிய விமானத்தை திருப்பித்தரப் போவதில்லை

## ஈரான் ராணுவம் திட்டவட்டம்

டெஹ்ரான், டிசெ.13

நாங்கள் கைப்பற்றி வைத்துள்ள அமெரிக்காவின் ஆளில்லாப் போர் விமானத்தை திருப்பித் தர முடியாது என ஈரானின் புரட்சிப் படை திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஆப்கானிஸ்தான் எல்லையில் இருந்து 225 கிலே மீற்றர் தொலைவில் ஈரானுக்குள் அமெரிக்காவின் ஆளில்லா போர் விமானம் ஒன்று பறந்து கொண்டிருந்ததாகவும் அதைச் சிறிதளவு தாக்கியதன் மூலம் தரையிறக்கி விட்டதாகவும் ஈரான் தெரிவித்திருந்தது. தொடர்ந்து கடந்த 8ஆம் திகதி, அந்த விமானத்தை ஈரான் அதிகாரிகள் சிலர் பார்வையிடும் வீடியோவையும் வெளியிட்டது.

இந்நிலையில் ஈரான் இராணுவப் படைத் துணைத் தளபதி உசேன் சலாமி நேற்று வெளியிட்ட அறிக்கையில், ''ஈரானின் வான்வெளிக்குள் அமெரிக்கப் போர் விமானம் நுழைந்தது போரைத் தூண்டும் நடவடிக்கை. இதன் விளைவுகள் மோசமாக இருக்கும். எனினும் இந்த விமானத்தை நாங்கள் அமெரிக்காவிடம் திருப்பிக் கொடுக்கப் போவதில்லை'' எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஆர்.க்யூ.-170 ரக ஆளில்லா போர் விமானம் ஒன்று காணாமல் போனதை ஒப்புக் கொண்ட அமெரிக்க அதிகாரிகள், அந்த விமானத்தை சுட்டோ, மின்னணுத் தொழில்நுட்பம் மூலமோ, கணினித் தொழில்நுட்பம் மூலமோ ஈரான் தரையிறக் கியிருக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். ஆனால், எப் படி அந்த விமானத்தைத் தரையிறக்கினர் என்பதைக் கூற மறுத்த சலாமி, ''ஈரா னுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள தொழில்நுட்ப இடைவெளி குறைவானதுதான்'' என்றார். (ந)

# அதிபர் சர்தாரிக்கு லண்டனில் சிகிச்சை



இஸ்லாமாபாத், டிசெ.13

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரிக்கு லண்டனில் சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. லேசான மாரடைப்புக்காக டுபாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சர்தாரியின் உடல் நிலை ஸ்திரமாக உள்ளதாக டுபாய் மருத்துவமனையின் மருத்துவர்கள் தெரிவித்தனர். எனினும் அவரது முகத்தில் வாதநோய் தாக்கியதாகவும் அதற்காக அவரை லண்டன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லத் திட்டமிட்டிருப்பதாகவும் சர்தாரியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

56 வயதான சர்தாரிக்கு லேசான மாரடைப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக அவரது மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு முகத்தில் பக்கவாத நோய் தாக்கியது. இதனால் அவருக்கு பேச்சுப் பயிற்சி தேவைப்படுவதாகவும் அதற்காக அவர் மேலும் சிறிது காலம் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற வேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் சர்தாரிக்குப் முகத்தில் பக்கவாதம் ஏற்பட்டதால் அவர் நிலைகுலைந்து போய் விட்டதாக 'தி நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அவரது உடல் நிலை ஸ்திரமாக உள்ளதாக அதிபரின் செய்தித் தொடர்பாளர் பர்கத்துல்லா பாபர் 'கல்ஃப் நியூஸ்' செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.(ந)

# மற்றுமோர் அணு உலையில் கதிர் வீச்சுக் கசிவு

டோக்கியோ, டிசெ.13

ஜப்பானில் உள்ள மற்றுமொரு அணு உலையில் இருந்து கதிர் வீச்சுக் கசிவு ஏற்பட்டுள்ளதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

ஜெங்காய் என்ற இடத்தில் உள்ள அணு உலைகளைக் குளிர்விக்கும் சாதனங்களில் இருந்து வெளியேறிய 1.8 தொன் தண்ணீரில் கதிர்வீச்சு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இருப்பினும் பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவித்துள்ள போதிலும் ஜெங்காய் பகுதி மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். (ந)



தான்சானியா நாட்டில் நடைபெற்ற அந்நாட்டின் 50ஆவது சுதந்திரதின விழா அணிவகுப்பில் அதிபர் ஜக்கயாகிக்வேட்டி கலந்து கொண்டார்.

# நைஜீரியாவில் குண்டு வெடிப்பு

நைஜீரியாவின் ஜோஸ் நகரில் அடுத்தடுத்து இடம்பெற்ற 3 குண்டுவெடிப்புக்களில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் மாகாணப் பேச்சாளர் பாம் அயுபா தெரிவித்ததாவது;

போகோ ஹராம் என்னும் கடும் போக்கான இஸ்லாமிய குழுவொன்றினால் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ரியல் மட்ரிட் - பார்சிலோனா அணிகளுக்கு இடையில் இடம்பெற்று கொண்டிருந்த கால்பந்துப் போட்டி ஒன்றைக் காண்பதற்கு மக்கள் கூடியிருந்த இடங்களில் இக்குண்டுகள் வெடித்துள்ளன .நான்காவது குண்டும் அங்கு வைக்கப்பட்டிருந்த போதும் அது வெடிக்கவில்லை என்றார்.

பல இனவாதக் குழுக்கள் நைஜீரியாவின் ஜோஸ் நகரைத் தமது கட்டுக்குள் கொண்டுவருவதற்காகக் கடுமையாகச் சண்டையிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ந)

# கொங்கோ ஜனாதிபதி நான்தான் எதிர்கட்சித் தலைவர் அறிவிப்பு

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளரான ஜோசப் கபலா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் எடின்னி ஷிசேகேடி தன்னைத் தானே ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டுள்ளார்.

இந்தத் தேர்தலில் 2001 இலிருந்து ஜனாதிபதியாகப் பதவி வகித்து வரும் ஜோசப் கபலா 49 சதவிகித வாக்குகள் பெற்றதாகவும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எடின்னி ஷிசேகேடி 32.3 சதவிகித வாக்குகள் பெற்றதாகவும் கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

இந்த முடிவை நிராகரித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் எடின்னி ஷிசேகேடி, தன்னைத் தானே ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து எடின்னி ஷிசேகேடி கூறுகையில்;

இந்த முடிவு மக்களைக் கோப மூட்டியுள்ளது. இதை நான் நிராகரிக்கிறேன். இப்போதிலிருந்து நானே ஜனாதிபதியாகப் பதவியேற்கிறேன். என்னைத் தொடர்ந்து ஊக்குவித்து வரும் சர்வதேச சமூகத்திடம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கூறுமாறும், கொங்கோ மக்களின் இரத்தம் மீண்டும் சிந்தப்படாமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார். (ந)

# பாகிஸ்தானிடம் இருந்து தீவிரவாத மிரட்டல்கள்

## கவலை தெரிவிக்கிறார் ஹிலாரி

வாஷிங்டன், டிசெ.13

பாகிஸ்தான் மண்ணிலிருந்து தொடர்ந்து வரும் தீவிரவாத மிரட்டல்கள் கவலை அளிப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்தார்.

ஆப்கனில் நிகழும் தீவிரவாதத் தாக்குதல்களுக்குப் பாகிஸ்தானே காரணம் என்ற ஆப்கன் அதிபர் ஹமீத் ஹர்சாயின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக பிரஸல்ஸ் நகரில் செய்தியாளர்களிடம் ஹிலாரி பேசியுள்ளார். இதன்போது அவர் மேலும் பேசியதாவது;

தீவிரவாத இயக்கங்களை எதிர்கொள்வதற்குக் கூட்டாக இயங்க வேண்டியதன் அவசியத்தைப் பாகிஸ்தானுக்கு அவ்வபோது விளக்கி வருகிறோம். ஏனெனில் அந்த அமைப்புகள் முதலில் பாகிஸ்தானுக்கும், ஆப்கனுக்கும்தான் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

தீவிரவாதிகளை எதிர்கொள்வதற்குப் பாகிஸ்தான், ஆப்கன், நேட்டோ நேசப் படைகள் ஆகிய அனைத்தும் கூட்டாகச் செயற்படுவதுதான் சிறந்த வழி என்று உறுதியாக நம்புகிறோம். அதைத்தான் செய்தும் வருகிறோம். ஆப்கனின் பல பகுதிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கண் டுள்ளோம். பாதுகாப்புப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் ஆப்கன் படைகள் சீராக வளர்ந்துள்ளன. ஆப்கனின் 50 சதவீத மக்களுக்கான பாதுகாப்பை அந்நாட்டு படைகளே உறுதி செய்யும். தலிபான்களின் வீச்சையும், முன்னேற்றத்தையும் நிறுத்தியுள்ளோம். அதிகமான ஆப்கனியர்கள் பாதுகாப்பாகவே வாழ்கிறார்கள் என்று ஹிலாரி தெரிவித்தார்.



அத்துடன் பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி ஏற்படப் போவதாகக் கூறப்படும் யூகங்களுக்கு ஆதாரமில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ந)

# அமெரிக்க விமானம் நுழைந்தால் சுட்டுத்தள்ள பாகிஸ்தான் முடிவு

இஸ்லாமாபாத் டிசெ.13

அத்துமீறி நுழையும் அமெரிக்க விமானங்களை அனுமதியின்றிச் சுட்டு வீழ்த்த பாகிஸ்தான் ராணுவம் முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தானில் ராணுவ முகாம் மீது அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை கடந்த மாதம் 26ஆம் திகதி நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தான் வீரர்கள் பலியாகினர். இதற்கு பாகிஸ்தானில் அனைத்து தரப்பிடமிருந்தும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து பலுசிஸ்தானில் உள்ள ஷாம்சி விமானத் தளத்தில் இருந்து அமெரிக்கப் படை வெளியேற 15 நாள் கெடு விதித்தது பாகிஸ்தான். இதையடுத்துக் கெடு விதிக்கப்பட்ட கடைசி நாளான நேற்று அமெரிக்கப் படை முற்றிலும் வெளியேறியன.

இதற்கிடையே, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவை மாற்றிப் புதிய பாதுகாப்புக் கொள்கையைப் பாகிஸ்தான் ராணுவம் வகுத்துள்ளது. அதில் இனி நேட்டோவின் ஆளில்லா விமானம் பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தால் எந்தவொரு அனுமதியுமின்றிச் சுட்டு வீழ்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந)

# மெக்சிக்கோ பூகம்பத்தில் பலர் சாவு

மெக்சிக்கோ டிசெ.13

மெக்சிக்கோ நாட்டின் தலைநகரில் நேற்றுமுன்தினம் பயங்கர பூகம்பம் தாக்கியது. ரிச்டர் அளவில் 6.5 எனப் பதி வாகி இருந்த இந்தப் பூகம்பத் தில் 11 வயது சிறுவன் உள்பட 2 பேர் பலியாகி விட்டனர் என்று தகவல்கள் கூறின. ஆனால் பலி எண்ணிக்கை கூடுதலாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மெக்சிக்கோ தலைநகரில் இருந்து சுமார் 133 கிலோ மீற்றர் தொலைவில் வடக்கே பூமிக்கு அடியில் 65 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்தப் பூகம்பத்தின் அளவு ஆரம்பத்தில் 6.7 ஆக இருந்தது. அடுத்த 2 நிமிடங்களில் இது 6.5 ஆகக் குறைந்தது என்று மெக்சிக்கோ பூகம்ப ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் பூகம்பத்தால் பெரிய அளவுக்குச் சேதம் இல்லை. இருந்தபோதிலும் எங்கேயாவது சேதம் ஏற்பட்டிருந்தால் உடனடியாகத் தெரிவிக்கும்படி அந்த நாட்டு அதிபர் பெலிபிகால் டிரோன் தெரிவித்துள்ளார். (ந)

# இலங்கையை குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் பலம் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமே இருக்கின்றது!

## கனேடிய மனித உரிமை மையம் வலியுறுத்து

கொழும்பு டிசம்பர் 13

"இதுவரை நடந்தவற்றுக்கு இலங்கை அரசைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றும் பலம், தகுதி என்பன புலம்பெயர்ந்த தமிழர்களிடமே இருக்கிறது. அவர்கள் அதனைச் செய்யாவிட்டால் மீதமிருக்கும் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போதும் உலகம் மௌனமாக இருப்பதற்கு வழி செய்தவர்களாக புலம்பெயர்ந்த தமிழர்களே மாறிவிடுவார்கள்" என்று கனேடிய மனிதஉரிமை மையத்தில் வலியுறுத் தப்பட்டுள்ளது.

அதேவேளை, கனேடியப் பிரதமர் ஹார்ப்பர் தலைமையிலான அரசானது இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை செலுத்துகின்றது என்றும், மனிதவுரிமைகளை மதிக்காத எவரையும் இனிவரும் காலங்களில் கனடா கண்டிப்பான அணுகுமுறையுடனே நடத்தும் என்றும் கனேடிய விளையாட்டுத் துறை அமைச்சரான பால் கோசல் தெரிவித்தார்.

கனேடிய மனிதவுரிமை மையத்தால் நடத்தப்பட்ட வருடாந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் உரையாற்றிய பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளரான பீற்றர் சில்வமன் கூறியவை வருமாறு:-

உலகம் எப்போதுமே ஒரு துன்ப நிகழ்வு இடம்பெறும் போது அது மீண்டும் இடம் பெறாது என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தாலும்கூட திரும்பவும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியவில்லை என்றும், யூதர்கள் 1940 களில் பட்ட துன்பத்தையொத்த ஒரு நிலையில் ஈழத் தமிழர்கள் இருப்பதை நன்கு உணர்ந்தே கனடிய மனிதவுரிமை மையத்துடன் இணைந்து செயற்பட தான் ஒத்துக் கொண்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

தனது மனைவியும் யூத இனத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர் நினைவுகூர்ந்தார்.

இதுவரை நடந்தவற்றுக்கு இலங்கை அரசைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் பலம், தகுதி என்பன புலம்பெயர்ந்த தமிழர்களிடமே இருக்கிறது என்றும் அவர்கள் அதனைச் செய்யாவிட்டால் ஏனைய தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போதும் உலகம் மௌனமாக இருக்க வழிசெய்தவர்களாக புலம்பெயர்ந்த தமிழர்கள் மாறிவிடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகத்தின் போக்கை மாற்றுவதற்கு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு இன்று தேவையானது கனேடிய மனிதஉரிமைமையம் போன்ற ஒரு தலைமையும், உலகை வெல்லக் கூடிய ஒரு படிமுறையான சாதக வேலைத் திட்டமுமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

கனடாவில் இருக்கும் பதின்ம வயதைக் கடந்த தமிழர்கள் ஆளுக்கு 50 ரூபா வீதம் இதற்காக அன்பளிப்புச் செய்தாலே ஆகக் குறைந்தது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழின ஆண், பெண்களிடமிருந்து எவ்வளவு நிதிகிடைக்கும் என்பதை கருத்தில்கொண்டு செயலாற்ற வேண்டும் எனவும்,

இலங்கை போன்ற நாடுகளுக்கு எதிரான படிமுறைத் திட்டங்களை எடுத்துச் செல்வதற்கு தேவையான முதன்மைக் காரணி பணமே என்றும், யூதர்கள் தங்கள் நாட்டுக்குச் செய்தது போல கனேடியத் தமிழர்களும் ஒன்றுபட்டு, ஒருமித்து இலங்கை அரசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த ஆவன செய்து, இனி இருக்கும் ஈழத் தமிழ்ச் சந்ததியையாவது காப்பாற்ற உதவ வேண்டுமென் றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

கனடிய மனித உரிமை மையமானது www.chrv.ca இலங்கை ஆட்சிபீடத்துடன் கனேடியத் தமிழர்களின் பிரதிநிதிகளாக ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காக அழுத்தம் கொடுத்துப் பேசக்கூடிய இராசதந்திர அமைப்பாக மாறவேண்டும் என்றும், அதுவே ஈழத்தமிழர்களின் உச்சக்கட்ட அரசியல் சாணக்கியம் என்றும் தெரிவித்த அவர் அத்தகைய அழுத்தமே மீதமிருக்கும் ஈழத்தமிழர்களை எழுச்சிபெற வைக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பற்றிக் பிரவுண் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(ம-சி)

## டெங்கைக் கட்டுப்படுத்த பாகிஸ்தானிய குழு இலங்கைக்கு

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விளக்கங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு பாகிஸ்தானிய வைத்திய குழு ஒன்று இலங்கைக்கு வந்துள்ளது.இக்குழுவில் சுமார் 60 பேர் வரையில் அடங்கி யுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கையை வந்தடைந்த இக்குழுவினர் இன்று முதல் தொடர்ந்து 10 நாள்களுக்கு டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான விரிவான விளக்கங்களை பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இந்த நிலையில் ஒக்டோபர் மாதம் இலங்கையைச் சேர்ந்த வைத்திய குழு ஒன்று பாகிஸ்தானின் லாகூர் மற்றும் பஞ்சாப் பகுதிகளுக்குச் சென்று டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விளக்கங்களை அங்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-சி)

## புதையல் தோண்ட வந்த இருவர் கைதாகினர்

அனுராதபுரம், டிசெ.13

புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தும் பொருள்களுடன் பதவிய, இஸன்னாவ பிரதேசத்தில் வைத்து நேற்று முன்னாள் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரையும் சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் புதையல் தோண்டுவதற்காக வந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் இவர்கள் இருவரும் பொலிஸாரிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக பஸ்ஸில் பதவிய பகுதியை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-ரி)

## உலக காலநிலை ஐ.நா.மாநாடு புதிய உடன்பாட்டுடன் நிறைவு

கொழும்பு, டிசெ. 13

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடந்துவந்த உலகப் பருவநிலை தொடர்பான ஐ.நா. மாநாடு, உலக நாடுகள் இடையில் புதிய உடன்பாடு ஒன்று எட்டப்பட்ட நிலையில் முடிவுக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக மாநாட்டின் தலைவர் கருத்துக் கூறுகையில் நாளைய தினத்தை காப்பற்றியிருக்கிறது இன்றைய தினம் என்று கூறியுள்ளார்.

வெப்பவாயு வெளியேற்றத்தைக் குறைப்பது தொடர்பில் உலக நாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு புதிய ஒப்பந்தத்தை எட்டுவதற்கான பேச்சுகள், பிறக்கவுள்ள புதிய வருடத்தின் ஆரம்பத்திலேயே இடம்பெறும். இது தொடர்பான உடன்பாடும் எட்டப் பட்டுள்ளது.

விமர்சனத்துக்கு ஆளாகி வந்த மாநாட்டுப் பிரதிநிதிகள் கடைசியில் ஒரு வழியாக பருவநிலை மாற்றத்தை தடுப்பதில் உள்ள கடினமான அரசியலை விளங்கிக்கொண்ட வர்களாய் செயலில் இறங்கினார்கள்.

ஐ.நா. பருவநிலை மாநாட்டின் செயல் இயக்குநரான கிறிஸ்டியானா ஃபிகியுவர், இந்த ஒப்பந்தத்தை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய டர்பன் உடன்பாடு, நாடுகள் அனைத்தும் கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தக்கூடிய ஒப்பந்தமல்ல என்றாலும், எந்த ஓர் அரசாங்கமாவது அரசியல் மனோதிடத்துடன் அந்த பாதையில் செல்ல விரும்பினால், அவர்களால் செல்ல முடியும் என்று இந்த உடன்பாடு கதவுகளைத் திறந்துவைத்துள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## ஜேர்மனியில் எழுச்சியுடன் நடைபெற்ற அன்ரன் பாலசிங்கத்தின் நினைவுதினம்

கொழும்பு, டிச.13

தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசத்தின் குரல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 5ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை ஆறு மணியளவில் ஜேர்மனி வூப்பெற்றால் நகரில் மிகவும் எழுச்சியாக நடைபெற்றது.

நிகழ்வில் பொது ஈகச்சுடரை ஜேர்மனியத் தமிழ் இளையோர் அமைப்பைச் சேர்ந்த செல்வன் சிந்துஜன் முருகையா ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தேசத்தின் குரலின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அணிவகுத்துவந்த தமிழ் உறவுகள் மலர்வணக்கத்துடன் கூடிய சுடர்வணக்கத்தையும் செலுத்தினர்.

அதன்பின்பு இசைவணக்கத்துடன், நடுகல்பூமி இறுவட்டைத் தயாரித்த இசைக் கலைஞருக்கான மதிப்பளிப்பு



நிகழ்வுகள் நடைபெற்றன. எழுச்சி நடனங்களும் இடம்பெற்றன.

இறுதியாக தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் விட்டுச் சென்ற அரசியல் பணியினை புலம்பெயர் தமிழ் உறவுகள் அனைவரும் இணைந்து முன்னெடுப்போம் என்ற உறுதி மொழியோடு நிகழ்வு நிறைவு பெற்றது. (ம-சி)

## இலங்கை பெண் கொலையா? குவைத் தூதரகம் மறுப்பு

குவைத்தில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என கடந்த சில நாள்களுக்கு முன் ஊடகங்களில் வெளியான செய்தி முற்றிலும் பொய்யானதென குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் பெண் கொலை செய்யப்பட்டார் என எவ்வித தகவல்களும் தங்களுக்கு பதிவாகவில்லை என்றும் தூதரகம் அறிவித்துள்ளது. (ம-சி)

## போலி நாணயத்தாள் அச்சடிக்கும் இடத்துக்கு அனுமதியின்றிச் சென்ற இரு பொலிஸார் கைது

கொழும்பு, டிச.13

உயர் அதிகாரிகளிடம் அனுமதிபெறாது போலி நாணயத்தாள்களை அச்சிடுவதாகக் கருதப்பட்ட இடமொன்றுக்குச் சென்ற இரண்டு பொலிஸாரை அநுராதபுரம் பொலிஸ் உயர் மட்டக்குழு கைதுசெய்துள்ளது.

கல்நேவ பிரதேசத்திலுள்ள சந்தையொன்றில் போலி நாணயத்தாள் அச்சிடப்படுவதாக க் கூறிசென்ற இந்த இரு பொலிஸாரும் போலி நாணயத்தாள்களைக் கண்டுபிடிக்காது பொலிஸ் நிலையம் திரும்பி யுள்ளனர்.

இதையடுத்து மேலதிகாரிகளிடம் அனுமதிபெறாமல் தன்னிச்சையாகச் செயற்பட்ட குற்றத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இச்சந்தேகநபர்கள் இருவரும் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமை புரிபவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-சி)

## கனடாவில் ஒருவர் குடியுரிமை பெறுவதற்கு இரண்டு ஆண்டுகள் தங்கியிருக்க வேண்டும்

கொழும்பு, டிசெ. 13

கனடாவில் ஒருவர் குடியுரிமை பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளாவது தங்கியிருக்க வேண்டும் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

கனடாவில் சட்டத்திற்குப் புறம்பாக சுமார் 6 ஆயிரத்து 500 பேர் நூறு நாடுகளில் இருந்து வந்து தங்கியிருப்பதாக கனடா அரசு தெரிவித்துள்ளது.


இந்த ஏமாற்று வேலையை கனடா மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கனடாவின் புலம்பெயர்வுத் துறை அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்துள்ளார்.

கனடாவின் குடியுரிமை விற்பனைக்கு இல்லை. மோசடியாகக் குடியுரிமை பெற்றவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள் என்று எச்சரித்த கென்னி 2 ஆயிரத்து 100 பேர் சட்டத்துக்குப் புறம்பாகவும், 4 ஆயிரத்து 400 பேர் மோசடியாகவும் குடியுரிமை பெற்றுள்ளனர் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

கனடாவில் ஒருவர் குடியுரிமை பெற இரண்டு ஆண்டுகளாவது கனடாவில் தங்கியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறு தங்காதவர்கள் குடியுரிமை பெற்று இருப்பதை காவல்துறையும் புலம் பெயர்வுத் துறை அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து அவர்களின் குடியுரிமையை பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். கடந்த 1867ஆம் ஆண்டு முதல் கனடாவில் குடியுரிமை பறிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை 66 தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் மூலம் "ரீ கலர் சோர்ட்டர்" இயந்திரம் அறிமுகம்



சீனாவின் அனுஹுய் சோன்க்கே ஒப்டிக் இலெக்ட்ரொனிக் கலர் சென்ரர் நிறுவனத்தின் விநியோக பங்காளராக றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தை நியமிக்கும் உடன்படிக்கையை, அனுஹுய் சோன்க்கே ஒப்டிக் இலெக்ட்ரொனிக் கலர் சென்ரர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் காஓ ஷேன் மூலம் றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் வர்த்தக பிரிவின் பணிப்பாளரான விவில் பெரேராவிடம் கையளிப்பதையும், அருகில் றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் பொறியியலாளர் சரத் பண்டார மற்றும் சீன நிறுவனத்தின் பொறியியலாளரையும் காணலாம்.

இலங்கையில் தேயிலை உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு அனுகூலத்தை வழங்கும் வகையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் தரத்தை அதிகரிக்கும் வகையில், ''ரீ கலர் சோர்ட்டர்'' (Tea Color Sorter) இயந்திரத்தை றிச்சர்ட் பீரிஸ் நிறுவனம் இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது. இந்த இயந்திரம் சீனா வின் அனுஹுய் சோன்க்கே ஒப் டிக் இலெக்ட்ரொனிக் கலர் சென்ரர் நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்படுகின்றது. இந்தப் புதிய கலர் சோர்ட்டர் இயந்திரங்களின் மூலம் இலங்கையில் தேயிலை தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் தேயிலையின் தரத்தைப் பாதிக்கும் அனைத்து விதமான சேர்மானங்களும் அகற்றப்படுகிறது. இதன் மூலம் இலங்கையின் தேயிலைக்கு சர்வதேச சந்தையில் அதிகளவு கேள்வியையும், பெறுமதியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவரையில் இலங்கைக்கு ஜப்பானிலிருந்து ''கலர் சோர்ட்டர்'' இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இவற்றின் விலை மதிப்பு அதிகளவில் காணப்பட்டமையால் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தாம் தயாரிக்கும் தேயிலையின் தரத்தை உயர்நிலையில் பேணுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் மூலம் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ''கலர் சோர்ட்டர்'' இயந்திரங்களின் மூலம் இந்த நிலைக்கு இலகுவான தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் ''கலர் சோர்ட்டர்'' இயந்திரங்கள் தயாரிப்பில் ஜப்பான் மற்றும் கொரியா போன்ற நாடுகள் முன்னிலை வகித்து வந்திருந்த போதிலும், அண்மைக்காலமாக சீனாவிலிருந்து தயாரிக்கப்படும் இயந்திரங்களுக்கு சந்தையில் அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது. ஜப்பானிய தொழில்நுட்பத்துக்கு நிகராக தயாரிக்கப்படும் இந்த இயந்திரங்களின் விலை ஜப்பானிய தயாரிப்புகளை விட 50 வீதம் வரை குறைவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் விற்பனைக்கு வந்துள்ள இந்த ''கலர் சோர்ட்டர்'' இயந்திரங்கள் தேயிலையின் தரத்தை உயர்த்துவதற்காக பயன்படுத்தப்படும் நிற அல்லது கறுப்பு வெள்ளை கமிராக்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த இயந்திரங்கள் வெவ்வேறு அளவுகளில் காணப்படுவதுடன், அந்த அளவுகளுக்கு அமைவாக தேயிலையின் தரத்தை அதிகரித்துப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிறையின் அளவும் வித்தியாசப்படுகிறது. வாடிக்கையாளர்கள் தமது தேவைகளுக்கு அமைவாக இந்த இயந்திரங்களின் அளவுகளைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

# "எலும்புகளின் சக்தி பெண்களின் சக்தி" அன்லீன் பிரசாரம் ஆரம்பம்




யெஹலி மற்றும் குமார் சங்கக்கார

பெண்கள் மத்தியில் எலும்பு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் தனது முயற்சிகளின் ஒரு பகுதியாக 'ANLENE™ Asthi Shakthi Kantha Shakthi' என்ற பிரசாரத்தை முன்னெடுப்பதற்காக புகழ்பெற்ற கிரிக்கெட் நட்சத்திர வீரரான குமார் சங்கக்கார மற்றும் அவரது மனைவி யெஹலி ஆகியோருடன் அனிலீன் கைகோர்த்துள்ளது. சமநிலை ஊட்டச்சத்து உணவுப் பழக்க வழக்கம் மற்றும் கிரமமான உடற்பயிற்சி ஆகியவற்றினூடாக சிறந்த எலும்பு ஆரோக்கியத்தை பேணுவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியவாறு இப்பிரசாரமானது 'செயற்பாடுகள் அடங்கிய முகாம்கள்' மற்றும் 'இயங்குந்தன்மை கொண்ட நடைபாதைகள்' ஆகிய ஏற்பாடுகளுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் எட்டவுள்ளது. இது சம்பந்தமான செயற்பாடுகள் நவம்பர் மாதத்தில் ஆரம்பித்து அடுத்த ஆண்டுவரை தொடர்ந்தும் இடம்பெறவுள்ளது.

எலும்பு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் மூலமாக உறுதியான சுறுசுறுப்பான மற்றும் இனிமையான வாழ்க்கைக்கு அது எவ்வாறு உதவுகின்றது என்பதை பெண்கள் சிறப்பான வழியில் புரிந்துகொள்வதை ஊக்குவிக்கும் வகையில் பிராந்தியவாரியாக பல்வேறு 'செயற்பாடுகள் அடங்கிய முகாம்களையும்' இப்பிரசாரம் ஏற்பாடு செய்யவுள்ளது.

இதில் பங்குபற்றுபவர்கள் தங்களது எலுப்புகள் தொடர்பாக சிறப்பான விளக்கங்களைப் பெற்று தமது அன்றாட வாழ்வில் சமநிலை ஊட்டச்சத்து உணவுப் பழக்கவழக்கம் மற்றும் முறையான உடற்பயிற்சி ஆகியவற்றைக் கடைப்பிப்பதன் மூலம் எவ்வாறு எலும்புகளை சிறப்பாகப் பேண முடியும் என்பது தொடர்பான அறிவூட்டல்களும் கிடைக்கப் பெறவுள்ளன.

# தொழில்சார் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு லங்கா ஐ.ஓ.சி நிறுவனத் தலைவர் கொழும்பில்

லங்கா ஐ.ஓ.சி., பி.எல்.சி. நிறுவனத்தின் இந்தியாவை தளமாகக்கொண்டு செயற்படும் தலைவரான மக்ரந் நேனே தொழில்சார் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அண்மையில் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். இந்த விஜயத்தின்போது இவர், பெற்றோலிய வளக் கைத்தொழில்கள் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, பெற்றோலிய வள கைத் தொழில்கள் அமைச்சின் செயலாளர் திருமதி சந்தியாக விஜே பண்டார மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா ஆகியோரைச் சந்தித்து விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

அமைச்சர் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. தலைவர் ஆகியோரினால் கலந்துரையாடப்பட்ட பரந்துபட்ட வகையிலான விடயங்களுள் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் இலங்கையில் முன்னெடுக்கவுள்ள சந்தைப்படுத்தல் வலையமைப்புத் திட்டம், சீனன்குடாவில் நிறுவனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள முதலீடு, உலக சந்தையில் எண்ணெய் விலைகளின் தளம்பல் காரணமாக இலங்கையில் பெற்றோலிய் உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்துவதில் ஏற்படும் தாக்கங்கள் போன்றனவும் உள்ளடங்கியிருந்தன.

மும்பையைத் தளமாகக்கொண்டியங்கியவாறு இலங்கையில் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் செயற்பாடுகளையும் கண்காணித்து வருபவரான நேனே, கடந்த ஒக்ரோபர் 2011இல் லங்கா ஐ.ஓசி., பி.எல்.சி. நிறுவனத்தின்தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் கொழும்புக்கு மேற்கொண்ட முதலாவது விஜயமாக இது அமைந்தது.

ஒரு விநியோக வலையமைப்பு நிபுணரான நேனே, கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட காலப்பகுதிக்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளும் வகையில் இந்தியன் ஒயில் நிறுவனத்தின் உபாய நடவடிக்கைகள் பிரிவுக்குத் தலைமைதாங்கி செயற்பட்டார்.

# கோஸ்வே பெயின்ட்ஸ் லங்காவின் விற்பனை மாநாடுகள்; பாசறைகள்




கோஸ்வே பெயின்ட்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்டின் 17ஆவது வருட நிறைவைக் குறிக் கும்முகமாக நாடெங்கிலும் நடைபெற்ற விற்பனை மாநாடுகளிலும், பயிற்சிப் பட்டறைகளிலும் பெருந்தொகையான விற்பனை முகவர்கள் கலந்துகொண்டார்கள். இந்த விற்பனை மாநாடுகள் காலி, வாதுவ, மவுண்ட்லெவனியா (மவுண்டலெவனியா ஹோட்டல்) கொழும்பு (கலதாரி ஹோட்டல்) கட்டுநாயக்கா, கண்டி, ஹபரன, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள முன்னணி ஹோட்டல்களில் நடைபெற்றன.

வருடாந்த விற்பனை இலக்குகளை வெற்றிகரமாக எட்டிய அனேக விற்பனை முகவர்கள், இயக்குநர் சபையால் விசேடமாகப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். கோஸ்வே பெயின்ட்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட், குறுகிய காலத்தில் துரிதமாக இலங்கைச் சந்தையை வெற்றிகொண்டமைக்காக, விற்பனை சமூகத்தால் பெரிதும் பாராட்டப்பட்டது. விற்பனை மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றை இங்கு காணலாம். (த)

# ஈஸீஸ் டெக்னோலஜீஸ் உடனான தனது பங்குடைமையை அறிவிக்கும் டிரான்ஸ்ஸெனட்

ஈஸி ஹோல்டிங்ஸின் ஒரு பிரிவான இலங்கையின் முன்னணி கணினி வன்பொருள் விநியோகஸ்தரான ஈஸீஸ் டெக்னோலஜீஸ். இலங்கையில் டிரான்ஸ்ஸென்ட் உற்பத்திகளுக்கான ஏகபோக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளது. ஈஸீஸ் உடனான பங்குடமை பற்றி இங்கு வந்திருக்கும் - டிரான்ஸ்ஸென்ட் இன்க் கோபரேஷனின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஒஸ்டின் ஹங் தெரிவித்தார்.

கணினி மெமரி மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் துறையில் முன்னோடிகளாக - நாளைய உலகை இன்றே உங்களுக்குக் கொண்டு வரும் நிறுவனமாக டிரான்ஸ் ஸென்ட் உள்ளது. உலகெங்கிலும் அலுவலகங்களைக் கொண்ட, ஒரு சர்வதேச நிறுவனமாக, பிரதான சந்தைகளின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு அதிசிறந்த தரத்திலான சேவைகளை வழங்குகின்றது. அமெரிக்கா (1990), ஜேர்மனி (1992) நெதர்லாந்து (1996), ஜப்பான் 1997), ஹொங் கொங் (2000), பிரிட்டன் (2005), மேரிலாந்து (2005), ஒஸாகா, ஜப்பான் (2007) மற்றும் சோல் கொரியா (2008), டிரான்ஸ்ஸென்ட் என்பது மூலோபாய ரீதியாக ஒன்றிணைந்த ஒரு ஹைடெக் நிறுவனம் எங்கள் வர்த்தக நாம உற்பத்திகளை வடிவமைத்து, விருத்தி செய்து உற்பத்தி செய்வது மட்டுமே எமது பணியல்ல. அவற்றை நாமே சந்தைப்படுத்தி விற்கவும் செய்கிறோம்" என கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் ஹங் தெரிவித்தார்.

பீற்றர் ஷுவினால் 1988ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட டிரான்ஸ்ஸென்ட் இன்போமேஷன் இன்க் - தாய்வானின் தாய்பேயில் அதன்தலைமையகத்தைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வகையிலும் 2000 மெமரி மொடியூல்கள், பிளாஷ் மெமரி கார்டுகள் USB பிளாஷ் டிரைவுகள் MP3 பிளேயர்கள், டிஜிடல் போட்டோ பிரேம்கள் கைடக்க வன்பொருள்கள், மல்டிமீடியா பொருள்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவாக இந்நிறுவனத்தின் உற்பத்தி வரிசை விரிவடைந்துள்ளது. டிரான்ஸ் ஸென்ட் உற்பத்திகள் தனியுரிமைக்கணினிகள் மற்றும் வெகுஜன விற்பனைக்கான பிஸிக்களாகவும் கிடைக்கும்.

இலங்கையின் கணினி வன்பொருள் சந்தையில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட பங்குகளைக் கொண்டிருக்கும் இலங்கையின் மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப விநியோகத்தர் என்ற வகையில் டிரான்ஸ் ஸென்டுக்கான தெளிவான தேர்வாக ஈஸீஸ் அமைந்தது'' என்றார் ஹங்.

2003 ஆம் ஆண்டின் அதன் உருவாக்கத்தில் இருந்து இன் டெல் ஜிகாபைட் லப்ரொப்கள் AOC, LCD மொனிட்டர்கள் ஸம்சுங் ஹார்ட் டிஸ்க் டிரைவ்கள், ஒப்டிக்கல் டிஸ்க் டிரைவ்கள் LCD மொனிட்டர்கள் பொக்ஸ் கொன் மதர்போர்டுகள் மற்றும் நாளாந்த பாவனைக் கணினிகளுக்கான பாகங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பல சர்வதேச வர்த்தக நாமங்களுக் கான இலங்கையின் முன்னணி விநியோகஸ்தர்களாக அது வளர்ச்சியடைந்திருக்கிறது. 8ஆவது வருடமாக வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் ஈஸிஸ் தனிநபர் அலுவலக மொன்றின் மூலமே தனது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்து அன்று முதல் இன்று வரை 2.5 பில்லியன் பெறுமதிவாய்ந்த சுமார் 300 ஊழியர்களைக் கொண்ட நிறுவனமாக அது வளர்ச்சியடைந்து வருகின்றது.

# கூட்டமைப்புக் கோரிய 3 அதிகாரங்களையும் உடனடியாக வழங்க அரசு முன்வரவேண்டும்

## தவறின் சர்வதேசத்தை நாடுவோம் என்கிறார் துரைரெட்ணம்

மட்டக்களப்பு, டிசெ.13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க அரசு முன்வர வேண்டுமென கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் தமிழ் தேசம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக சர்வதேசம் தலையிடுவது தொடர்பாகவும் தலையிடாமல் இருக்கவேண்டுமாயின் இலங்கை அரசு வடக்கு, கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முன்வரவேண்டும். அத்தோடு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அந்த மக்களோடு பேசித் தீர்வு காணவேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழர் உரிமைகள் மறுக்கப்பட்டதை ஒவ்வொரு தமிழரும் உணர்ந்ததாலேயே தமிழ் மக்களிடையே தனிநாட்டுச் சிந்தனை பிறந்தது.

இந்தப் போராட்டத்திற்குப் போராளிகள் தொடக்கம் பொருளாதாரம் வரையும் ஜனநாயக ரீதியாக வளர்த்துச்செல்ல ஒவ்வொரு வரும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்பதை எவரும் மறுக்கமுடியாது; அதனை மறுப்பதற்கும் எவருக்கும் உரிமையில்லை.

எமது நாட்டில் மூன்று தசாப்தமாக நீடித்த போரும், உட்பூசல்களும், முரண்பாடுகளும் விரும்பியோ - விரும்பாமலோ இலங்கைத்தீவின் அனைத்து இன மக்களையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. இதனை எந்த இதயசுத்தியுள்ள மனிதர்களும் மறுதலிக்கமுடியாது.

இந்தவகையில், இன்று எமது நாட்டில் ஒரேநாடு, ஒரேதேசம் எல்லோரும் ஒரேதாய்மக்கள் என்ற கோட்பாட்டை முன்னிலைபடுத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது சிந்தனையை உணர்வுபூர்வமாகவும் இதயசுத்தியோடும் நடைமுறைப்படுத்துவதற்கு இதைவிட வரலாற்றில் பிறிதொரு சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை.

எனவே, உலக நாடுகளின் தலையீட்டைத் தவிர்ப்பதற்கும், சர்வதேச நெருக்கடி நிலையிலிருந்து தான் எதிர்நோக்கி உள்ள சவால்களை அகற்றவும், உலகத் தமிழர்களின் இன்றைய இலங்கை அரசு தொடர்பான சந்தேகப்பார்வையை இல்லாது செய்யவும் உண்மையில் தனது சிந்தனையை நிலைநிறுத்தி தனது ஆட்சிஅதிகாரத்தை ஸ்திரப்படுத்தவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய நிரந்தரத் தீர்வை வழங்கி எல்லோரையும் ஒரேகுடையின் கீழ் அரவணைத்துக்கொள்ள வேண்டும்.

துயரவடுக்களைச் சுமந்து நிற்கும் எமது தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் எமது பிரதேசமான வடக்கு, கிழக்கை சொர்க்கபூமியாக மாற்றவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருக்கும் மிகக்குறைந்த இந்தத் தீர்வுத் திட்டத்தை முன்மொழிய ஓரணி திரளவேண்டும்.



இந்தக் குறைந்த தீர்வுத்திட்டத்தைக்கூட இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தவறுமேயானால் தமக்கான தீர்வுத்திட்டதைப் பெற சர்வதேசத்தை நாடுவதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு தெரிவு இல்லையென்பதையும் ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கிழக்கு மாகாண வரலாற்றுச் சான்றுகள் அழிக்கப்படுகின்றன

### - மேதானந்த தேரர்

கொழும்பு,டிசெ.13

கிழக்கு மாகாணத்திலுள்ள வரலாற்று சான்றுகள் தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பது அரசின் கடமையாகும் என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வண.எல்லாவல மேதானந்த தேரர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். தேசிய மரபுரிமை சொத்துக்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்திலுள்ள புராதன குடும்பமலை விகாரையின் கோபுரம் புதையல் தேடுவோரால் சேதமாக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் புதையல் தோண்டுவோரால் கிண்டப்பட்ட கிடங்கொன்றில் சிறுத்தையொன்று வசித்து வந்ததை நான் கண்டேன்.

இந்த சிறுத்தை இதற்கு முன்னரே குறித்த பகுதிக்கு வந்திருக்குமானால் புதையல் தேடி வந்தோர் பயந்து ஓடியிருப்பர் என்று கிண்டலாகப் பேசிய மேதானந்த தேரர், வில்பத்து சரணாலயத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன - என்றார். (ச)

## பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிப்பாய் மாயம்

கண்டி, பொல்கொல்லை பிரதேசத்தில் மகாவலி கங்கையில் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விமானப் படை சிப்பாய் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பயிற்சியில் விளையாட்டு அமைச்சின் அதிகாரிகளும் ஈடுபட்டிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டியில் இடம்பெறுகின்ற பயிற்சி ஒன்றில் கலந்து கொண்ட பின் நீராடுவதற்கு சென்ற போதே இந்த விமானப் படை சிப்பாய் காணாமல்போயுள்ளார் என்று விளையாட்டுதிணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



எட்டியாந்தோட்டை - கந்தலோயா தேயிலை தோட்டப் பகுதியில் பெரிய மலைபாம்பு ஒன்றை பிரதேச இளைஞர்கள் பிடித்துள்ளனர்.

## சிவனொளிபாதமலை யாத்திரைக்குப் போகும் மக்கள் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்க்கவும்

### பொலிஸார் அறிவுறுத்து

மஸ்கெலியா, டிசெ.13

கடந்த பௌர்ணமி தினத்துடன் சிவனொளிபாதமலைக்கான யாத்திரைப் பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் அங்கு யாத்திரை செல்லும் மக்கள் மதுபானம், பொலித்தீன், பிளாஸ்ரிக், போதைப்பொருள் போன்றவற்றை எடுத்துச்செல்வதை தவிர்க்குமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

மரணங்கள் சம்பவிப்பதால் ஆறுகள் மற்றும் நீரோடைகளில் குளிப்பதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த சிவனொளிபாதமலை யாத்திரைப் பருவகாலத்தின்போது பொதுமக்கள் ரயிலின் மிதிபலகையில் நின்று கொண்டு பயணித்ததால் அதிகளவான மரணங்கள் சம்பவித்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் ரயில் மிதிபலகையிலோ அல்லது ரயிலின் கூரை மீதோ பயணிக்க வேண்டாமென பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

ஏதாவது அவசரநிலைமை ஏற்படின் பொதுமக்கள் 0512223882, 0452232222 என்ற தொலைபேசி இலகத்தினூடாகத் தொடர்பு கொண்டு பொலிஸாருக்கு அறிவிக்கமுடியும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கெப்பிட்டிகொல்லாவ பஸ் விபத்தில் கொன்ஸ்டபிள் பலி; 10 பேர் காயம்

கெப்பிட்டிகொள்ளாவ,டிசெ.13

கெப்பிட்டிகொல்லாவ, அதாகட பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 10 பேர் காயங்களுக்குள்ளான நிலையில் கெப்பிட்டிகொல்லாவ, மதவாச்சி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புல்மோட்டையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றே பாதையை விட்டு விலகிச் சென்று அண்மையிலுள்ளவயல் வெளிக்குள் குடைசாய்ந்துள்ளதாக கெப்பிட்டிகொல்லாவ பொலிஸ் நிலை யப்பொறுப்பதிகாரி ரஞ்ஜித் கும்புரேகம தெரிவித்தள்ளார்.

இந்த விபத்தில் ஏ.அஸங்க என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

கண்டி,டிசெ.13

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாக உறுதியளித்து 6 இளைஞர்களிடம் 18 லட்சம் ரூபாவைப் பெற்று ஏமாற்றியதாகக் கூறப்படும் சந்தேகநபரொருவரை கண்டிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி, குற்றமோசடி பொலிஸாரிடம் இந்த இளைஞர்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது பொலன்னறுவையைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இராணுவத்தைக் கொண்டு கொழுந்து பறிக்க போவதாக மிரட்டிய தோட்ட முகாமையாளர்

### ம.தெ.மு. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ.13

தோட்டத் தொழிலாளர்கள் 20 கிலோ கொழுந்து பறிக்காவிட்டால், இராணுவத்தைக் கொண்டு வேலைவாங்க நேரிடும் - என்று தோட்ட முகாமையாளர் ஒருவர் தொழிலாளர்களை அச்சுறுத்தியுள்ளார் என்று தொழிலாளர் முன்னணியின் பொதுச்செயலாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 20 கிலோ தேயிலைக் கொழுந்து பறிக்கவேண்டும் என்ற நிர்வாகங்களின் கெடுபிடிக்கு சகல தொழிலாளர்களும் ஆட்சேபனை தெரிவித்தே வருகின்றனர்.

எனினும், சில தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்களைப் பயமுறுத்தி நிர்ப்பந்திக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அறிய முடிகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இராணுவத்தை வேலைக்கமர்த்தி 20 கிலோ கொழுந்தைப் பறிக்கச் செய்வோம் என்று தோட்ட முகாமையாளர் ஒருவர் தொழிலாளர்களை அச்சுறுத்தியுள்ளார் என்பது ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாகும்.

அவ்வாறே ஒரு தொழிலாளிக்கு ஒரு இராணுவம் என்ற ரீதியில் துப்பாக்கி முனையில் கொழுந்து பறிக்கச் சொன்னாலும்கூட பறிக்கக்கூடிய அளவிற்கு தேயிலைச் செடிகளில் கொழுந்து இல்லாவிட்டால் எவ்வாறு அவர்கள் 20 கிலோ தேயிலையைப் பறிப்பார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது.

தொழிலாளர்களின் நலனுக்காகவே கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டதாகக் கூறும் தொழிற் சங்கங்கள் இவ்விடயத்தில் மௌனம் காட்டாமல், அப்பாவித் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும் - என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
செவி குளிரும் செய்திகளைக் கேட்கலாம். கடந்த கால அனுபவங்களை அசைபோட்டுப் பார்த்து புதிய விடயங்களில் இறங்குவீர்கள். வீடு பராமரிப்புத் தொடர்பான வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். பிரியமானவர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். கடன்கள் வசூலாகும்.



**இடபம்:**
வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். காலையில் முடியாமல்போன வேலை ஒன்று மாலையில் முடியலாம். உறவினர்களுக்காக, பெண்களுக்காக நீங்களாக முன்வந்து சில செலவுகளைச் செய்யலாம். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பொறுப்பான சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம். கனவுத் தொல்லையுண்டு.



**மிதுனம்:**
தெளிவான புத்தி, திட சிந்தனையுடன் செயற்படும் நாள். நண்பர்கள் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். சிலருடன் மேலோட்டமாக இருந்த நட்பு வலுக்கும். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.



**கடகம்:**
தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவிகள் நாடி வரலாம். சிறிய வேலை ஒன்றுக்காக பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். அடமானமாக வைத்த பொருள்களுக்கு வட்டி கட்டலாம். குடும்ப உறுப்பினர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். தாய், பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம்.



**சிங்கம்:**
சிக்கல் இல்லாமல் எந்த வேலையையும் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளில் மாற்றங்களைச் செய்ய நேரிடலாம். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். சண்டை போட்ட உறவினர் ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள்.



**கன்னி:**
சூழ்நிலைக்குத் தக்கபடி எதிலும் புத்திசாலித்தனமாக நடந்து ஆதாயம் பெறுவீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். வெற்றிகரமான நாள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொருள் ஒன்றை வாங்கி பெருமிதம் அடைவீர்கள்..



**துலாம்:**
சிரமம் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். நண்பர்களின் அன்புத் தொல்லைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். உறவினர் ஒருவர் தங்களுக்கு வேண்டியவர்களுக்காக உங்களிடம் உதவி கேட்கலாம். மற்றவர்களுக்காகச் செலவு செய்யலாம்.



**விருச்சிகம்:**
பொறுப்புகளால், வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். அறியாமல் சில தவறுகளைச் செய்து விட்டு பின்னர் அதற்காக கவலை அடைவீர்கள். ஒரு வேலைக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே வாக்குவாதம் ஏற்படலாம். சிலர் உங்களை வெறுப்பேற்றும் வகையில் நடக்கலாம்.

**தனுசு:**



வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். சிக்கலான நபர்களையும் சாமர்த்தியமான பேச்சுக்கள் மூலம் வழிக்கு கொண்டு வருவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் மகிழ்ச்சி உண்டு. நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.



**மகரம்:**
நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். வருமானத்தை அதிகரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்கள் மூலம் கணிசமான லாபம் பெறலாம். பல நாள்களாகப் பிற்போட்டுக் கொண்டே வந்த சில வேலைகளை இன்று முடிப்பீர்கள். உதிரி வருமானம் உண்டு. சக ஊழியர் உதவி கிட்டும்.



**கும்பம்:**
எதிலும் கவனக் குறைவில்லாமல், ஞாபகத்துடன் செயற்பட வேண்டிய நாள். சிறிய குடும்ப பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். உத்தியோகத்தர்கள் விடுப்பு எடுத்து திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். நண்பர்கள் சிலருடன் இதுவரை செல்லாத கோயில் ஒன்றுக்கு செல்லலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.



**மீனம்:**
வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்க நேரிடலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். விருப்பம் இல்லாமல், நிர்ப்பந்தம் காரணமாக சில செலவுகளைச் செய்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

# வாளி
# வல்லிய

செந்தூரி

பொய்த்துப் போகாத நம்பிக்கைகளைப் பேணி வருவதில் எம் மக்கள் அசாத்திய திறமைசாலிகள். வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்ட அகதி வாழ்க்கையை இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்போரின் உண்மையான எண்ணிக்கையை இன்றும் கூட விடுவிக்கப்படாத உயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களின் பரப்பளவை அறியும் போதுதான் தெரிந்து கொள்ள முடிகிறது. அளவுக்கதிகமான இராணுவ வளங்களை வாழிடங்களுக்குள் குவித்துக் கொண்டு, துருப்புக்களின் பாதுகாப்பென்ற சுயநலப் போக்கில் விரட்டியடிக்கப்பட்ட மக்களின் சொந்தக் காணிகளை முழுதாக ஒப்படைக்கக் கூட மனமில்லாத நிலையைவிட வேறென்ன வேண்டும் எம் அடிமைத்தனத்துக்கு சான்றாய் பாரம்பரியமான விவசாய பூமிகளையும் கடல்வளம் கொழிக்கும் சமுத்திர ஓரங்களையும் கைத்தொழில்களால் தன்னிறைவு கண்ட தொழிற்கூடங்களையும் தமது தேவைகளுக்காக விழுங்கிக் கொண்டு இதன் மூலம் தமது ஜீவனாதாரத்தைக் கொண்டு நடத்திய லட்சக் கணக்கான மக்கள் தொகையினரை ஒரேயடியாக விரட்டியடித்து விட்டு, ''மீள்குடியேற்றம்'' என்ற பெயரில் துண்டு துண்டாக எமது நிலத்தை எம்மிடமே கையளிக்கும் நிகழ்வுகளைப் படு அமோகமாக விழாவாக்கி, புகைப்படம் எடுத்து பல்தேசியங்களிடமும் காட்டி உதவிப் பணம் பெறும் அரசின் உத்தம காரியம் தான், அண்மைக்காலங்களில் நடைபெற்று வருகின்றது. ''போரால் பாதிக்கப்பட்டவை'' என்று இனங்காட்டப்படுகின்ற பிரதேசங்களில் மீள்கட்டமைப்புக்கான உதவிகளைச் செய்ய முன்வரும் நாடுகளையும், தமது இச்சாதாபங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தும், கிடைக்கும் உதவிப் பொருள்களையும் நிதியையும் அரச விரும்பிகளின் ஏவலின் படி திசைமாற்றியும் எண்ணற்ற குளறுபடிகளுடன் இழுபட்டுக் கொண்டிருக்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாமே பழிவாங்கலின் இன்னொரு முகம்தான்.

'' மரணத்துக்கு முன்பாக, ஒரு தடவையாவது, பிறந்து வாழ்ந்த மண்ணைப் பார்த்து விடமாட்டேமா?'' என்ற ஏக்கத்தை தினமும் தம் மூச்சோடு சேர்த்து சுவாசிக்கும் பிடிப்பற்ற ஏதிலிகளையும் தன் அங்கமாகக் கொண்ட வடபகுதி தமிழ் மக்களிடம், அரசு காட்டிய பரிவும், பாசமும் எத்துணையானது? நாளாந்த வருமானம் வெறுமையாகிக் கிடந்த ''முன்னாள்'' உழைக்கும் கரங்களுக்கு அபிவிருத்திப் பணிகளிலும் மீளுருவாக்கப் பணிகளிலும் கொடுக்கத் தவறிய ''வேலைவாய்ப்புக்கள்'' இனம் மாறிக் கொடுக்கப்பட்டதுதான் ''ஒரு தாய், மக்கள்'' எனும் கோஷத்தின் விளக்கமா? ''துருவேறிய துவிச்சக்கர வண்டியில் விறகு சுமந்து விற்கின்றவரும்'', ''முடிபொசுங்கும் வெயிலில், தரிசு நிலக்கற்களை உடைத்து கன்றிப் போனவனும்'', ''நாட்பட்ட இரும்பைத் தேடிப் பொறுக்கி ஊரெல்லாம் அலைந்து, ஒரு நேர உலைக்காவது வழி பண்ணிவிடத் துடிப்பவனும்'' உங்கள் கண்களுக்குத் தெரியாதபடி மறந்து போனது எப்படி? வீதி அபிவிருத்திப் பணிகளிலும், அரசு சார்ந்த கட்டுமான வேலைகளிலும் ரயில் பாதை புனரமைக்கும் பணிகளிலும் நாளாந்தக் கூலிக்கு வேலை செய்யும் தகுதி கூட இல்லையா அவர்களிடம்? தென் மாவட்டங்களிலிருந்து வாகனங்களில் அழைத்து வரப்பட்டு, தங்குமிட, உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு மாதத்துக்கு இத்தனை நாள் விடுமுறையென்றும் ஒப்பந்தம் பேசப்பட்டுள்ள பெரும்பான்மை இன குடும்பத்தவரின் வயிற்றின் பசி அளவைவிட எவ்வளவு குறைந்தது இந்த அடிமட்டத் தமிழனின் பசி? இவையெல்லாம் ஒப்பந்தக்காரர்களின் சுயவிருப்பிலான தெரிவுகள் என்றும், இவற்றில் நாம் தலையிட முடியாதென்றும் 'வலிதற்ற' காரணங்களை வசனங்களாக பேசும் அரச உயர் அதிகாரிகளும், திணைக்களப் பணிப்பாளர்களும், அமைச்சுகளின் செயலர்களும் என்றாவது வீதியிலே உண்டு, உறங்கிப் பார்த்ததுண்டா? எதை எதையெல்லாமோ செய்த இவர்கள், பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான புள்ளி விவரங்களைச் சேகரித்து, அவற்றில் உழைக்கும் திறனுள்ளோரைத் தெரிவு செய்து, அவர்களை அபிவிருத்திப் பணிகளுக்குள் உள்வாங்கும் வேலைவாய்ப்புக்களை ஒப்பந்த அடிப்படையிலாவது ஏற்படுத்த வேண்டும் என்று மனம் வைக்க முடியாதா? ''யாரோ முகம் தெரியாதவனின்'', ''வாய்க்குள் நுழையாத பெயருடையவனின்'' சிபாரிசுகளுக்காகவெல்லாம் சிதறும் உங்களின் ''கையெழுத்துக்களும்'', ஓங்கி இறங்கும் ''இறப்பர் முத்திரைகளும்'', ஆகக் குறைந்த தேவையான ''பசி'' யென்ற பிணியோடு போராடும் ஆயிரமாயிரம் குடும்பங்களின் மேல் பார்வையைத் திருப்பினால் அவர்களின் ஏழேழு தலைமுறைகளும் வாழ்த்துமே உங்களை? ''உத்தரவிடும் அதிகாரமும்'', ''பணி கொடுக்கும் பதவியும்'' இருப்போரெல்லோரையும், மானமுள்ள இன உணர்வாளர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்காவிடினும், மனிதாபிமானமுள்ள ஆத்மாவைச் சுமப்பவர்கள் என்றாவது எதிர்பார்ப்பதில் என்ன தவறு?

''எமக்கேன் வீண் வம்பு'' என்றும், உயர் பீடங்களை பகைக்க வேண்டி வருமே?'' என்றும் ஒதுங்கிக் கொண்டதன் விளைவு தானே, ''பேரினத்

> "துருவேறிய துவிச்சக்கர வண்டியில் விறகு சுமந்து விற்கின்றவரும்", "முடிபொசுங்கும் வெயிலில், தரிசு நிலக்கற்களை உடைத்துக் கன்றிப் போனவனும்", "நாட்பட்ட இரும்பைத் தேடிப் பொறுக்கி ஊரெல்லாம் அலைந்து , ஒரு நேர உலைக்காவது வழி பண்ணிவிடத் துடிப்பவனும்" உங்கள் கண்களுக்குத் தெரியாதபடி மறந்து போனது எப்பது?

> "யாரோ முகம் தெரியாதவனி
> வெல்லாம் சிதறும் உங்களி
> களும்", ஆகக் குறைந்த
> குடும்பங்களின் மேல் பார்வை
> உங்களை? "உத்தரவிடும் அ
> யும், மானமுள்ள இன உ
> மனிதாபிமானமுள்ள ஆத்மா

# ிலும் கூர்மை,
# ப கண்ணீர்கள்..

வனின்'', ''வாய்க்குள் நுழையாத பெயருடையவனின்'' சிபாரிகளுக்காக
களின் ''கையெழுத்துக்களும்'', ஓங்கி இறங்கும் ''இறப்பர் முத்திரை
த தேவையான ''பசி''யென்ற பிணியோடு போராடும் ஆயிரமாயிரம்
ர்வைத் திருப்பினால் அவர்களின் ஏழேழு தலைமுறைகளும் வாழ்த்துமே
அதிகாரமும்'', ''பணி கொடுக்கும் பதவியும்'' இருப்போரெல்லோரை
உணர்வாளர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்காவிடினும்,
த்மாவைச் சுமப்பர்கள் என்றாவது எதிர்பார்ப்பதில் என்ன தவறு?

தொழிலாளர்களின் படையெடுப்பு'' குடா நாட்டின் மூலை முடுக்கெங்கும் வியாபிக்கக் காரணம் என்பதை அவரவர் மனச்சாட்சி சொல்லுமே! ''ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுப் பணியைத் தொடங்குகின்ற ஒவ்வொரு நிறுவனத்தினதும் தொழிலாளர் எண்ணிக்கையில், இத்தனை வீதமான தமிழ் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும்'' என்ற அதிகார நிபந்தனையைச் செயற்படுத்த இடம்கொடாத தயக்கத்தின் கதவுகள், அவலவாழ்வென்ற திறப்புக்கு தலை சாய்தல் கூடாதோ? 'கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை வழங்குபவர்கள், 'அவற்றைச் சுமந்து போக்குவரத்தினால் இடம்மாற்றுபவர்கள்', 'வேலை மூலகங்களை ஏற்றி இறக்கப் பயன்படுபவர்கள்', 'அடிப்படைப் பணி செய்யும் கூலிகள்', 'கட்டுமானங்களைச் செயற்படுத்தும் தொழிற்பெயருடையவர்கள்' போன்ற எத்தனையோ உப பிரிவுகளைக் கொண்ட பணியாளர்கள் படையில் ஒவ்வொரு பிரிவுக்கும் இத்தனை பேர் என்ற வாய்ப்பு வழங்கப்பட்டாலும் கூட வாழ்விழந்த பாதிக்குடும்பங்களின் வாழ்வில் ஒளியேறுமே?

படியளக்க வேண்டிய படைத்தவனாலும், கைவிடப்பட்ட நிலையில், தமது குடும்பங்களின் பொருளாதாரச் சுமையை ''வருத்தப்பட்டுப் பாரமாய்ச் சுமக்கின்றவர்கள்'' மீது தானே முற்போக்கான அபிவிருத்தியின் பார்வை முதலில் பதிந்திருக்க வேண்டும்? அதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், போரின் போது இழப்புக்களை சந்தித்தவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் நிவாரண உதவி வழங்க வேண்டியிருப்பதுதானே, போரில் ஒரு பங்காளியாக நின்றிருந்த அரசின் அவசர கடமை. மூப்பு அடிப்படையில் வகைப்படுத்தினும் கூட, இந்திய அமைதிப்படையுடனான போர்களின் இறுதியில் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய வலி.வடக்கு மக்களின் தேவைகள் முந்திக்கொண்டு தீர்க்க வேண்டிய அவசியத்துக் கானவை.

''பொருளாதார முதுகெலும்பு'' முறிக்கப்பட்டு, புலம்பெயர் உறவுகளின் ''கைத்தடிகளை'' ஊன்று கோல்களாகக் கொண்டு நிமிர முயற்சித்து இன்னமும் முழுமையாக எழுந்து நிற்காத அத்தனை குடும்பங்களுக்கும், ''ஆபத்பாந்தவனாக'' தன்னை அடையாளம் காட்ட முனையும் அரசு உண்மையில் செய்திருக்க வேண்டியது என்ன?

தாய்த் தமிழகத்துப் பெருமக்களை, தமது இழிந்த அரசியல் குறுகிய நோக்கங்களுக்காக இலவசங்களால் வசப்படுத்தி, உழைக்கும் திறனை முழுமையாக மழுங்கடித்து, முழுநேர கட்சித் தொண்டர்களாகக் கட்டிப் போட்ட முத்தமிழறிஞர் டாக்டர் ''கலைஞரும்'', இதயதெய்வம் டாக்டர் ''அம்மாவும்'' செய்த அதே தவறு! சிந்தப்படுகின்ற வியர்வைத் துளிகளின் மகத்துவத்தைக் குறைத்து, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத தமது கையாலாகாத் தனத்தை வெளிப்படுத்த முடியாமல் வசதி, வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருகின்றோம் என்கின்ற பெயரில், ''வேட்டி, சேலையில்'' தொடங்கி, ''இலவச வர்ணத்' தொலைக்காட்சிப் பெட்டி'', ''இலவச எரிவாயு அடுப்பு'', ''இலவச குளிர் பதனப்பெட்டி'', ''இலவச கால்நடைகள்'', ''அரை இலவச வீட்டுத் திட்டம்'', ''அரை இலவச வாகனங்கள்'' என்று ஏட்டிக்குப் போட்டியாக ''வசனம் பாடிய'' தேர்தல் கவர்ச்சி அறிக்கைகளின் வெளிப்பாடாக, தமிழ் நாட்டின் லட்சோபலட்சம் மக்களை, ''முயற்சியற்ற முழந்தாள் மனிதர்களாக'' மாற்றிக் குளிர் காயும் அதே யுக்தி தான் இங்கும்!

ஆண்டுக்கு ஆயிரம் அல்லது அதற்கும் மேலாய்ப் பெருகிக் கொண்டே வரும் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் பாதியைக் கூட, யாழ்ப்பாணத்தில் முகாமிடும் தனியார் நிறுவனங்களிடமோ, அரச சார்பு, அரச சார்பற்ற நிறுவனங்களிடமோ வேலைக்கு நியமிக்கச் சொல்லும் ''திமிரதிகாரம்'' வடபகுதியை ஆள்வோரென்று பெருமைப்படும் எம்மவர்களிடம் ஏன் இல்லாமல் போனது? உத்தியோகம் ஒன்றைத் தேடி, செருப்பாய்த் தேய்ந்தவர்களின் சொல்லில் முடியாத சோகங்களை, கட்சிகளாகப் பிரிந்து நின்று சங்கங்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகரிக்க துணை நிற்பவர்கள், வேலை வாய்ப்பு நிகழ்ச்சி நிரல் ஒன்றை வரிசைக் கிரமமாக ஏற்படுத்தத் தவறியது தெரிந்தே செய்யும் தவறுதானே?

திரட்டிக் கூறின், சாதாரண கூலித் தொழிலாளியில் தொடங்கி, நிறுவன முகாமையாளர் பதவிகள் வரை வட மாவட்டங்கள் முழுவதும் வெற்றிடங்களும் உண்டு. வேலைக்கு தகுதியானவர்களும் உண்டு! ஆயினும் சரியான பொருந்துநர்கள் இன்மையும் பொறுப்பிலிருப்போரின் அசமந்தமும் அநியாயங்களைத் தட்டிக் கேட்கத் துணியாத அறியாமையும் தான் இந்தத் துணை இழிநிலைக்கும் காரணம்.

வீட்டுத் திட்டத்துக்கான டோக்கன் எனத் துண்டுச் சீட்டுக் கொடுத்த அமைச்சர்களின் கூட்டத்துக்கு ஆள்சேர்க்கும் அரச அதிகாரிகளும், ''குடும்பப் படம்'' எடுத்துத் தரச் சொல்லி ''இந்திய வீடமைப்பு'' பூச்சாண்டி காட்டும் உத்தியோகத்தர்களும், தேர்தல் காலங்களில் மட்டும் ''இலவசங்களால்'' வாரியிறைத்த வெள்ளையாடைப் பெருமக்களும், முயற்சியற்ற, உழைப்பின் அருமை தெரியாத, சோம்பல் நோயாளிகளாக எம் சமூகத்தை புரட்டிப்போட இடம்கொடாமலிருக்க வேண்டும் என்பதே ஆக இறுதியான பிரார்த்தனை. ''பசித்திருப்பவனுக்கு, மீனைத் தானமிடுவதை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடு!'' ❋

## அது மட்டும்போதுமா?



ஒருத்தர் தன்னுடைய தொழிலில் சிறந்த கெட்டித்தனத்துடன் இருக்கலாம். அதற்காக எப்போதும் அதே ஞாபகத்தில் இருந்து கொண்டு உலகியல் அறிவு இல்லாமல் இருந்துவிடக்கூடாது. அது ஆபத்தை விளைவிக்கும்.

இதற்காக எமது தாத்தா, பாட்டிமார் ஒரு கதை கூறுவார்களே! கேள்விப் பட்டிருப்பீர்கள்.

ஒரு சமயம் நான்கபேர் சேர்ந்து வெளியூருக்குப் பிரயாணம் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா?

ஒருத்தர் வேதாந்தி- இன்னொருத்தர் சங்கீத வித்துவான். மூன்றாவது ஆள் வைத்தியர். நன்காவது ஆள் ஜோசியர். இவர்கள் நான்கு பேரும் நண்பர்கள். அதனால்.சேர்ந்து புறப்பட்டார்கள்.

இருட்டி விட்டது. அதனால் இன்றைக்கு இராத்திரி இந்த ஊரில் தங்கிவிட்டு நாளைக்குப் புறப்படலாம் என்று தீர்மானம் செய்தார்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்வது அங்கேயே கடைக்குப் போய் பொருள்கள் வாங்கி சமைத்துச் சாப்பிடலாம் என்று முடிவு செய்தார்கள்.

நான்கு பேர் இருப்பதனால் ஆளுக்கு ஒரு காரியமாகச் செய்யலாம் என்று வேலையைப் பிரித்துக் கொண்டார்கள். வைத்தியர் காய்கறி வாங்கப்போனார். வேதாந்தி எண்ணெய் வாங்கப் போனார். ஜோசியர் பலசரக்கு வாங்கப் போனார். சங்கீத வித்துவானுக்கு சமைக்கிறவேலை. எல்லாம் சரி ஆனால் நடந்தது என்ன?

கடைத்தெருவுக்கு காய்கறி வாங்கப்போன வைத்தியர் அங்கே போய் ஒவ்வொரு காய்கறியாக எடுத்துப்பார்த்தார். இது பித்தம் உடம்புக்கு ஒத்துவராது. இது வாய்வு; உடம்புக்கு சரிவராது என்று ஒவ்வொன்றாக ஒதுக்கித்தள்ளினார். கடைசியில் ஒன்றுமே வாங்கவில்லை வெறுங்கையோடு திரும்பி வந்துவிட்டார்.

எண்ணெய் வாங்கப் போன வேதாந்தி ஒரு எண்ணெய் போத்தலை வாங்கினார். அதை எடுத்தக்கொண்டு வரவேண்டியதுதானே. முடியவில்லை. அவரின் வேதாந்த மூலை சிந்திக்க ஆரம்பித்தது. தென்னைக்கு எண்ணெய் ஆதாரமா? அல்லது எண்ணெய்க்குத் தென்னை ஆதாரமாக? என்கின்ற ஆராய்ச்சியில் இறங்கினார். என்ன நடந்தது தெரியுமா? வாங்கிய எண்ணெய் முழுவதும் வழியில் சிந்திவிட்டது. வெற்றுப் போத்தலுடன் வந்துசேர்ந்தார்.

பலசரக்கு வாங்கப் போன ஜோசியர் வரும் வழியில் வந்தவர்களுக்கெல்லாம் அங்கேயே ஒரு மரத்தடியில் உட்கார வைத்து ஆரூடம் சொல்ல ஆரம்பித்தார். அப்படி ஒவ்வொருத்தராகச் சொல்ல ஆரம்பித்தார். அப்படி ஒவ்வொருத்தராகச் சொல்லி முடித்துவிட்டு கடைக்குப்போய் சேர்ந்தார். இவர் அங்கே போய்ச் சேர்வதற்குள் நீண்ட நேரம் ஆகிவிட்டது. கடையைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள். என்ன செய்வது இவரும் வெறுங்கையோடு திரும்பி வந்து சேர்ந்தார்.

இவர்களது நிலமைதான் இப்படி ஆகிவிட்டது. வீட்டிலே சமைப்பதற்காக உட்கார்ந்திருந்த சங்கீத வித்துவான் அடுப்பைப் பற்றவைத்து உலையைக் கொதிக்க வைத்தார். அதாவது ஒரு பாவனையில் தண்ணிரை ஊற்றி அடுப்பிலே வைத்தார். அது கொதிக்க ஆரம்பித்ததும் தண்ணீர் கொதிக்கிற சத்தம் இவருக்குத் தாளம் போடுவது மாதிரி இருந்திருக்கிறது. சந்தோசத்தில் பாட ஆரம்பித்தார்.

பாடிக் கொண்டே உற்சாகமாகக் கையில் இருந்த கரண்டியால் அந்தப் பாவனையில் தட்டினார். அவ்வளவுதான் பாவனை உடைந்துபோய்விட்டது. தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

எந்தத் தொழில் தெரிந்தாலும் அதைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தத் தெரியவில்லை என்றால் ஆபத்துத்தான். அதற்காகத்தான் இந்தக்கதை.

கோ.சுவாமிநாதன்

உதயன்
13 டிசெம்பர் 2011 செவ்வாய்க்கிழமை



புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச்செய்கை எனும் நூல் வெளியிட்டு விழாவில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடமாகாண பிராந்திய சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.ஹால்டீன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்.யூட் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

# யுத்தத்தின் பாதிப்பு காரணமாக கல்வியை இழந்துள்ள மாணவர்

## முன்னாள் வடமாகாண பிரதம செயலர்

யாழ்ப்பாணம், டிசெ.13

கடந்த கால யுத்தத்தின் பாதிப்பால் பல மாணவர்கள் பாடசாலை செல்லாமல் கல்வியை இழந்து நிற்கின்றனர்.

இந்த நிலை மாறவேண்டும் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி அவசியம். அவற்றை தகுந்த முறையில் தேர்ந்தெடுத்து கற்க வேண்டும் என முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாடசாலைக் கல்வியானது அனைத்து மாணவர்களுக்கும் அவசியமான ஒன்றாகும். அடிப்படை கல்வியினை கற்றுக் கொள்ள வேண்டும். நலன்புரி முகாம்களிலே மாணவர்கள் பலர் கல்வியை இழந்து இருந்ததை காண முடிந்தது.

மாணவர்களிடம் ஆளுமை விருத்தி தலைமைத்துவம், ஒழுக்கங்கள், பண்பாடுகள் ஆகியவற்றினை போதிப்பது பாட சாலை ஆகும். கல்விக்கான சிறந்த தளமாக பாடசாலை விளங்குகிறது.

இந்தப் பாடசாலைகளிலே நடைபெறும் விழாக்களிலும் போட்டிகளிலும் பங்கு கொண்டு தமது திறமைகளை வெளிக் கொண்டுவர வேண்டும்.

கற்றலோடு நின்றுவிடாது அனைவரிடத்திலும் அன்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். கல்வியும் அன்பும் ஒவ்வொருவரிடமும் இருப்பது அவசியமாகும்.

உலகத்திலே பல கண்டு பிடிப்புக்கள் கண்டுபிடிக்கப் படுகின்றன. அவ்வகையான கண்டு பிடிப்புக்கள் உலகத்தை அழிவடையச் செய்வனவாக அமைந்து விடுகின்றன.

அழிவில்லாது ஆக்கபூர்வமான செயல்களிலும் வழி நடத்தல்களிலும் மாணவர்கள் செல்ல வேண்டும்-என்றார். (எ-311)

# யாழ்.மாவட்டம் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் தற்போதும் கூட பின்தங்கிய நிலையிலேயே

## டாக்டர் சிவகணேஷ் கூறுகிறார்;

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்.மாவட்டம் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. இதனால் ஆரோக்கியமற்ற சமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கிறது என யாழ்.பிராந்திய தொற்று நோயியலாளர் டாக்டர் சு.சிவ கணேஷ் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்திய சாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயகுமாரன் எழுதிய ''நோய்நாடி நோய் முதல் நாடி'' எனும் புற்றுநோய் விழிப்புணர்வு நூல் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வரவேற்புரை நிகழ்த்தும்போதே டாக்டர் சு.சிவகணேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

யாழ்.போதனா வைத்திய சாலை ஏனைய வைத்திய சாலைகளைக் காட்டிலும் அர்ப்பணிப்புடன் முழுமையான சேவையை வழங்கி வருகின்றது. எனவே தான் நோய்களுக்கு மருந்துகளை வழங்கி அந்த நோயைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் மேலைத்தேய மருத்துவ முறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதால் தமிழ் மொழி மருத்துவத்தைப் பெற்றுக்கொள்வது குறைவு. முன்னோர்கள் விட்டுச்சென்ற சித்த வைத்தியங்களும் உள்ளன. ஆனால் மருத்துவத்துக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் போய்விட்டன.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நோய்க்கான தடுப்பு நடவடிக்கைகள் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. இதற்குக் காரணம் நோய்த் தடுப்புக்கு மக்கள் முக்கியத்துவம் கொடுக்காமையாகும்.

ஆரோக்கியமான சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டுமானால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நோய்க்கான அடிப்படைக் காரணிகளை இனங்கண்டு அதற்கான மருத்துவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்- என்றார். (எ-313)

# சிறு குற்றங்களுக்கு அபராதம் செலுத்த முடியாது சிறை செல்வோருக்கும் புனர்வாழ்வளிக்க வேண்டும்

## புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

தென்மராட்சி,டிசெ.13

ஆயுதம் தூக்கியவர்களுக்கு மட்டுமல்ல சிறு குற்றங்கள் புரிவோருக்கும் புனர்வாழ்வளிக்க வேண்டும். அந்த வகையில் நீதிமன்றங்களால் சிறு குற்றங்களுக்காக அபராதத் தொகை செலுத்த வசதி இல்லாமல் சிறை செல்பவர்களுக்கு புனர்வாழ்வளிக்கவே இந்த பிராந்திய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது என புனரமைப்பு மற்றும் சிறைச் சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத்தில் சமூக சீர்திருத்த திணைக் களத்தின் பிராந்திய அலுவலகம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த அலுவலகத்தினை திறந்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் சந்திரசிறி கஜதீர மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

சிறைச்சாலை ஒரு சமுதாய சீர்திருத்தப்பள்ளி எனத் தெரிவிப்பார்கள். ஆனால் சிறு குற்றங்களுக்காக அபராதம் செலுத்த முடியாமல் சிறை சென்றவர்கள் பலர் அங்கு செல்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ள பலரை நாம் காண்கிறோம். அன்றைய காலத்தில் இவ்வாறான சமுதாய சீர்திருத்தப் பிரிவுகள் மாவட்டங்கள் தோறும் இயங்கியிருந்தால் நாட்டில் உள்ள சிறைச் சாலைகளில் இடநெருக்கடிகள் ஏற்பட்டிருக்காது.

சாதாரண சிறு குற்றங்களுக்காக சிறை செல்வது சமூகத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்துவதைக் கருத்தில் கொண்டு பிராந்திய நிலையங்களை அமைத்து வருகிறோம்.

சிறைச்சாலைகளில் இருக்கின்ற கைதிகளுக்கு தினமும் தலா 400 ரூபா வீதம் செலவழிக்கப்படுகிறது. சிறு குற்றங்களுக்காக ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அதனைத் செலுத்தாவிடின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிமன்றங்களில் உத்தரவிடப்படுகிறது. குறித்த அபராதத் தொகை செலுத்த முடியாமல் சிறை செல்லும் நபருக்கு ஒரு மாத காலத்தில் அவருக்கு 12 ஆயிரம் ரூபா வரை செலவழிக்க வேண்டியுள்ளது.

நாட்டில் உள்ள" சிறைச் சாலைகள் அனைத்தும் கைதிகளால் நிறைந்து பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சிறைகளில் உள்ளோரில் 50 சதவீதமானோர் சிறு குற்றங்களுக்காக அபராதத் தொகை செலுத்த முடியாமல் ஆறு மாதங்கள் வரையான சாதாரண சிறைத் தண்டனை பெற்றவர்களாவர்.

ஆயுதம் தூக்கியவர்கள் பலருக்கு இந்தத் திணைக்களம் புனர்வாழ்வளித்து அவர்கள் தமது உறவுகளுடன் வாழ எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. படையினரிடம் சரணடைந்தவர்களில் இன்னும் 700 பேரே திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளனர். அவர்களும் விரைவில் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் கௌரவமான முறையில் தமது உறவுகளுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குரிய வகையில் பல்வேறு தொழில் பயிற்சிகளை வழங்கியுள்ளோம்- என்றார். (எ-207)

# நிறுவன திறப்பு விழாவில் மாணவிக்கு சைக்கிள்

தென்மராட்சி, டிசெ.13

மீசாலையில் உள்ள அபி புரொடக்ஸன் என்னும் ஆடை வகை உற்பத்தி நிலையத்தினர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவிக்கு சைக்கிள் வழங்கியுள்ளனர்.

நிலையத்தின் திறப்பு விழா தினத்தன்று தந்தையை இழந்த வன்னிப் பிரதேச மாணவிக்கே சைக்கிள் வழங்கப்பட்டது. (எ-207)

# யாழ்.கல்வி வலய அழகியல் போட்டி முடிவுகள்

சித்திரப் போட்டி

பிரிவு I- சி.தர்மிலன்- (நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை), அ.அலஸ்ரீனா- (இளையதம்பி இந்து வித்தி), த.சானுஜன்- (நல்லூர் ஞானோதயா வித்தி), அ.ஜெனிஸ்ரன்குமார்- (சென். ஜோசெப் வித்தி), சி.டிஷாந்- (அச்செழு சைவப் பிரகாச வித்தி), பூ.கிருபாகரன்- (அச்சுவேலி மத்திய கல்லூரி)

பிரிவு II - ச.மயூரி- (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), த.அனுஜன்- (முத்துத்தம்பி மகா வித்தி), ந.யோசுவா- (கோப்பாய் மகா வித்தி), சோ.விஷ்ணுவன்- (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி), சி.எப நேசன்- நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

பிரிவு III- செ.லாவண்ஜா- (கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை), சூ. துர்க்காஜினி- (நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை), சு.அலிஸ் ஆஷிகா- (கோண்டாவில் சி.சி.த. பாடசாலை), செ. தனுசன்- (நல்லூர் ஞானோதயா வித்தியாலயம்), சு.ஷாருக்கான் - (முத்துத்தம்பி மகா வித்தி).

பிரிவு IV - இ.கஜன் (நல்லூர் ஆனந்த வித்தி), சி.சலேற் மரியா (சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), கு.திபாகரி (சன்மார்க்க மகா வித்தி ), சி.உயன் (அச்சு வேலி மத்திய கல்லூரி), ச.ரிஷி கேசன்- (முத்துத் தம்பி மகா வித்தி).

பிரிவு V - சி.டிலானி (முத்துத் தம்பி மகா வித்தி), உ.தனுசன் (முத்துத்தம்பி மகா வித்தி), சி.நிக்ஷன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி). உ.யதுர்ஷன் (ஊரெழு கணேச வித்தியாசாலை), சி.நிரோஜன்- ஊரெழு கணேச வித்தியாசாலை).

பிரிவு VI - ஜெ.மகிழ்தினி (அச்சுவேலி மத்திய கல்லூரி), சி.ரோணுஷன் (முத்துத்தம்பி மகா வித்தி), ஜெ.சதுர்த்தன்- (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி), சி.மாறஜனகன் (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்).

பிரிவு VII - அ.கிஷான் (சென். ஜோசெப் வித்தி), அ. அன்ரனிதாஸ் (சென். ஜோசெப் வித்தி), சி.சியாஜினி (அச்சு வேலி மத்திய கல்லூரி).

பிரிவு VIII -இ.விதுஷன்- (அச்சுவேலி மத்திய கல்லூரி), கி.தவகீதா (அச்சுவேலி மத்திய கல்லூரி), சோ.கோகிலவதனி (நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை).

பிரிவு IX - அ.அன்ரனி தாஸ் (கோப்பாய் மகா வித்தி ), நா.டிலூஜன்- (முத்துத்தம்பி மகா வித்தி), யோ.தனுசன்- (அச்சுவேலி மத்திய கல்லூரி), சோ.கார்த்திகா (கோப்பாய் மகா வித்தி). (எ)

(தொடரும்)

# சீரற்ற ஆசிரியர் வளப் பகிர்வுடன் தீவகக் கல்வி வலய பாடசாலைகள்

## அதிகாரிகள் விரைந்து கவனம் செலுத்துவார்களா?

கல்வி வலயங்களில் பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பியி ருக்கும் பிள்ளைகள் உள்ள வலயம் தீவகக்கல்வி வலயம் ஆகும். இதில் பல திறன் விருத்தி உள்ள மாண வர்கள் இருந்தும் கூட கல்வி முறைமை களில், கல்வி நிர்வாக முறைமைகளில் உள்ள பல குளறுபடிகளால் அடைவு மட்டத்தை மாணவர்கள் எய்த முடியாமல் உள்ளது.

இதில் உள்ள முக்கியமான தற்காலப் பிரச்சினையாகத் தலைதூக்கி இருப்பது சீரற்ற ஆசிரிய வளப்பகிர்வே ஆகும். தீவகக் கல்வி வலயத்துக்கு இது பெரும் சவலான விடயமாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. கடல் கடந்த தீவுகளும் இதற்கு உட்பட்டு உள்ளமையால் ஆசிரியர்களை இடமாற்றும் போது பல எதிர்புகள், மறுப்புகள், மேலிடத்து அழுத்தங்கள் என பலவற்றுக்கு நிர்வாக அதிகாரிகள் முகம் கொடுக்க வேண்டி உள்ளமையையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் பாடசாலைக் கல்வியின் இலக்கை முறியடிக்க யாருக்கும் உரிமை இல்லை. கடல்கடந்த தீவுகளை விடுத்து தரைவழிப் பாதைப் பாடசாலைகளில் சீரான ஆசிரிய வளப்பகிர்வு உள்ளதா என்றால் அதில்தான் பலமுறைப் பாடுகள் கிளம்பியுள்ளன. இதற்கு அதிகார வர்க்கம் பதில் சொல்லியே ஆக வேண்டும். ஆதாரங்களை வைத்தே இந்தக் கட்டுரை வெளிவருகின்றது.

புங்குடுதீவில் உள்ள ஓர் பாடசாலையில் நாலு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களும், 3 பயிற்றப்பட்ட நடன ஆசிரியர்களும் உள்ள அதேநேரம் ஒரு ஆரம்ப பிரிவு பயிற்றப்பட்ட ஆசிரியர் மாத்திரமே உள்ளார். இது தரம் 1- 11 வரை உள்ள பாடசாலை ஆகும். இதேவேளை அந்த வலயத்தில் உள்ள வேறு பாடசாலையில் ஆங்கிலத்திற்கும் நடனத்திற்கும் ஆசிரியர்கள் இல்லை. ஆழமாக இதனை ஆராய்ந்து பார்த்தால் எமது கல்விப் புலத்தின் தொய்வுநிலை வேதனைக்குரியது.

இது மாத்திரமல்ல அதே பாடசாலையில் நடந்த சம்பவம். அடுத்த வருட நேர சூசிக்காக ஆசிரியர்களைத் தயார் படுத்தும் போது இதுவரை காலமும் ஆரம்பப் பிரிவில் கற்பித்து செயலமர்வுகளுக்கு ஆரம்பப்பிரிவு சார்பாகப் பங்கெடுத்த ஆசிரியர்கள் அனைவரையும் இடைநிலைக்கும் இடைநிலையில் கற்பித்த ஆசிரியர்களை ஆரம்பப் பிரிவுக்கும் மாற்றி நேர சூசி போடப்பட்டுள்ளது. இது என்னவென்று புரியவில்லை. பயிற்சி, அனுபவம், பயன்பாடு என்பதன் அர்த்தம் என்ன? இதில் பகடைக்காய்கள் பிள்ளைகளா? ஆசிரியர்களின் சந்தோஷங்கள், சுக போகங்கள், அதிபர் ஆசிரியர் உறவுகளுக்காக பாடசாலைகளா? பிள்ளைகளின் கல்விக்காக பாடசாலைகளா என்ற கேள்வி எழுகிறது.

எமது சமூகத்தில் இனம் சந்ததியினர் பல வழிகளில் பின்னோக்கியுள்ளனர். சமூகச் சீர்கேடுகள், பொருளாதாரப் பின்னடைவு, குடும்பப் பிரச்சினைகள் என பல முனைகளில் இவர்களின் மேல் கணைகள் தொடுக்கப்படுகின்றன. இதில் கல்விச் சமூகத்தவர்களாகிய நாங்களும் இவ்வாறு பொறுப்பற்றுச் செயற்பட்டால் எதிர்காலச் சந்ததியினரின் எதிர்காலம் எங்கு போகும். மக்களுக்குச் சேவை செய்யவே அரச ஊழியர்கள். மாணவ சமூகத்துடன் நிதானமாக இருங்கள். எனவே இந்த ஆசிரியர்கள் வளப் பகிர்வு விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ✱

■ ஆர்.கே. மேனன், ஆசிரியர்

# சாவகச்சேரியிலிருந்து யாழ். வரை ஏ-9 வீதி சேதம்; பயணிகள் அவலம்

தென்மராட்சி, டிசெம். 12

சாவகச்சேரியிலிருந்து யாழப்பாணம் வரையான ஏ 9 வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக் குகின்றனர்.

15 கிலோ மீற்றர் நீளமு டைய இந்த வீதியில் நாளாந் தம் நூற்றுக் கணக்கான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுவருகின்றன. இந்த நிலையில் குறித்த வீதியில் வாகனங்களைச் செலுத்தமுடியாத நிலையில் சாரதிகள் சிரம மடைந்து வருகின்றனர்.


குறித்த 15 கிலோ மீற்றர் தூரத்தில் வீதி அகலிப்பு பணிக்காக 20 இடங்களில் மதகுகள் புனரமைக்கும் பணிகளும் இடம் பெற்று வருகின்றன.

இவற்றில் 14 இடங்களில் வீதி வெட்டப்பட்டு புதிய மதகுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த மதகுகள் புனரமைக்கும் இடங்களில் சைக்கிளில் செல்வோர் கூட பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சில பகுதிகளில் உடைந்த பகுதி களை தார்க் கலவை யிட்டு அடைக்கும்பணியை வீதி அபவி ருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் பல பகுதிகளில் காணப்படும் குன்றுகளால் வாகனங்களுக்கு பாதிப்புகள் ஏற்படுவதாகவும் சாரதிகள் தெரிவித்தனர். (ம-207)

# 'புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை' நூல் வெளியீடு





யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் ''புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை'' தொடர்பான ஆய்வு நூலின் தமிழாக்க நூல்வெளியீட்டுவிழாநேற்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் நூலின் முதற்பிரதியை வடமாகாண பிராந்திய சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்டு வைக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி பிரசன்னாகூரே பெற்றுக் கொண்டார்.


அதனைத் தொடர்ந்து இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் பொதுமக்களின் நலன் கருதி புகையிலை சார் உற்பத்திப் பொருளை விற்பனை செய்யாத சகல உணவகங்களினதும், பல சரக்கு கடை உரிமையாளர்கள் சுகாதார திணைக்களத்தாலும், மதுவரித் திணைக்களத்தாலும் நற்சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட உரிமையாளர்களாக சுமார் 33 வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டன. தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை தொடர்பான கலந்துரையடல் நிகழ்ந்தது.

இந்நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலா ளர் எம்.ஹால் டீன், வடமா காண சுகாதார சேவைகள் பணிப்பாளர்வைத்திய கலா நிதி ஆர்-யூட், மதுவரித் திணைகள அதிகாரி சோதி நாதன் மற்றும் வர்த்தகர்கள் திணைக்கள உத்தியோகத் தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-311)

## மரண அறிவித்தல்

### முத்தையா பாலசுந்தரம் (இராசா)



இணுவில் மேற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும்கொண்ட முத் தையா பாலசுந்தரம் (10.12.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - அன்னமுத்து தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - தங்கரத்தினம் தம்பதியரின் மூத்த மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிவசுந்தரம் ஆகியோரின் சகோதரனும், சோபிதா (கொழும்பு), மீரா (பிரான்ஸ்), துஷ்யந்தி, எழிலன், தர்மினி, தர்மரூபன் ஆகியோரின் தந்தையும், சிறிகாந்தன் (சாணு டிஜிற்றல் கலர் லாப், கொழும்பு), கவிசுதன் (பிரான்ஸ்), காந்தீபன் (கொழும்பு), சுரேந்திரன் (A.S.S. பாம்) ஆகியோரின் மாமனும், பிரவின்ஜாவின் அன்புப் பேரனும், அமரர் முத்துக்குமாரசாமி மற்றும் விமலராசா, யோகராசா, ஆனந்தராணி, விசியராணி, கமலராணி, அம்பிகை, தவராசா, அழகரத்தினம், தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாப்பாத்தோட்ட ஒழுங்கை,
இணுவில் மேற்கு. (11533) (2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிங்கம்ஸ் பார்மசி,
கோண்டாவில். (11532)(2-6-)

கௌரவ கலாபூஷணம் விருதுபெற்ற
சங்கீதபூஷணம் கலைஞானச்சுடர்
**V. சிவஞானசேகரம்**
(St.Johns College Rtd Music Teacher)
அவர்கள் மேன் மேலும் விருதுகள்
பெற்று நலமுடன் வாழ இறைவனை
வேண்டி வாழ்த்துகின்றோம்.

Dr.V.ஜெகறூபன்
நாட்டியக்கலைமணி
திருமதி ஜனீத்திரா ஜெகறூபன்.

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

வடமராட்சி, டிசெ.13

நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி கரவெட்டிப் பிரதேச சபை அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை புதன்கிழமை தவிர நாளை மறுதினம் வரை இந்தப் பணி தொடர்ந்து இடம்பெறும். நாளை மறுதினம் வியாழக்கிழமை மின்சாரத்தில் இயங்கும் தராசுகளுக்கு முத்திரை இடப்படும்.

கரவெட்டிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தை வியாபாரிகள், தனியார் வர்த்தகர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு இவ்வாண்டுக்கான முத்திரையே இட்டுக்கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளனர். (த- 236)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### நடராஜா ராஜீவன் (LLB)

வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த பதில் நீதிவானும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமான அ.க.நடராஜா அவர்களின் சிரேஷ்ட புதல்வன்

**நடராஜா ராஜீவன் (LLB)**

அவர்கள் இன்றைய தினம்(13.12.2011) இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னி லையில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்வதை யிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*திறந்த பல்கலைக்கழக " சட்டமாணி" சாதனையாளன்!*
*சிறப்புறு சட்டத்துறையின் விசேட பிரிவாம் ' காணிச் சட்டத்தில்'*
*திறமையுடன் புலமையை வெளிக்கொணர்ந்து - அப்பிரிவில்*
*நிறைந்த சித்தியுடன் ' தங்கப்பதக்கத்தையும்'*
*தட்டிக்கொண்ட தன்னிகரில்லாளன்! - நிற்க*
*இலங்கை சட்டக்கல்லூரியிலும் இணைந்து*
*துலங்கிய சட்டப்புலமையால் -மேலும்*
*சீலமுடம் 'சிறப்புத்தேர்ச்சி' பெற்ற புலமையாளன்!*

*(11490)(3.6.7)*

நடராஜா ராஜீவன் அவர்கள் மேன்மேலும் பல சாதனைகளைப் பெற்று நிறைவான சேவையை வழங்க எல்லாம் வல்ல வதிரி உல்லியனொல்லை அம்பாளின் நல்லாசிகள் வேண்டி, மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மு.ச.சுப்பிரமணியம்(மகான்), திருமதி புஸ்பராணி சுப்பிரமணியம்

வதிரி,கரவெட்டி.

# இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவோம்

## தென்னிலங்கைப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.13

இடம்பெயர்ந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம் என்று தென்னிலங்கையில் இருந்து வந்த பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியளித்தனர்.

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு நீர்கொழும்பு மீனவ இயக்கத்தின் ஏற்பாட்டில் இனங்களுக்கான சுதந்திரம் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக வடக்குக் தெற்கு மக்களுக்கு இடையிலான கலந்துரையாடல் அண்மையில் மருதனார் மடம் விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மற்றும் தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த பல் வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் யுத்தத்தால் இடம் பெயர்ந்து இன்னும் மீள்குடியமர்த்தப்படாத மக்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் விதவைகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

இதன் போது வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடம்பெயர்ந்து பல வருடங்கள் கழிந்தும் மீளக் குடியமர்த்தப்படாத மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக வடக்கு அமைப்புக்களின் பிரதிநிதிகள் தென்னிலங்கையில் இருந்து வந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

அதன் பின் கருத்துத் தெரிவித்த தென்னிலங்கையில் இருந்து வந்த பிரதிநிதிகள் இது தொடர்பாக தென்னிலங்கை சென்ற கூடன் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்துவதாகவும் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று கையளிக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்.

விதவைகள், சிறுவர்களின் வாழ்வு மேம்பட உரிய அழுத் தங்களைக் கொடுக்க அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தை சேர்ந்த 15 மாவட்டங்களின் பிரதிநிதிகள் மற்றும் தொண்டர் அமைப்புக்களின் பிரதி நிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தென்னிலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-319)



இணுவில் ஸ்ரீராம் ஜிம் பயிற்சியாளர்கள் கடந்த சனிக்கிழமை இரத்ததானம் செய்தனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் இரத்ததானம் வழங் கினர்.

# தொழிற்பயிற்சி அதிகார சபையால் பயிற்சி நெறிகள்

நவாலி, டிசெ.13

காரைநகரில் இயங்கும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற் பயிற்சி நிலையத்தில் வீட்டு மின் இணைப்பு, மோட்டார் சைக்கிள் திருத்துதல் ஆகிய தொழிற் பயிற்சி களை வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரணதரம்வரை கற்றிருப்பதுடன் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இந்தப் பயிற்சிகள் யாவும் ஆறுமாத காலம் வரை நடைபெறும். இதில் இணைய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை நாளை புதன்கிழமை முன்னர் இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, தொழிற் பயிற்சி நிலையம் வலந்தலை காரை நகர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே. ஸ்ரீகுகன் கேட்டுள்ளார்.

பயிற்சிகள் யாவும் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-100)

# ரிசானாவை சட்டவிரோதமாக சவூதிக்கு அனுப்பிய சந்தேக நபர்களின் பிணை மனு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.13

கொலை குற்றம் தொடர்பில் சவூதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப் பெண்ணான ரிசானா நபீக்கை சவூதி அரேபியாவுக்குச் சட்டவிரோதமாக அனுப்பிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள 3 சந்தேக நபர்களின் பிணைமனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மூன்று சந்தேகநபர்கள் மீது சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிணை கோரியிருந்தார்.

எனினும் அந்த பிணைமனு கோரிக்கையை எதிர்வரும் 16 ஆம் திகதி பரிசீலிப்பதாகக் கூறிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ, அன்றைய தினம் இது தொடர்பில் கருத்து முன்வைக்குமாறு மனுதாரர்களுக்கு உத்தரவிட்டார். (வ)

# சிங்களப் பயிற்சி வகுப்புகள்

குருநகர், டிசெ.13

யாழ்.மாவட்டத்தில் சேவை புரியும் அரச ஊழியர்களுக்கான சிங்களப் பயிற்சி வகுப்புக்கள் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நாளை புதன்கிழமை தொடக்கம் 24 ஆம்திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடத்துப்பட உள்ளதாக வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனம் சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளது. இதில் பங்குபெற உள்ளவர்களின் பெயர்களைத் தமக்குத் தந்துதவுமாறு மேற்படி நிறுவனம் மேலும் கோரியுள்ளது. (வ-51)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் நீண்டகால உறுப்பினரும்
மன்றத்தின் சேமிப்புத்திட்ட உறுப்பினருமான

**குமாரசாமி அற்புதராஜா**

[உரிமையாளர் சிப்பி நகைத் தொழிலகம், சாவகச்சேரி]

அவர்கள் 12.12.2011 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் மறைவுக்கு எமது மன்றம் தனது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

# சாவகச்சேரியில் உர விநியோகம்

வரணி, டிசெ.13

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் வைத்து தற்சமயம் 3 ஆம் கட்ட மானிய உரம் வழங்கப்படுகின்றது. விவசாய சம்மேளன பிரிவுகளின் பெயர் விவரமும் வருமாறு,

12 ஆம் திகதி சரசாலை வடக்கு, கச்சாய், 13 ஆம் திகதி மந்துவில் வடக்கு, கிழக்கு, குடமியன், 14 ஆம் திகதி தாவளை இயற்றாலை, உசன், 15 ஆம் திகதி கல்வயல், கெற்பேலி, 16 ஆம் திகதி மிருசுவில் தெற்கு, மிருசுவில் வடக்கு, 17 ஆம் திகதி இடைக்குறிச்சி, மந்துவில் மேற்கு, 19 ஆம் திகதி விடத்தற்பளை, சாவகச்சேரி நகரம், 20 ஆம் திகதி வரணி இயற்றாலை, வெள்ளாம்போக்கட்டி, 21 ஆம் திகதி நாவற் காடு, கரம்பகம், 22 ஆம் திகதி வரணி வடக்கு-மாசேரி, 23 ஆம் திகதி கரம்பைக் குறிச்சி, மீசாலை மேற்கு, 24 ஆம் திகதி நுணாவில் மத்தி, மிருசுவில் வடக்கு, 26 ஆம் திகதி நுணாவில் கிழக்கு, மண்டுவில், 27 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய விவசாய சம்மேளனங்கள் மேற்படி உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். (வ-122)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர்

**சுப்பையா சிவசுப்பிரமணியம்**

சிவபதமடைந்த செய்தி கேட்டு மிக வேதனை அடைகின்றோம். அவரின் இழப்பு எம் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆம்மா சாந் தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

கோண்டாவில் வடக்கு கலைவாணி சிக்கன கடன்
(11494)(3.6.7) வழங்கும் கூட்டுறவுச் சங்கம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண் மகிழ: 1932.02.12

கண் நெகிழ: 2011.11.13

வளலாயைப் பிறப்பிடமாகவும் கேணியடி,
திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி இரத்தினசபாபதி நாகம்மா**

கடந்த 13.11.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகப் பங்குபற்றியோருக்கும் உள்ளூர், வெளியூரிலிருந்தும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று [13.12.2011] செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அந்தியேட்டிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(11534)
(1,6,7)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**சோதி பற்றிக் (பெரியதம்பி)**



குருநகரைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சோதி பற்றிக் (பெரியதம்பி) 12.12..2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புச் சகோதரனும், அன்ரன் விஜயகுமார் (யா.மா.சபை), கார்மேல்மேகலா (யா/போ.வைத்தியசாலை), அனுஸ்ரா (ஆசிரியர் நீர்வேலி, விஜயரட்ணம் மகா.வித்தி), சியாமா, ராஜி, இயூஜின், சுபோ, யோசப் (யா.மா.சபை), அலெக்ஸ், நீல்பிரான், குயின்ரா (தொழிற்பயிற்சி அதிகார சபை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இமெல்டா, காலஞ்சென்ற அலெக்சியஸ், இராஜசெகரன் (ஓ.பெ.ஆசிரியர்), பிரபாகரன் (உரும்பி ராய்), ஜோணசன் (A/O, நோத்சீ ), ரவீந்திரன் (பிரான்ஸ்), பிரான்சிஸ்சேவியர், கௌசல்யா, சகுந்தலா (கன்னி யர்மடம் மகா.வித்தி, இளவாலை), கெலன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அனனாரின் பூதவுடல் இன்று (13.12.2011) செவ்வாய்க் கிழமை பி.ப.3மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித நீக் கிலார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி யின் பின்னர் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, சேமக்காலை வீதி,
நாவாந்துறை.

(11493) (2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

கனரக வாகன சாரதி ஒருவருக்கு வேலை தேவை

('A'class Laicence)
தொடர்புகளுக்கு
0214911274,0757602368
தொடர்புகளுக்கு சே.பிரபாகரன்

## வீடு வாடகைக்குத் தேவை

வெளிநாட்டு தம்பதியருக்கு நல்லூர் அல்லது யாழ்.நகரை அண்மித்த பகுதியில் இரண்டு அறைகள், சவர், சுடுநீர் உள்ள குளியலறை, Gass வசதிகளுடன் கூடிய நல்ல சமையலறை இல்லத் தளபாடங்களுடன் கூடிய வரவேற்பறை, தளபாடத்துடன் கூடிய உணவு அறை, போதியளவு வாடகை தரப்படும். ஆங்கிலத்தில் தொடர்பு:
Mr.Mark 0778550458
தமிழில் தொடர்பு: 0779996145

# ஒய்வுபெற்ற பெரியார்களின் அயரா முயற்சியில் வளர்ச்சி பெற்ற திருநாவலூர் சனசமூக நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

திருநாவலூரில் சனசமூக வளர்ச்சிக்காக நிதி வளத்தை அதிகரிக்கும் நோக்கில் இதன் ஒரு கட்டமாக நிலைய அங்கத்தவர்களிடையே ஆயுள் சந்தாவை சேகரிக்கும் தீர்மானம் கடந்த 1982 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஒவ் வொரு உறுப்பினர்களிடமிருந்தும் 100 ரூபா வீதம் ஆயுள் சந்தா சேகரிக்கப்பட்டது. இவ்வாறு சேர்க்கப்பட்ட நிதி திருநாவலூர் கிராமத்தில் வாழும் பெரியவர்களின் தொழில் வசதிக்காக சிலரிடம் பிரித்துக் கொடுத்து, அந்தப் பணத்துக்கு வட்டி பெறப்பட்டு வந்தது. இவ்வாறு ஆயுள் சந்தாவாக சேர்க்கப்பட்ட பணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வட்டிப்பணத்திலிருந்து சனசமூக நிலையத்துக்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள் எடுத்துப்போடும் நிலைக்கு மாற்றம் பெற்றது.

கடந்த 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் இடம் பெற்ற தீர்மானத்தின் பிரகாரம் நண்பர்களுக்கு மட்டும் என்ற அதிஷ்டலாபச் சீட்டு நடத்தப்பட்டது. இந்தச் சீட்டிழுப்பை வெற்றிபெற வைப்பதற்கு சனசமூக நிலைய இளைஞர்கள் அனைவரும் எறும்புகள் போல சுறுசுறுப்பாகச் செயற்பட்டு டிக்கற்றுக்களை ஒவ்வொரு வீட்டுப்படியேறி விற்பனை செய்தனர்.

இந்தச் சீட்டிழுப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற லாபத்தில் இருந்து கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தியதன் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி வளங்களையும் சேர்த்து சனசமூக நிலையத்துக்கென கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டது. தொலைக்காட்சிப் பெட்டியைக் கொள்வனவு செய்ததன் மூலம் இந்தப் பிரதேசத்தில் நாவலர் சனசமூக நிலையமே முதன் முதல் தொலைக் காட்சிச் சேவையை அறிமுகமாக்கிய பெருமையை தனதாக்கிக் கொண்டது.

இராமனுக்கு அணைகட்ட அணில்கள் தமது வால்களினால் மண்ணை நிரவி இராமர் பாலத்தை நிர்மாணிக்க உதவியதாக வரலாறு சொல்கிறது. இதே போல் திருநாவலூர் கிராமத்து இளைஞர்களும் நாவலர் சனசமூக நிலையத்தின் நிதிவளத்தை மென்மேலும் அதிகரிக்க ஏதாவது செய்ய வேண்டும். அதன் மூலம் சனசமூன நிலையத்தை உயர்த்த




வேண்டும் என்ற மன எண்ணமும், உணர்வும் உந்தப்பெற்று செயற்பட்டதை இந்தநேரத்தில் சுட்டிக்காட்டவேண்டும்.

தொலைக்காட்சிப் பெட்டிக் கொள்வனவின் பின்னர் இளைஞர்கள் நிலையத்துக்கான நிதிவளங்களை மேலும் அதிகரிப்பதற்கான சிந்தனையை மேயவிட்டனர். இந்தவேளையில் கிளிநொச்சிச் சந்தை வெங்காய விற்பனைக்குப் பெயர் பெற்றிருந்தது. வெளி மாவட்ட வியாபாரிகள், விவசாயிகள் கிளிநொச்சிச் சந்தைக்கு வந்து தமக்குத் தேவையான வெங்காயத்தைக் கொள்வனவு செய்வது வழக்கம். குடாநாட்டு விவசாயிகளும் தாம் அறுவடை செய்த வெங்காயத்தை லொறிகளில் ஏற்றிக் கொண்டு இரவு இரவாகக் கிளிநொச்சிக்குச் சென்று அவற்றைச் சந்தைப்படுத்தி கட்டுப்பணத்துடன் ஊர் திரும்புவது வழக்கம்.

இந்தச் சந்தர்ப்பத்தைக் கிராம இளைஞர்கள் பயன்படுத்தி இந்தக்கிராமத்திலும் அயல் கிராமங்களிலும் வெங்காயத்தைக் கொள்வனவு செய்து மூட்டைகளாகக் கட்டி லொறிகளில் கிளிநொச்சிச் சந்தைக்கு எடுத்துச் சென்று சந்தைப் படுத்தி வந்தார்கள். இந்த உழைப்பின் மூலம் ஒரு தொகை லாபத்தை இந்தச் சனசமூக நிலையம் பெற்றுக் கொண்டது. இந்தப்பணியை பலர் ஒன்று சேர்ந்து நிறைவு செய்த போதிலும் இ.மாணிக்கராசா, தா.தருமராசா, ந.மகேந்திரன், க.சூரியகுமார், பொ.சோமாஸ்கந்தன், ப.சண்முகலிங்கம், வ.கமலேஸ்வரன், தி.சிவஞானம், க.சிவகுமார், ந.சிவபாலன், த.சிவகுமார், தா.பரமானந்தராசா, தி.சிவ லிங்கம், அமரர் க.விஜயரத்தினம் ஆகிய நிலைய அங்கத்தவர்களின் பணிகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

நாவலர் சன சமூக நிலையத்தின் புத்தகப் பொறுப்பாளராக வ.ச.செல்வராசா, கடந்த 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டார். அவர் நூலகப் பொறுப்பாளராக நியமனம் பெற்றது நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது என்று குறிப்பிடவேண் டும். அந்தக் காலத்தில் வாராந்தப் பத்திரிகைகளில் வெளிவந்த அனைத்துத் தொடர் கதையும் அந்தந்த அத்தியாய ஒழுங்கின் பிரகாரம் தொகுத் துப் புத்தக மாகக் கட்டி, அதில் அவற்றை ஒட்டி புத்தக அலுமாரியை அவர் நிறைத்து வைத்தார். அத்துடன் இளைஞர்கள் சிரமதானப் பணி புரிந்து அதன் மூலம் ஈட்டிய பணத்தைப் பெற்று பல எழுத்தாளர்களின் புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் மூலம் இந்தச் சனசமுக நிலையத்தின் நூல் நிலையம் புது மெருகு பெற்றது. நூல் நிலைய வளர்ச்சியால் இரவல்கொடுத்து வாங்கும் நூலகப் பகுதி துரித வளர்ச்சி கண்டதொடு தமது கிராமத்த வர்களுடன் , அயல் கிராமத்தவரும் அங்கத்தவர்களாக இணைந்து நூல்களை இரவல் பெற்று பயன் பெற்றனர். இந்தக் காலப் பகுதியில் ஆயிரத்து 605 நூல்கள் நூல் நிலையத்தை அலங்கரித்தமை குறிப்பிடத்தக்கது. செல்வராசாவைத் தொடர்ந்து புத்தகப் பொறுப்பாளராகப் பதவி ஏற்ற செ.விநாயக மூர்த்தி இந்தப் பணியைச் சிறப்புற தொடர்ந்தார்கள் என்பதோடு சனசமூக நிலையத்தைச் சுத்தமாக வைத்திருப்பதிலும், பத்திரிகை, சஞ்சிகைகளை ஒழுங்கு படுத்தல் விடயத்திலும் அர்ப்பணிப்போடு செயற்பட்டார் என்பது கிராம மக்கள் அறிந்த விடயமாகும்.

நாவலர் சன சமூக நிலைய அங்கத்தவர்களான இளைஞர்களுக்கு மிகவும் பிடித்தமான பணி சிரமதானம் என்றால் அது மிகையாகாது. சிரமதானம் இன்று செய்திப்பத்திரிகைகளில் பெயர் வருவதற்காக செய் யப்படும் விளம்பரப் பணியாக மாறினாலும் இந்தச் சனசமூக நிலைய இளைஞர்கள் உடல் வருத்தம் பாராமல் மெய்வருந்தி பல சிரமதானப் பணிகளைச் செய்துள்ளனர். அரச நிதி மூலம் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சில அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடிப்பதற்காக நாவலர் சன சமூக நிலை யத்தின் சார்பில் ஒப்பந்தம் செய்து அந்த வேலைகளைச் சிரம தானப் பணி மூலம் மேற்கொண்டு பூர்த்தி செய்ததற்கான நிதியைப் பெற்று, அந்த நிதியை சனசமூக நிலைய நிதியத்துக்கு வழங்கினார்கள். அவ்வாறான பணியில் சுப்பர் மடம் பொது மயானம் திருத்தம், ஆனைவிழுந் தான் வெள்ள வாய்க்கால் திருத்தம், அம்பன் கமநல சேவை நிலைய கட்டட அமைப்பு, விளையாட்டு மைதான அமைப்பு எனப் பலவற்றை வரிசைப் படுத்திக் கூறலாம்.

### கர்ணன்

இந்தச் சனசமூக நிலைய வளர்ச்சியில் திருநாவலூர் கிராமத்தில் வாழ்ந்த அரச சேவையிலிருந்து ஒய்வு பெற்ற பல பெரியவர்கள் அக்கறையோடு செயற்பட்டு நிலையத்தை வளர்தெடுக்க தம்மாலான ஒத்துழைப்பை நல்க பின் நிற்கவில்லை. இந்த வரிசையில் ஏ.தாமோதரம், கு. சதாசிவம், பொ.நடராசா, க.சின்னத்துரை, சு.விஜயரத்தினம், வே. பசுபதி, செ. பொன்னம்பலம் ஆகியோர் பெயர் குறிப்பிடக்கூடிய பெருந்தகைகளாவர். இவர்களில் பலர் நிலையத்தின் தலைவராகவும், போசகராகவும், பொருளாளராகவும் கடமையாற்றி சனசமூக நிலையத்தை வளர்த்தெடுத்துள்ளனர்.

(தொடரும்)

## மரண அறிவித்தல்

### துரையப்பா ஸ்ரீதுரைராஜ்



சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தை (பாசல்) வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா ஸ்ரீதுரைராஜ் கடந்த 10.12.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா (பிரபல வர்த்தகர், நுவரெலியா) மற்றும் தெய்வராணி தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், திருமகளின் அன்புக் கணவரும், விபுசனின் அன்புத் தந்தையும், ஸ்ரீஈஸராஜ் (ஈசன்), ஸ்ரீதங்கபாமா (பாமா), ஸ்ரீதிருக்கேதீஸ்வரராஜ் (செல்வகுமார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரன்
ஸ்ரீதிருக்கேதீஸ்வரராஜ்
(செல்வகுமார்).

பெருமாள் கடவை
வீதி, அளவெட்டி. (சி/6850)(3.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
19★05★1973

இறப்பு
24★11★2010

அமரர்
தனபாலராஜா
மேனிகௌஷலா (சுசி)

பத்து மாதம் சுமந்து பெற்றாய் எம்மை
பத்து நிமிடம் கூட மறக்கவில்லை உன்னை
உதிரத்தையே பாலாக்கிப் பசி தீர்த்தாய் எமக்கு
எதைக் கொடுத்து பசி தீர்போம் நாம் உமக்கு
தூக்கத்தையே தியாகம் செய்தாய் எமக்கு
நாம் எதைத் தியாகம் செய்வோம் உனக்கு
அகிலத்தையே அறிமுகம் செய்தாய் எமக்கு
எம்மைத் தவிர எதை அறிமுகம் செய்வோம் உமக்கு
சுவர்க்கம் செல்ல நன்மை செய் என்றாய் எமக்கு
சுவர்க்கமே நீ தானே என்றோம் உமக்கு
இப்போது எம்மைத் தனியாய் விட்டு
நீ மட்டும் சுவர்க்கம் சென்று விட்டாயோ....

கோண்டாவில் மேற்கு,
ஸ்ரேசன் வளவு,கோண்டாவில்

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா தியாகராசா -
குடும்பத்தினர்.

(11290)(2-6)

## வீடு வாடகைக்கு

கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில் 3½ பரப்புடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து 500m தூரத்தில் அமைந்துள்ளது.
தொடர்பு: 0776544652

## காணி விற்பனைக்கு

மீசாலை மடத்தடி வீதியில் ஐயா கடையிலிருந்து ஏறத்தாள 200m தூரத்தில் நிலப்பரப்பு 10 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776090931

## 4 ஆம் ஆண்டின் நினைவலைகளுடன்...



மலர்வில்
03★08★1933

உதிர்வில்
27★11★2007

அமரர்
தம்பையா கார்த்திகேசு

வேராக நீர் இருந்தீர் விழாமல் நாமிருந்தோம்
நாளோடி மறைந்திடலாம் நம் உறவு நீள் கதைதான்
நாம் உம்மை இழந்து நான்காண்டு போனாலும்
நீர் இருப்பீர் நெஞ்சமதில் நாம் இருக்கும் நாள் வரைக்கும்

கைதடி மேற்கு,
கைதடி.

- குடும்பத்தினர்.

(11488)(2-6)

## முன்னாள் போராளிகள் அனைவரும் அடுத்த ஆண்டில் விடுதலை

கொழும்பு,டிசெ.13

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் அனைவரும் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் விடுவிக்கப்பட்டு விடுவார்கள் என்று அரசு தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் முன்னாள் போராளிகள் 700 பேர் 2012 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் விடுவிக்கப்படவுள்ளனர்.

இறுதிப்போரின்போது சரணடைந்த 11700 போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் போராளிகளின் புனர்வாழ்வுக்காக அரசு இந்த வருடம் மாத்திரம் 750 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (ச)

# தாய்நாட்டுக்கோ, இராணுவத்துக்கோ துரோகமிழைக்கமாட்டார் பொன்சேகா

## அனோமா பொன்சேகா உறுதி

கொழும்பு, டிசெ.13

தாய்நாட்டுக்காக தனது உயிரைக்கூட தியாகம்செய்யும் குணவியல்பு கொண்ட எனது கணவர், தனது உயிரிலும் மேலாக நேசிக்கும் தாய்நாட்டுக்கோ அல்லது இராணுவத்துக்கோ ஒருபோதும் துரோகம் இழைக்க மாட்டார்.

சர்வதேசத்திற்குச் சென்றாலும் தாய்நாட்டுக்காகச் செல்வாரே தவிர, தனிப்பட்ட நோக்கங்களுக்காக அவர் அங்கு செல்ல மாட்டார்.

- இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவை விடுதலை செய்தால், இலங்கையில் யுத்தக்குற்றம் இடம்பெற்றது என்று சர்வதேசத்திடம் கூறி ஒருசாட்சியாக அவர் மாறுவார் என அனோமா பொன்சேகாவிடம் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமன்னிப்பு மட்டுமல்ல, வேறு எந்தவொரு விடயமாக இருந்தாலும், நானும் எனது மகள்மார்களும் கலந்தாலோசித்து ஒரு முடிவை எடுத்தாலும் இறுதி முடிவை அவரே எடுப்பார்.

கணவருடன் கலந்துரையாடுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அவருடன் கலந்துரையாடாமல் எமக்கு எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாது.

ஐ.தே.க. முன்னெடுத்த தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நான் கலந்துகொள்ளாததற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றை நான் அடியோடு நிராகரிக்கின்றேன்.

எமது கட்சி எடுத்த பொது தீர்மானத்திற்கிணங்கவே நான் செயற்பட்டேன். இதில் வேறு எந்தவித உள்நோக்கமும் இல்லை.

எதிர்க்கட்சிகள் ஒன்றாக இணைந்து செயற்படுதல் அவசியம். எனது கணவரின் விடுதலைக்காக மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன்செயற்படவேண்டும்.

எனது கணவர் தனது உயிரிலும் மேலாக தாய்நாட்டையும், இராணுவத்தையும் நேசிக்கின்றார். தாய்நாட்டுக்காக அவர் தனது உயிரைக்கூட தியாகம் செய்யும் பண்புடையவர். நாட்டுக்காக தான் செய்ய வேண்டியவற்றை சரிவர அவர் செய்வார்.

இராணுவத்துக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அவர் ஒருபோதும் செயற்பட மாட்டார். சர்வதேசத்தை நாடிச் சென்றாலும் தாய்நாட்டுக்காகச் செல்வாரே தவிர, தனது தனிப்பட்ட நோக்கங்களுக்காகச் செல்ல மாட்டார். நாம் ஒருபோதும் மன்னிப்புக்கோரி மன்றாடப் போவதில்லை. அவ்வாறு செய்தால் குற்றத்தை நாமே ஒப்புக்கொண்டது போலாகிவிடும் - என்றார். (ஒ-சி)

## பண்டிகைக் காலத் திருட்டை தடுக்க விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, டிசெ.13

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான விசேட பாதுகாப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க பிரதேசங்களை இலக்காகக் கொண்டு இந்த பாதுகாப்புத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பண்டிகைக்கால விசேட பாதுகாப்புத் திட்டத்திற்காக மேலதிகமாக ஐயாயிரம் பொலிஸாரை இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையர்களிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக விசேட பொலிஸ் குழுக்களை ஈடுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## அடுத்த மாதம் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு,டிசெ.13

இலங்கையில் அமைச்சரவை மாற்றம் மற்றும் புதிய பிரதியமைச்சர்களை நியமிக்கும் நடவடிக்கை அடுத்தமாதம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதினைந்து அரச நிறுவனங்களுக்கான புதிய தலைவர்கள் நியமிப்புக்கான பட்டியலும் அரசால் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் அடுத்த வாரமளவில் அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரச நிறுவனங்களுக்கு அடுத்த மாதத்தில் புதிய தலைவர்களை நியமிக்கும் பட்டியலும் அரசால் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பதினைந்து நிறுவனங்களுக்கு, புதிய தலைவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும், அவற்றை விட மேலும் 12 நிறுவனங்களுக்கு தலைவர்களை நிய மிப்பது தொடர்பாகவும் அரசு ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## நுகர்வோர் சட்டத்தை மீறினால் நடவடிக்கை

கொழும்பு, டிசெ.13

பண்டிகைக் காலங்களில் நுகர்வோர் சட்டங்களை மீறுகின்ற வர்த்தகர்களை கைது செய்வதற்கான சுற்றி வளைப்பு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை தீர்மானித்துள்ளது

மாவட்ட ரீதியாக சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்கள் மூலம், நுகர்வோர் சட்டங்களை மீறிய வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் விவகார அதிகார சபை சுமார் 10 கோடி ரூபாவை அபராதமாக அறவிட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கணபதிப்பிள்ளை குணரத்தினம்
(சிறி, ராசன்)
(அனுசா ரான்ஸ் போட் உரிமையாளர்)
திதி: திருதியை 13.12.2011

மண்ணில்: 20.06.1958
விண்ணில்: 24.11.2010

நேற்றுப்போல் இருக்கிறது நீங்கள் இருந்த நினைவுகள்
ஆண்டொன்று சென்றாலும் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்று அழைப்பதற்கு நீங்கள் இல்லையே
எங்கள் மனதில் உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாசத்தின் தலைவரை ஓராண்டு நிறைவில் நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி: 15/14, சங்கிலியன் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
தற்காலிக முகவரி: 100, றோயல் பேர்ல் கார்டின், அல்விஸ் ரவுண், வத்தளை.

(11489)(1.6)

ஓராண்டு நினைவின் நிறைவில்!



தோற்றம் 02.04.1927
மறைவு 24.11.2010

செல்லத்துரை அன்னலிங்கம்
(இளைப்பாறிய யாழ். காணி மேலதிக மாவட்டப் பதிவாளரும், முன்னாள் உடுவில் பிரிவு - விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், ஆங்கில மொழி பெயர்ப்பாளரும்)

பாரினில் பவனி வந்த காலங்கள்,
பசுமை நினைவுகள், கனவாகிப் போய்
வருடங்கள் ஒன்றாக ஓடி மறைந்தது.
வருடும் மனத்திரையில் நடமாடிய நினைவுகள்
நிழலாகிப் போனதென்று நித்தம் நித்தம்
நினைக்கின்றோம்
உம் நினைவுகள் என்றும் எம்மோடு.

'கணேசன் கருணை''
மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(11032) (3-6-9)

Computer Express
Institute of Information Technology

விடுமுறைக்கால விசேட கட்டணக் கழிவு
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
20-12-2011 முன்னர் பதிவுகளை மேற்கொள்பவருக்கு பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

இறுதி ஆண்டில் ஓர் அரிய சந்தர்ப்பம்
அனுமதிக்கு முந்துங்கள்

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I 14.12.2011 :- 9 am or 3Pm Batch II 16.12.2011 :- 9 am or 3Pm
Batch III 17.12.2011 :- 9 am or 3Pm Batch IV 18.12.2011 :- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

# லோக்பால் பிரேரணைப் போராட்டத்தில் எதிர்க்கட்சிகளும் இணைய வேண்டும்

## அன்னா ஹசாரே வேண்டுகோள்

டில்லி, டிசெ.13

இந்தியாவில் வலுவான லோக்பால் பிரேரணையை வலியுறுத்தி நடக்கும் போராட்டத்தில் எதிர்க்கட்சிகளும் இணைய வேண்டும் என்று அன்னா ஹசாரே கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவில் வலுவான லோக்பால் பிரேரணையை வலியுறுத்தி டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் நேற்று முன்தினம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை அன்னாஹசாரே மேற்கொண்டார்.

இதில் பாரதீய ஜனதாக் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உட்பட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பலர் இந்த உண்ணாவிரதத்தில் பங்கேற்று வலுவான லோக்பாலுக்கு ஆதரவாகப் பேசினார்கள்.

இவர்களைத் தொடர்ந்து ஹசாரே பேசுகையில்:

வலுவான லோக்பால் பிரேரணையைக் கொண்டுவர மத்திய அரசு தயக்கம் காட்டி வருகிறது. உங்களுக்கு (எதிர்க் கட்சிகள்) நாடாளுமன்றத்தில் போதிய உறுப்பினர்கள் இல்லை என்பதால் லோக்பால் பிரேரணை தொடர்பாக தெரிவிக்கப்படும் உங்கள் யோசனைகள் நிராகரிக்கப்படுகின்றன.

எனவே நீங்களும் (எதிர்க் கட்சிகள்) எங்களுடன் இணைய வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து வீதிகளில் இறங்கி பெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம். அப்போதும் எமது கோரிக்கைகளை மத்திய அரசு நிராகரிக்குமா என்று பார்த்து விடலாம். நாட்டில் உள்ள சிறைகளில் ஓர் இடம் கூட வெற்றிடமாக இல்லாத வகையில் எமது போராட்டம் இருக்க வேண்டும். மேலும் இந்தியாவில் நடக்கும் லஞ்ச, ஊழலுக்கு எதிரான போராட்டத்திலும் மக்கள் பங்கேற்க வேண்டும்.



தற்பொழுது மத்திய ஆட்சியில் எந்த முடிவும் எடுக்க முடியாதவராக பிரதமர் மன்மோகன் சிங் உள்ளார். பிரதமருக்கு கீழ் இருப்பவர்கள் யாரும் அவரது பேச்சைக் கேட்டு நடப்பதும் இல்லை. மூன்று, நான்கு பேர் தாங்கள் தான் பிரதமர் என்ற எண்ணத்தில் உள்ளார்கள்.

இந்தியாவில் பிரதமராகி விட வேண்டும் என்ற ஆசை ராகுல் காந்திக்கு உள்ளது. ஆனால் ஒருநாள் மட்டும் குடிசையில் தங்குவது அதற்குப் போதாது. எனக்கு ராகுலுடன் எந்த மோதலும் இல்லை. அவரும் இளைஞர்தான், பிரதமராக வேண்டும் என்ற கனவு காணலாம். ஆனால் மாதக்கணக்கில் குடிசைகளில் தங்கினால்தான் ஏழை மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மக்களின் விருப்பத்துக்குப் பணியத்தான் வேண்டும். தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்காகப் பணியாற்றுவது தான் மக்கள் பிரதிநிதிகளின் கடமை.

இந்தப் போராட்டத்தில் பெரும் திரளாக வந்து கலந்து கொண்டுள்ள இளைஞர்களுக்கு நன்றி. இளைய தலைமுறையின் சக்தி நாட்டில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது - என்றார் அவர். (வ)

## மன்மோகன்சிங் ரஷ்யாவுக்கு பயணம்

பிரதமர் மன்மோகன்சிங் நாளை மறுதினம் ரஷ்யா தலைநகர் மொஸ்கோவுக்கு பயணமாகிறார். அவருடன் முக்கிய அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவும் செல்கிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி அங்கு இரு நாட்டு குழுவினரின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் இந்தியக் குழுவுக்கு பிரதமர் மன்மோகன்சிங் தலைமை வகிக்கிறார்.

ரஷ்ய குழுவுக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ் தலைமை வகிக்கிறார்.

இந்த உச்சி மாநாட்டில் அணு சக்தித் துறை, ராணுவ பாதுகாப்பு, வர்த்தக உறவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படவுள்ளது.

இந்தத் துறைகளில் இரு நாடுகளின் உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகச் சுமார் 10 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும். (வ)

## திருச்சிக்கு வந்த பயணியிடம் தங்க பிஸ்கட்டுகள் பறிமுதல்

திருச்சி, டிசெ.13

சிங்கப்பூரில் இருந்து திருச்சிக்கு வந்த பயணியிடம் இருந்து 400 கிராம் மதிப்புள்ள தங்க பிஸ்கட்டுகள் 4 பறிமுதல் செய்யப்பட்டன.

திருச்சி மண்ணச்ச நல்லூரைச் சேர்ந்த பாலசந்திரன் என்பவர் சிங்கப்பூரில் இருந்து கொழும்பு வழியாக ஸ்ரீலங்கன் ஏர்வேஸ் விமானத்தில் திருச்சிக்கு வந்தார்.

திருச்சி விமான நிலையத்தில் உடைமைகளைச் சோதனை இட்டபோது, இவர் தலா 100 கிராம் மதிப்புள்ள தங்கக்கட்டிகள் 4 கொண்டு வந்தது தெரியவந்தது. இதற்கான முறையான ஆவணங்கள் இல்லாததால், இவை பறிமுதல் செய்யப்பட்டதாக அமுலாக்கத்துறையினர் கூறினர். (வ)

## தமிழகத்தில் சட்டத்தரணிகள் நீதிமன்ற புறக்கணிப்பு

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசின் போக்கைக் கண்டித்து தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டத்தரணிகள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டனர். புதிய அணை கட்ட வேண்டும் என்று கேரள சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கண்டித்தும், இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிடக் கோரியும் ஒரு நாள் நீதிமன்ற புறக்கணிப்பில் அவர்கள் ஈடுபட்டனர்.

மாநிலம் முழுவதும் 60 ஆயிரம் சட்டத்தரணிகள் பணிக்குச் செல்லாமல் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்திய நதிநீர் ஆணையத்தின் கட்டுப்பாட்டை மீறி கேரள அரசு செயற்படுவதாகவும் சட்டத்தரணிகள் கூறியுள்ளனர்.(வ)

## டிசெ.17 இல் தி.க. ஆர்ப்பாட்டம்

சென்னை, டிசெ.13

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையைக் காக்க வலியுறுத்தியும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் நுழையும் ஆபத்தைத் தடுக்க வலியுறுத்தியும் மதுரையில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திராவிடர் கழகப் பொதுச் செயலர் வீரமணி அறிவித்துள்ளார்.(வ)



கேரள அரசின் முல்லை பெரியாறு அணை விவகாரத்தை கண்டித்து தி.மு.க.தலைமையில் திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது.

# தமிழக மக்கள் வாழ்வுடன் விளையாட வேண்டாம்

## கேரளாவுக்கு ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, டிசெ.13

அணை உடைந்துவிடும் என் பொய் பிரசாரம் செய்து தென் தமிழக மக்களின் வாழ்க்கையோடு விளையாட வேண்டாம் என்று தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டா லின் தெரிவித்தார்.

முல்லைப்பெரியாறு அணை விவ காரம் தொடர்பாக கேரளாவில் தமிழர்கள் தாக்கப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து தி.மு.க., சார்பில் நேற்று தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தாம்பரத்தில் நடக்கும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஸ்டாலின் கலந்து கொண்டுள்ளார்.

இந்த போராட்டத்தின் போது பேசிய ஸ்டாலின்,

அணை உடைந்து விடும் என்று தொடர்ந்து பொய் பிரசாரம் செய்யப்படுகிறது. கேரளாவில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலை மனதில் வைத்து முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தை கேரளக் கட்சிகள் எழுப்புகின்றன. தென் தமிழக மக்களின் வாழ்க்கையோடு எவரும் விளையாட வேண்டாம் என்று கேரளாவை கேட்டுக்கொள்கிறோம். இரு மாநில எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார் அவர். (வ)

# கேரளாவில் தாக்குதல்கள் தொடர்வதால் உள்ளூர் கோயில்களை நாடும் ஐயப்ப பக்தர்கள்

பெரியகுளம், டிசெ.13

கேரளாவில் தமிழக ஐயப்ப பக்தர்கள் மீதான தாக்குதல் தொடர்வதால், சபரிமலைக்கு மாலை போட்டுள்ள தமிழக ஐயப்ப பக்தர்கள் உத்தம பாளை த்தைத் தொடர்ந்து தற்போது பெரியகுளத்தில் உள்ள தர்ம சாஸ்தா ஐயப்பன் கோயிலில் குவியத் தொடங்கியுள்ளனர்.

குமுளி வழியான வாகனப் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்திலிருந்து கேரளாவுக்குச் செல்லும் ஐயப்ப பக்தர்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றனர்.

இதையடுத்து தமிழக ஐயப்ப பக்தர்கள் மனதில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சபரிமலைக்குப் போவதற்குப் பதில் உத்தமபாளையம் அருகே உள்ள சண்முகா நதியை அண்மித்துள்ள ஐயப்பன் கோயிலுக்கு பலர் சென்று விரதத்தை முடித்து மாலையைக் கழற்றி வருகின்றனர்.

அதேபோல, தற்போது பெரியகுளத்தில் உள்ள தர்ம சாஸ்தா ஐயப்பன் கோயிலுக்கும் பக்தர்கள் பெருமளவில் வர ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கோயிலிலும் சபரிமலை கோயிலைப் போலவே தினசரி நெய் அபிஷேகம் உள்ளிட்டவை நடத்தப்படுகிறது.

இதனால் குமுளி வழியாக சபரிமலைக்குச் செல்லமுடியாமல் தவிக்கும் பக்தர்கள் பெரியகுளத்திற்குச் சென்று இந்தக் கோயிலில் விரதத்தை முடித்து வருகின்றனர்.

இந்தக் கோவிலுக்கு நாளுக்கு நாள் பக்தர்கள் வருகை அதிகரித்து வருவதாகக் கோயில் நிர்வாகம் கூறுகிறது.

இதற்கிடையே, தமிழகத்தின் பல பகுதிகளிலும் கேரளாக்காரர்களுக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

திருப்பூரில் அவினாசி நெடுஞ்சாலை உள்ளிட்ட பல பகுதிகளில் 50இற்கும் மேற்பட்ட ஐயப்ப பக்தர்கள், கேரளத்தவரின் கடைகளுக்குச் சென்று அவற்றை மூடுமாறு கூறி வருகின்றனர். இதையடுத்து நூற்றுக்கணக்கான கடைகள் மூடப்பட்டன.

இதேபோல மன்னார்குடி அருகே உள்ள உள்ளிக்கோட்டையில் கேரள அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. (வ)

# முல்லை பெரியாறு அணைக்கு டிசெ.16 இல் நடைபயணம்


## திருமாவளவன் அறிவிப்பு

முல்லைப் பெரியாறு பிரச்சினையையொட்டி தேனியில் இருந்து முல்லை பெரியாறு அணைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபயணம் மேற்கொள்ளப்படுவதாக கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து திண்டிவனத்தில் செய்தியாளர்களிடம் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் :

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் மத்திய அரசு மெத்தனம் காட்டி வருவது கண்டிக்கத்தக்கதாகும். தமிழகத்தின் நீர் உரிமையை வழங்க ஆவன செய்ய வேண்டும். இதனை வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எனது தலைமை யில் எதிர்வரும் 16 ஆம் திகதி தேனியில் இருந்து முல்லைப் பெரியாறு அணையை நோக்கி நடைபயணம் மேற்கொள்ளப்படுகிறது - என்றார் அவர். (வ)

# காணி, நிதி விடயங்களில் ஆளுநரின் அட்டகாசத்தை ஏற்க முடியாது என்கிறார் சரவணபவன் எம்.பி.!



நடாளுமன்றம், டிசெ.13

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி வடக்கில் நடத்திவரும் தனிக்காட்டு ராஜ்ஜியம் குறித்து நாடாளுமன்றில் காரசாரமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

பொதுமக்கள் இருப்பிடம் இன்றித் தவிக்கையில், ஆளுநர் தனக்கு மாவட்டத்துக்கு ஒரு சொகுசு மாளிகை அமைத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கிலுள்ள அதிகாரிகள் அனைவரையும், ஆளுநர் சாதாரண சிப்பாய்கள் போன்று நடத்துகிறார் என்றும் தெரிவித்தார்.

அவரது உரையின் முக்கியமான சாராம்சம் வருமாறு:

ஜனாதிபதி, மாகாணசபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் செயற்பாடுகளை மறுபரிசீலனை செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளார். மாகாண சபைகள் தங்களது பங்களிப்பையும் பொறுப்புகளையும் கொண்டு சுயமாகச் செயற்படுவதை அரசு விட்டுக்கொடுக்கத் தயாரில்லை. அவற்றினை வழக்கம் போல இந்த வருடமும் அரசு தேசிய அமைச்சுகளுக்கு வாரி வழங்கியுள்ளது. விவசாயம், கால்நடை, கடற்றொழில், விளையாட்டு ஆகிய அமைச்சுகளுக்கு பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், முதியோர் நலன், மாகாண பாதைகள், நீர் விநியோகம், நீர்ப்பாசனம் போன்ற மத்திய அமைச்சுகளுக்கு வழங்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ரீதியில் தயாரிக்கப்பட்ட தேசிய வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் அதிகாரப் பரவலாக்கலைப் பலவீனப்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த சாதனமாக அதனை மாற்றியுள்ளது.

அரசமைப்பு அதன் சட்டதிட்டங்களை நடைமுறைக்கு சாத்தியமான வழியில் அமுல்செய்ய சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என இந்தச் சபையிடம் நான் வேண்டுகோளொன்றை சமர்ப்பிக்கிறேன்.

அரசு ஒரு கையால் கொடுத்துவிட்டு மறுகையால் அதைப் பறித்துக்கொள்ளும் கலாசாரத்தை நிறுத்தவேண்டும். மாகாணசபைகளின் அதிகாரங்கள் மேம்படுத்தப்பட்டு, அந்தச் சபைகள் தங்களது வல்லமைகளையும் பொறுப்புகளையும் அபிவிருத்தி செய்துகொள்ள இடமளிக்க வேண்டும். அவை மேலும் பலவீனமாவதைத் தடுக்கவேண்டும்.

அதிகாரப் பரவலாக்கலை நோக்கி அரசு கடப்பாடுடன் எடுக்கும் முயற்சிகளின் நம்பகமான சமிக்ஞைகளை நாம் எதிர்பார்க்கின்றோம். மாகாண சபைகளினதும் உள்ளூராட்சி சபைகளினதும் சட்டபூர்வமான அதிகாரங்களை சிதைக்கும் கைங்கரியத்தில் மட்டுமே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு ஈடுபட்டுள்ளது. மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உரிமைகளைக் காப்பாற்றும் ரீதியில் அமைச்சரிடம் இருந்து இதுவரை உறுதியான வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை.

வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு சதவீதத்துக்கும் குறைவான நிதியை மட்டுமே ஒதுக்கிவிட்டு மாகாண சபைகள் வெள்ளை யானைகள் என்று எவ்வாறு கூறமுடியும்? இந்த முறை வரவு-செலவுத்திட்டத்தைக் கூர்ந்து அவதானித்தால், அரசில் உள்ள பல வெள்ளை யானைகளை நீங்கள் கண்டுகொள்ள முடியும்.

உண்மையில், அரசின் மொத்த செலவினங்களுடன் ஒப்பிடும்போது மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மிகமிக சொற்பம். அதுவும் பொதுமக்களின் பணம்தான். அந்தப் பணம் நன்மையான வழியில் செலவளிக்கப்படவேண்டும். வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள நிதி சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? - என்பது எனக்குத் தெரியாது. புள்ளி விவரங்களின்படி 2011 ஜூலை மாதம் வரை இந்த நாட்டின் மாகாண சபைகளில் வடமாகாண சபைக்கே மிகக் குறைந்த அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் சில விடயங்களில் வதந்திகள் அடிக்கடி கொடிகட்டிப் பறக்கின்றன. யாழ்ப்பாணத்தில் உலவும் சில கதைகளை நான் கூற விரும்புகின்றேன்.

நிதி விவகாரங்களில் வடமாகாண ஆளுநரின் நேரடித் தலையீடு இருப்பதாலேயே நிதி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற கருத்தொன்று நிலவுகின்றது. அவர் தன்னை ஒரு சில்லறைக்காசுக் கணக்காளராகவும், சான்று கூறும் அதிகாரியாகவும் தரம் இறக்கிக் கொண்டுள்ளார்.

திணைக்களத் தலைவர்கள் மற்றும் அமைச்சு அதிகாரிகளினது எந்தப் பணிக்கும் நிதி வழங்கும்போது ஆளுநரின் அனுமதியைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. குத்தகைக் காரர்களுக்குப் பணம் வழங்க ஆளுநரின் அனுமதி அவசியம். குத்தகைக்காரர்களுடன் அடிக்கடி ஆளுநர் கூட்டம் நடத்துகிறார்.

நாங்கள் 'பரமார்த்த குரு' (மஹாதன முத்தா) பற்றிய நாடோடிக் கதைகளைக் கேட்டிருக்கிறோம். அவரது வேடிக்கையான செயல்களால் அவருக்குக் கெட்டவர் என்று பெயர் கொடுக்கப்படவில்லை. ''தான் செல்லும் வழியில் எதிர்ப்படும் மரங்களை வெட்டி வீழ்த்தியும், கட்டடங்களை இடித்தும் வழியமைத்துக் கொண்டு அவர் செல்வார்'' எனக் கேள்விப்பட் ருக்கிறோம். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய செயல்கள் மற்றவர்களின் விடயங்களில் மூக்கை நுழைப்பது என்பதாகக் கணிக்கப்படுகின்றது. வடமாகாண ஆளுநர் அரச காணியொன்றை ஆக்கிரமித்து, சுமார் 10 கோடி ரூபா செலவில் தனக் கென சொகுசு மாளிகையொன்றைக் கட்டியுள்ளார். இந்த மாளிகையைச் சுற்றியிருந்த மதில் சுவரையும் அவர் இடித்து அப்புறப்படுத்தியுள்ளார். யாழ். மாவட்ட முன்னாள் இராணுவத்தளபதியான ஆளுநர், மற்றவர்களின் சொத்துகளை இவ்வாறு அழித்து அந்த இடங்களில் பெரும்பான்மை மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் இன்றும் தொடர் கின்றன.

இவ்வாறு பொதுமக்களின் பணத்தை அவர்களின் சம்மதம் இல்லாமல் சொந்த நலனுக்கு வாரி இறைக்கும் கொடும் செயல்களை உடனடியாக நிறுத்துமாறு நான் பொது நிர்வாக வீடமைப்பு அலுவல்கள் அமைச்சரிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா நம்பிக்கை சட்டமூலம் அமுல்படுத்துவதன் மூலமாக சீரமைப்பு செய்யப்பட வேண்டும். அதனடிப்படையில் இத்தகைய ஊடுருவல்கள் எதிர்காலத்தில் நிறுத்தப்பட வேண்டும். வடமாகாண ஆளுநருக்கு பொதுமக்களின் பணத்தில் கட்டப்பட்ட சொகுசு மாளிகைகள் கிளிநொச்சி, வவுனியா மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் உள்ளன. சொகுசு வாகனங்கள் உட்பட அவரது பாவனைக்கு ஏழு வாகனங்கள் உள்ளன.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கென அவர் 16 சக்திமிக்க வாயு சீராக்கிகளை (எயார் கண்டிஷனர்) வாங்கினார். அவற்றுக்கு எதிராக எழுந்த தொழில்நுட்ப ஆலோசனைகளை அவர் மதிக்கவில்லை. அவை மண்டபத்தில் பொருத்தப்பட்டு சில மாதங்கள் வெறுமனே இருந்தன. அதன் பின், அவை கழற்றப்பட்டு யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொடுக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் மாகாணத் தலைநகர் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட நிதியை ஆளுநர் ஒருவர் நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி அமைச்சு ஒன்றின் பணிகளுக்கு வழங்க முடியுமா? கொள்வனவுகளிலும் பல தில்லுமுல்லுகள் நடப்பதாகத் தெரிகிறது. ஆளுநர் ஆயிரக்கணக்கான சைக்கிள்களையும், சேலைகளையும் வாங்கி உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது சந்தை விலையை விட மேலதிகமான விலையில் விற்பனை செய்துள்ளார் என்ற வதந்தி அங்கே நிலவுகின்றது. பிரதேச செயலாளரின் அலுவல்களில் ஆளுநர் தலையிட்டது புதிய செய்தி.

ஆளுநரின் இணைப்புச் செயலாளரான மேஜர், மாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகளில் முக்கியமான தீர்மானங்களை எடுத்து வருகிறார். யாழ்ப்பாண நூலகத்துக்கு சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியான புத்தகங்களை வாங்குவதற்குக் கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பியுள்ளார். புத்தகங்களின் தெரிவு, வழங்குநர்களின் தெரிவு போன்ற வழக்கமான நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்த மேஜர் மூன்று மாடிகளைக் கொண்ட சொகுசு மாளிகையொன்றைக் கட்டியுள்ளார். அத்துடன், மக்கள் பணத்தில் சொகுசு வாகனம் ஒன்றையும் வாங்கியுள்ளார். ஆளுநரின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள் அவரது அநாகரிகமான பேச்சால் அவரை நெருங்கவே பயப்படுகிறார்கள். அவர்கள் சாதாரண சிப்பாய்கள்போல நடத்தப்படுகிறார்கள். கண்மூடித்தனமாக இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். அடிக்கடி ஏச்சு வாங்குகிறார்கள். உண்மையில், பெரும்பாலானவர்கள் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தால் வேறு இடங்களுக்குப் போகத் தயாராக உள்ளார்கள். வடமாகாண சபையின் அவலநிலை இப்படி இருக்கிறது.

மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்பு வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்று நடந்ததை நீங்கள் அறிவீர்கள். சாதாரண மட்டத்தைச் சேர்ந்த புதிய சந்ததித் தலைவர்கள் சிலர் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ளூராட்சி ஆளுமைபற்றிக் கற்பிக்கவேண்டியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களுக்கு பயிற்சியளிக்கவேண்டும். உள்ளூராட்சி அமைச்சின் மாகாணத் திணைக்களத்தால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மக்களின் பிரதிநிதிகளான அவர்கள் மாகாணசபையின் அலுவல்களைக் கவனிக்க உரித்துள்ளவர்கள்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் என்பதற்காக அவர்கள் உள்ளூராட்சி அலுவல்களில் ஈடுபடுவதைப் புறக்கணிக்க முடியாது. அவர்கள் உத்தியோகபூர்வ வைபவங்களுக்கு அழைக்கப்படுவதில்லை. இதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட வடமாகாண உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் இன்றைய அவலநிலை. அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மரியாதை, கௌரவம் போன்ற மனித உரிமை மீறல் எங்கும் இல்லை. மக்களைப் பாதிக்கும் எந்தவித நடவடிக்கைகளையும் அவர்கள் மீது திணிக்கக்கூடாது.

பிராந்திய சமச்சீரானது சம்பந்தப்பட்ட வளங்களும் அதிகாரங்களும் அரசின் ஆளுமையின் அடுத்த கட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டால் மட்டுமே நிறைவேறும். வரவு-செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நிதிப் பிரேரணைகளும் கொள்கைகளும் ஜனாதிபதி பிரகடனப்படுத்திய சிறந்த ஆளுமை, சமாதானம், அபிவிருத்தி போன்றவற்றுக்கு ஒருபோதும் வழியமைக்கப் போவதில்லை. *

> “வடமாகாண ஆளுநர் அரச காணியொன்றை ஆக்கிரமித்து, சுமார் 10 கோடி ரூபா செலவில் தனக்கென சொகுசு மாளிகையொன்றைக் கட்டியுள்ளார். இந்த மாளிகையைச் சுற்றியிருந்த மதில் சுவரையும் அவர் இடித்து அப்புறப்படுத்தியுள்ளார். முன்னாள் இராணுவத்தளபதியான ஆளுநர், மற்றவர்களின் சொத்துகளை இவ்வாறு அழித்து அவ்விடங்களில் பெரும்பான்மை மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் இன்றும் தொடர்கின்றன.”

## பிரிட்டனிடம் மன்னிப்பு கோரியது ஈரான்

தெஹ்ரான்,டிசெ.13

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள பிரிட்டன் தூதரகம் மீது கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஈரான் அரசுக்கு இச்செயலில் தொடர்பு இருப்பதாகக் கூறித் தனது தூதரகத்தை பிரிட்டன் மூடிவிட்டது. அதே போல் பிரிட்டனில் தனது தூதரகத்தையும் ஈரான் மூடிவிட்டது.

இந்நிலையில் தாக்குதல் எதிர்பாராத விதமாக நடைபெற்றதாகவும், இதற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் ஈரான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி அக்பர் சலே நேற்றுமுன் தினம் மன்னிப்புக் கோரியுள்ளார். (ந)

# ஹோம்ஸ் நகரிலிருந்து படைகளை விலக்கிக்கொள்ள வேண்டும்

## சிரியாவுக்கு பிரிட்டன் எச்சரிக்கை

ஹோம்ஸ்,,டிசெ.13

ஹோம்ஸ் நகரத்திலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் சிரியாவை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாகப் பிரிட்டனின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலிஸ்ட்டேர் பர்ட் கூறுகையில்;

சிரிய அரசு இராணுவத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற அரபுக் கூட்டமைப்பு நாடுக ளின் கூட்டத்தில் சிரியா இதனை ஏற்கனவே ஒத்துக்கொண் டுள்ளது. வன்முறையை முற்றிலும் ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தில், நகரங்களிலிருந்து தனது ராணுவத்தைத் திரும்பப் பெறுவதாகவும், சிறையில் வைத்துள்ளவர்களை விடுதலை செய்வதாகவும், அரபு நாடுகளின் கூட்டமைப்பு மற்றும் சர்வதேச ஊடகத்தின் கண்காணிப்புக்கு உடன்படுவதாகவும் சிரியா கையெழுத்திட்டுள்ளது.

ஆனால் இப்போது ஹோம்ஸ் நகரத்தில் இந்த உடன்பாட்டை மீறி இராணுவத்தைக் கொண்டு அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களுக்கு ஆபத்து விளைவித்து வருவதை இனியும் பொறுத்துக் கொள்ள இயலாது. சிரிய அரசு உடனே இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (ந)

## இடைக்கால அரசியல் சட்டத்தை துனிஷிய நாடாளுமன்றம் ஏற்பு

இடைக்கால அரசியல் அமைப்புச் சட்டத்தை துனிஷிய நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

துனிஷியாவில் கடந்த ஒக்ரோபர் மாதம் அரசியலமைப் புச் சட்ட நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடந்தது.

இதில் வெற்றிபெற்ற கட்சிகள் கூட்டணி அமைத்து இடைக் கால அரசு ஒன்றை அமைத் தன.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவது, நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி தேர்தல்களை நடத்துவது ஆகியவை இந்த அரசின் பொறுப்புகள்.

எனவே மொத்தம் 217 உறுப்பினர்கள் கொண்ட இந்த நாடாளுமன்றத்தில் ஐந்து நாள்களுக்கு முன் 26 பிரிவுகளைக் கொண்ட இடைக்கால அரசியலமைப்புச் சட்டம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது கடுமையான வாக்குவாதம் நிகழ்ந்து கொண்டிருந்தபோது நாடா ளுமன்றக் கட்டடத்தின் வெளியே ஐந்து நாள்களும் மக்கள் திரளா கக் கூடி நின்று விரைவில் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும்படி கோஷமிட்டனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் துனிஷியா நாடாளுமன்றத்தில் இடைக்கால அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன் மூலம் விரை வில் புதிய அரசு அறிவிக்கப் படும். (ந)

## ஷம்சி விமானத் தளத்திலிருந்து விமானங்கள் ஆப்கனுக்கு மாற்றம்

இஸ்லாமாபாத்,டிசெ.13

பாகிஸ்தானின் ஷம்சி விமானத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்காவின் 5 ஆளில்லா உளவு விமானங்கள் ஆப்கானிஸ் தானுக்கு மாற்றப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் உள்ள ஷம்சி விமானத் தளத்தை தீவிரவாதிகளுக்கு எதிரான போருக்கு அமெரிக்கா பயன் படுத்தி வந்தது. இந்நிலை யில் கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி நேட்டோ படை கள் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 28 பேர் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து ஷம்சி விமானத் தளத்திலிருந்து டிசெம்பர் 11ஆம் திகதிக்குள் வெளியேறிவிடுமாறு அமெரிக் காவிடம் பாகிஸ்தான் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

இதையடுத்து அமெரிக்க விமானங்கள் ஆப்கனுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந)

## தேர்தல் முறைகேடு குறித்து விசாரிக்க ரஷ்ய அதிபர் மெத்வதேவ் உத்தரவு

மொஸ்கோ,டிசெ.13

ரஷ்யாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரை அடுத்து விரிவான விசாரணை நடத்த அதிபர் மெத்வதேவ் உத்தரவிட்டுள்ளார். இதனால் பிரதமர் புடினுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

ரஷ்ய நாடாளுமன்றமான டூமாவிற்கான தேர்தல் கடந்த 4ஆம் திகதி நடந்து முடிந்தது. இதில் தற்போது பிரதமராக உள்ள விளாடிமிர் புடின் மீண் டும் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். முன்னதாக ரஷ்யாவின் ஆளும் கட்சியான ஐக்கிய ரஷ்யக் கட்சியே வெற்றி பெறும் எனக் கருத்துக்கணிப் புகள் கூறிவந்த நிலையில் இந்தத் தேர்தலில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரை அடுத்து அந்த நாட்டு மக்கள் கடும்



ஆர்ப்பாட்டத்தில் இறங்கி, பிரதமர் விளாடிமிர் புடின் பத வியை ராஜினாமா செய்யக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து அந்நாட்டு அதிபர் திமெட்ரி மெத்வதேவ் விரிவான விசாரணை நடத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை ரஷ்ய அரசியல் வரலாற்றில் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவில், இதுபோன்று ஒரு மக்கள் போராட்டம் நடந்ததில்லை எனக் கூறப்படுகின்றது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 26.11.1924
மறைவு: 13.11.2011



எமது பேரன்புக்குரிய
**பர்னாந்து - சுவாம்பிள்ளை**
**(முன்னாள் ஆசிரியர்)**
அவர்களின் மறைவிற்கு
எமது ஆழ்ந்த
அஞ்சலியைத்
தெரிவிப்பதுடன் அவரது
இறுதிச் சடங்கில் கலந்து
கொண்டவர்களுக்கும்
அனுதாபச்செய்திகள்
அனுப்பியவர்களுக்கும்
எமது இதயங்கனிந்த
நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(11497)(1,6,7)

## மரண அறிவித்தல்

### செல்வி ஐயாத்துரை அம்பிகாதேவி



மானிப்பாய் தெற்கு, காளிகோயிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஐயாத்துரை அம்பிகாதேவி நேற்று (12.12.2011) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், விஜயலட்சுமி (பூபதி), விவேகானந்தன், ஸ்ரீறஞ்சினி (பவா), ஸ்ரீகாந்தன், ஞானம், ஜெயா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணேசராசா மற்றும் சத்தியபாமா, பத்மநாதன், மனோறஞ்சிதம், கலாநிதி (கலா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுபாகரன், சுரேந்திரன் ஆகியோரின் சித்தியும், டசிக்கா, ரதிக்கா, தர்சனா, தர்சிகா, தரணியா, தனுஷ், தனுஷிகா, தர்சிகா, தயாளன், தர்ஷிகா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகப் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் தெற்கு. (11539) (2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

### தென்னாபிரிக்க பருவநிலை தொடர்பான மாநாட்டில்

## பூமி வெப்பமயமாவதைத் தடுக்க 2015 இற்குள் சர்வதேச ஒப்பந்தம்

டர்பன்,டிசெ.13

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் நீண்ட விவாதத்துக்குப் பின் கார்பன்டை ஒக்சைட் வெளியிடுவதைக் குறைப்பது தொடர்பாக 2015 க்குள் சர்வதேச ஒப்பந்தம் கொண்டுவருவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் வெளியிடும் கார்பன்டை ஒக்சைட், மிதேன், நைட்ரஸ் ஒக்சைட் உள்ளிட்ட வாயுக்களால் பூமி வெப்பமாகி, துருவப் பகுதிக ளில் உள்ள பனிப்பாறைகள் உருகி வருகின்றன. இதன் காரணமாக, கடல் மட்டம் உயர்ந்து கடற்கரை நகரங்கள் மற்றும் தீவுகள் கடலில் மூழ்கும் அபா யம் உள்ளது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் பருவ நிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பான மாநாடு தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்றது. இதில் 194 உறுப்பு நாடுகள் பங்கேற்றன.

இந்த மாநாட்டில் கார்பன்டை ஒக்சைட் வெளியி டுவதைக் குறைக்க அனைத்து நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. ஒப்பந்தம் தயாரிக்கும் பணி 2012இல் தொடங்கி 2015 க்குள் முடிவடையும். (ந)

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

*யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கு கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்தவர்களிமிருந்து இத்தால் கோரப்படுகின்றன. எனவே குறிப்பிட்ட சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்குப்பெற்று நடத்த விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் தம்மால் வழங்கக்கூடிய ஆகக்கூடிய வாடகையைக் குறிப்பிட்டு 27.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ* **மேல்நீதிமன்ற ஆணையாளர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்** *என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்* **யாழ்.நீதிமன்ற வளாக சிற்றுண்டிச் சாலை நடத்துவதற்கான கேள்விப்பத்திரம்** *எனத் தவறாது குறிப்பிடுதல் வேண்டும்.*

*இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாண மேல் நீதிமன்றப் பதிவாளருடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.*

**க.பரமராஜா,**
*தவிசாளர், மேல் நீதிமன்றக் கேள்விச் சபை.*
*மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம்.*

(6857)(1,6,7)

## தவறிவிட்டது

10.12.2012 அன்று வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை எனும் விலாசத்தைக் கொண்ட யோ.இளங்கீரன் ஆகிய எனது 1¼ பவுண் தங்கச் சங்கிலி தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளியில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின்போது தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு: 0770857591

# அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ.13 முல்லைத்தீவு அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையே இடம் பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற பெண்களுக்கான வலைப் பந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியை எதிர்த்து துணுக்காய் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி 12:9 என்ற புள்ளி அடிப்படையில் துணுக்காய் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு சம்பியானது. (த-23)



அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட மாந்தை கிழக்குப் பிரதேச செயலக அணி வீரர்கள் முல்லைத்தீவு உதவி மாவட்ட செயலாளர் ஆரணி தேவபாலனுடன்... (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெம்.13 வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெறவுள்ளது.

இதில் அம்மன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## சமன் செய்தார் ஆனந்த்

லண்டனில், மூன்றாவது கிளாசிக் செஸ் தொடர் நடக்கிறது. இதில் விஸ்வநாதன் ஆனந்த் (இந்தியா), மேக்னஸ் கார்ல்சன் (நோர்வே) உள்ளிட்ட ஒன்பது வீரர்கள் பங்கேற்கின்றனர். நேற்று முன்தினம் நடந்த ஏழாவது சுற்றில் இந்தியாவின் ஆனந்த், ஆர்மேனியாவின் லேவான் ஆரோனியனை எதிர்கொண்டார். இப்போட்டி 25ஆவது நகர்த்தலின் போது சமநிலை பெற்றது.

ஏழு சுற்றின் முடிவில் ஆனந்த், தலா 3 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தை ஆரோனியனுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். முதலிடத்தை தலா 4.5 புள்ளிகளுடன் கார்ல்சன் (நோர்வே), கிராம்னிக் (ரஷ்யா), மெக்ஷேன் (இங்கிலாந்து) ஆகியோர் பகிர்ந்து கொண்டுள்ளனர். நான்காவது இடத்தில் அமெரிக்காவின் ஹிகாரு நகமுரா (4 புள்ளி) உள்ளார்.

# பிரான்ஸ் விளையாட்டுத் துறையில் ஈழத்தமிழ் இளைஞர் சாதனை



பரிஸ், டிசெ.13 பிரான்சில் வாழும் தமிழ் இளைஞரான கெவின் வலத்தேசர் பரிஸின் புறநகரான செவி ல றூ நகரசபையினால் அதிசிறந்த விளையாட்டு வீரனாக மதிப்பளிக்கப்பட்டிருக்கின்றார்.

செவி ல றூ விளையாட்டு வீரர் களைக் கௌரவப்படுத்தும் மாலை விழா ஒன்று அண்மையில் செவி ல றூவில் இடம் பெற்ற போதே இந்த இளைஞர் கௌரவிக்கப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி பிரான்சின் பிராந்தியங்களுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டி பரிஸ் புறநகர் பகுதியான பொந்தோ கொம்போவில் நடைபெற்றது. இதில் வெற்றியீட்டிய கெவினுக்கு 2010/2011 ஆம் ஆண்டுகளுக்கான விருதும், 2011 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத் துறையின் சிறந்த இளம் சாதனையாளர் விருதும், செவி ல நூவா நகர விளையாட்டுத் துறை அதிபர் லூக் வொல் வேடிச் மேயர், கிறிஸ்டியன் ஹெர்வே ஆகியோரால் வழங்கப்பட்டது.

விளையாட்டுத்துறையில் இளையவரான கெவின் தன்னுடன் போட்டியிட்டவர்கள் ஆச்சரியப்படும் வகையில் முன்னணியில் ஓடியதுடன், இறுதிவரை தனக்குப் போட்டியாக இருந்த எட்டுப் பேரையும் பின்தள்ளி இலக்கை அடைந்தது வியந்து பாராட்டும் வகையில் அமைந்திருந்ததாகவும் பயிற்சியாளர் ஒலிவியே குறிப்பிட்டுக் கூறினார்.

300 மீற்றர் ஓட்டப்போட்டியில் மாநில வாரியாகவும் இல் டே பிரான்ஸ் பரிஸ் பெரும்பகுதி, பிராந் திய வாரியாகவும் கெவின் வெற்றி பெற்று சம்பியனாகி யதுடன் பிரான்சின் முன்னைய சம்பியனை விட அதிக இடைத் தூர வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருப்பதும் தேசிய ரீதியில் 5 ஆவது இடத்தை வகிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## பூப்பந்தாட்டத்தில் வென்றோர்

யாழ்ப்பாணம், டிசெ.13 யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடைபெற்ற பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் தனிப்பிரிவு, இரட்டைப் பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களின் விவரம் வருமாறு:

**தனிப் பிரிவு**

முதலாமிடம் - ரி.சபேசன் (யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வவுனியா), இரண்டாம் இடம் - எஸ்.கேபிநாத் (யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்).

**இரட்டையர் பிரிவு**

முதலாமிடம் - பி.ராஜ்குமார், எஸ்.நிரேஷன் (யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம்).

இரண்டாம் இடம் - றேமட் அனற்சி-பி.றொகன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி). (த-23)

# மீண்டும் சாதித்தது இந்தியா 6ஆவது முறையாக சம்பியன்

மீண்டும் சாதித்தது இந்தியா. நேற்று முன்தினம் நடந்த இறுதியாட்டத்தில் 4-0 என்ற கோல் கணக்கில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது. இதன் மூலம் ஆறாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

டில்லியில், 9ஆவது தெற்காசிய உதைபந்தாட்ட சம்பியன் ஷிப் தொடர் நடந்தது. இதில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்டஎட்டு அணிகள்விளையாடின. நேற்றுமுன்தினம் நடந்த இறுதியாட்டத்தில் இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

முதல் பாதியில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் சிறப்பாக விளையாடினர். இதனால் இந்திய வீரர்களின் கோல் அடிக்கும் முயற்சி தோல்வி அடைந்தது. முதல் பாதி முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் இந்திய வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். ஆட்டத்தின் 62 ஆவது நிமிடத்தில் இந்தியாவின் லால்பெக்குலுயாவை, ஆப்கானிஸ்தானின் பைசால் சபா, ''பெனால்டி ஏரியாவில்' கீழே தள்ளிவிட, இந்திய அணிக்கு ''பெனால்டி' வாய்ப்பு கிடைத்தது. இதனைச் சரியாக பயன்படுத்தி இந்திய வீரர் சுனில் செத்ரி முதல் கோல் அடித்தார்.

தொடர்ந்து அசத்திய இந்திய அணிக்கு கிளிப்போர்ட் மிரண்டா (79ஆவது நிமிடம்), லால்பெக்குலுயா (80ஆவது நிமிடம்) அடுத்தடுத்து கோல் அடித்து கைகொடுத்தனர். மேலதிக நேரத்தில் (90+5) இந்திய வீரர் சுஷில்குமார் சிங் கோலடித்தார். ஆப்கானிஸ்தான் வீரர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முடிவில் இந்திய அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 'நடப்புச் சம்பியன்' அந்தஸ்தை தக்கவைத்துக் கொண்டது.

இத்தொடரில் இதுவரை எட்டு முறை இறுதிக்கு முன்னேறிய இந்திய அணி, ஆறாவது முறையாக (1993, 97, 99, 2005, 09, 11) சம்பியன் பட்டம் வென்று சாதித்தது. இரண்டு முறை (1995,2008) இரண்டாவது இடம் பிடித்தது. முதல் முறையாக இறுதியாட்டத்துக்கு முன்னேறிய ஆப்கானிஸ்தான் அணி, இரண்டாவது இடம் பிடித்து ஆறுதல் பெற்றது. இத்தொடரில் அதிக கோல் (7 கோல்) அடித்த வீரர் மற்றும் சிறந்த வீரருக்கான விருதை இந்தியாவின் சுனில் செத்ரி தட்டிச் சென்றார்.

ஆட்டத்தின் 62ஆவது நிமிடத்தில் நடுவர் சுக்பிர் சிங், இந்தியாவுக்கு ''பெனால்டி' வாய்ப்பு வழங்கினார். இதனால் ஆத்திரமடைந்த ஆப்கானிஸ்தான் கோல் கீப்பர் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரை லேசாக தள்ளினார். உடனே சிவப்பு அட்டை காட்டி ஹமிதுல்லாவை வெளியேற்றினார் நடுவர். பின் பாஷிர் தர்மன் கோல் காப்பாளராகச் செயல்பட்டார். (த-23)

# கல்கிசை சென்.தோமஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,டிசெ.13 அருட்தந்தை ஏ.ஜே.சி. செல்வரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான இரண்டு நாள் கொண்ட 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்கிசை சென். தோமஸ்கல்லூரி அணி வென்றது.

வெள்ளி, சனிக்கிழமைகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கல்கிசை சென்.தோமஸ் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

தனது முதலாவது இனிங்ஸுக்காக துடுப்பெடுத் தாடிய கல்கிசை சென்.தோமஸ் கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது.

திலக் சுமணசிறி 59 ஓட்டங்களையும், சோயிஸ் டிமேல் 34 ஓட்டங்களையும், நிஷான் மதங்கவீர 50 ஓட்டங்களையும் நவெட் சென் கலமினி 39 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்களான பிரிந்தாபன் 50 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அமிர்தயன் 84 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தனது முதலாவது இனிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 124 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றஜிந்தன் 12ஓட்டங்களையும், சஞ்சேயன் 24 ஓட்டங்களையும், பிரிந்தாபன் 33 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கல்கிசை சென். தோமஸ் கல்லூரி அணி வீரர்களான நிஷான் மதங்க வீர 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், டிலும் பெர்னண்டோ 46 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டையும், உமேஸ் பெர்னன்டோ 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

கல்கிசை சென்.தோமஸ் கல்லூரி அணியினர் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியைத் தொடர்ந்து விளையாடுமாறு பணித்தனர்.

அதற்கமைய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் தனது இரண்டாவது இனிங்சுக்காக துடுப்பெடுத்தாடியது.

அதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றனர்.


இதில் கபில்ராஜ் 16 ஓட்டங்களையும், கிருத்திகன் 16 ஓட்டங்களையும், சஞ்சேயன் 32 ஓட்டங்களையும், அமிர்தயன் 31ஓட்டங்களையும், பிரிந்தாபன் ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.தோமஸ் கல்லூரி அணி வீரர்களான திலக், சுமணசிறி ஆகியோர் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், புஸ்பசிஷாக் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நிஷாங்க மதங்கவீர 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் உமேஸ் பெர்ணண்டோ 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

8 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனத் தனது இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய கல்கிசை சென். தோமஸ் கல்லூரி அணி 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிவீரன் பிரிந்தாபன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (த-23)

# நியூஸிலாந்து அணி 'த்ரில்' வெற்றி!



ஆஸியின் வெற்றிக்காக போராடிய வோர்னர் தோல்வியை தாங்காமல் தலைகுனிகிறார்.

ஹோபர்டில் நடந்த டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலிய அணி வெற்றி நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோதும், நேற்று அந்த ஆட்டத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டது.

அபாரமாகப் பந்துவீசிய நியூஸிலாந்து வீரர்கள் வெற்றியைத் தமது பக்கம் திருப்பி 'த்ரில்' வெற்றிபெற்றனர்.

இதனடிப்படையில் இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்துவந்தது

இதில், முதல் போட்டியில் ஆஸ்திரேலியா வென்றது.

இந்நிலையில் இரண்டாவது ஆட்டம் கடந்த ஒன்பதாம் திகதி ஹோபர்டில் ஆரம்பமாகியது.

முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 150 ஓட்டங்களையும், ஆஸ்திரேலிய அணி, 136 ஓட்டங்களையும் பெற்றன.

பின்னர், 14 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, ஓரளவு சிறப்பாக ஆடி சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 226 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர், 241 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியிலக்கு நோக்கி நகரத் தொடங்கியது.

அந்த அணி நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது விக்கெட் இழப்பின்றி 72 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஹக்கியூஸ் (20), வோர்னர் (47) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றியிலக்கை அடைய மேலதிகமாக 169 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன.

இந்நிலையில், நான்காம் நாளான நேற்று வெற்றியிலக்கைத் துரத்த ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணிக்கு, நியூஸிலாந்து வீரர்கள் அதிர்ச்சி கொடுத்தனர்.

சீரான இடைவெளியில் ஆஸ்திரேலியாவின் விக்கெட்டுகளைச் சரித்த அவர்கள், அந்த அணியை 233 ஓட்டங்களுள் மடக்கியது.

இதனடிப்படையில் நியூஸிலாந்து அணி 7 ஓட்டங்களால் 'த்ரில்' வெற்றிபெற்றது.

அந்த அணிக்காகத் தனி ஆளாக நின்று போராடிய வோர்னர் சதம் (123) கடந்தும் ஆட்டமிழக்காது கடைசிவரை களத்தில் இருந்தார்.

ஏனைய வீரர்களுள், ஹக்கியூஸ் (20), காவயா (23), பொண்டிங் (16), ஹெடின் (15) ஆகியோர் தவிர மற்றவர்கள் இரட்டை இலக்கை அடையவில்லை.

ஆஸ்திரேலிய அணிக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய நியூஸிலாந்து வீரரான பிராஸ்வெல் 6 விக்கெட்டுகளையும், சௌத்தீ 2 விக்கெட்டுகளையும், மார்டின், பௌல்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய வீரரான வோர்னரும், தொடர் நாயகனாக பற்றின்சனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தஆட்டத்தில்நியூஸிலாந்து அணி பெற்றிபெற்றதன் மூலம், 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

# இன்னொரு முரளியை எதிர்பார்க்கவில்லை

நாங்கள் இன்னொரு முரளியை எதிர்பார்க்கவில்லை. ஆட்ங்களை வெல்லக் கூடிய மிகச் சிறந்தசுழற்பந்து வீச்சாளரைத்தான் தேடுகின்றோம் -இவ்வாறு இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் சங்ககார தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு பயிற்சி ஆட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது. இதன்போது தென்னாபிரிக்காவில் வைத்து இணையத்தளமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே சங்ககார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

இப்போது எங்களுக்கு ஒரு முரளி தேவையாகவுள்ளார் அவ்வளவுதான். ஏனெனில் எங்களுக்கு மனோரீதியாக அந்தப் பலம் முக்கியமாகவுள்ளது. அதற்காக நாங்கள் இன்னொரு முரளியை எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் எங்களுக்கு ஒரு சிறந்த சுழற்பந்து வீச்சாளர் தேவையாகவுள்ளார். எனினும் அவர் 800 இலக்குகள் சரிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் நான் நினைக்கின்றேன் இப்போதுள்ள எங்களது பந்து வீச்சு அணி இந்தத் தொடரை வெற்றிகரமாக முடிக்கப் போதுமானதென்று.

முன் எப்பொழுதும் இல்லாததை விட சுழற் பந்து வீச்சானது தற்போது அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அஜந்த மென்டிஸை பொறுத்த வரையில் அவரது மாயாஜால சுழற் பந்து வீச்சு நன்றாக இருக்கின்றது. ஆனால் டெஸ்ட் போட்டியைப் பொறுத்தவரையில் அது ஒரு சீரான விளையாட்டு. இங்கு எதிரணிக்கு கடுமையான சிரமத்தையும் அழுத்தத்தையும் கொடுக்கும் வகையில் சரியாக திறமையாக ஒவ்வொரு பந்தும் வீசப்பட வேண்டும்.

வேகப் பந்து வீச்சாளர்கள் தங்களது உடல்திறன்களை சர்வதேச ஆட்டங்களுக்கு ஏற்ற வகையில் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சிறப்பான ஆரம்பத்தை தமது பந்து வீச்சு பெறுதியை உணர்ந்து ஏற்படுத்த வேண்டும் - என்றார். (15)



# பங்களாதேஷை பந்தாடியது பாக்.



பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி, ஓர் இன்னிங்ஸ் மற்றும் 184 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சிட்டாகொங்கில் கடந்த ஒன்பதாம் திகதி ஆரம்பமாகிய இந்த ஆட்டத்தில், பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸிற்காக 135 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 594 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர், பெரும் பின்னடைவுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணி, நான்காம் நாளான நேற்று 275 ஓட்டங்களுள் சுருண்டது.

இதனடிப்படையில் பாகிஸ்தான் அணி, ஓர் இன்னிங்ஸ் மற்றும் 184 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணி சார்பாக இரட்டைச் சதம் (200) அடித்த யூனுஸ்கான் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் பாகிஸ்தான் அணி, இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி டாக்காவில் ஆரம்பமாகிறது

# கொச்சி வீரர்களின் ஏலம் அடுத்த வருடம்

2012ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியையொட்டி, தடை செய்யப்பட்ட கொச்சி அணியின் வீரர்கள் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஏலம் விடப்படவுள்ளார்கள்.

# இலங்கை-தெ.ஆ.XI பயிற்சியாட்டம் சமநிலையில் முடிவு

இலங்கை-தென்னாபிரிக்க லெவன் அணிகளுக்கிடையிலான மூன்று நாட்களைக் கொண்ட பயிற்சியாட்டம் சமநிலையில் முடிந்தது.

ஒன்பதாம் திகதி ஆரம்பமாகிய இந்த ஆட்டம் நேற்றுமுன்தினம் முடிந்தது.

முதலில் ஆடிய தென்னாபிரிக்க லெவன் அணி, 357 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் ஆடிய இலங்கை அணி, பரணவிதாரண (100), டில்ஷான் (74) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் உதவியுடன் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 207 ஓட்டங்களைச் சேர்த்தபோது, மூன்றாவது நாள் நிறைவுற்றது.

இதனால் போட்டி சமநிலையை எட்டியது.

# ஆண்டின் முதல்வன் விராத் கோஹ்லி!

ஒருநாள் கிரிக்கெட் அரங்கில், 2011ஆம் ஆண்டில் அதிக ஓட்டங்களைச் சேர்த்தவர்கள் பட்டியலில் இந் தியாவின் விராத் கோஹ்லி முதலிடத்தில் உள்ளார்.

அவர் 34 போட்டிகளில் விளையாடி 1,353 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இதில், 4 சதங்களும், 8 அரைச் சதங்களும் அடங்கும்.

6 தடவைகள் ஆட்டமிழக்காமல் சராசரியாக 48.32 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார்.


இவருடைய அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 117 ஆகும். இதில் 125 பௌண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங்கும்.

நேற்றுமுன்தினம் மேற் கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 50 ஓட்டங்களைக் கடந்ததன்மூலம் அவர் முதலிடத்தைப் பிடித்தார்.

இரண்டாவது இடத்தில் இங்கிலாந்தின் டிராட் (1,315 ஓட்டங்கள்) உள்ளார்.

இந்த வருடத்தில் மட்டும் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் விவ ரம் வருமாறு:-

| | |
|---|---|
| கோஹ்லி(இந்.) | 1,381(34) |
| டிராட்(இங்.) | 1,315(29) |
| வோட்சன்(ஆஸி.) | 1,139(23) |
| சங்கக்கார(இல.) | 1,127(27) |
| ஹபீஸ்(பாக்.) | 1,075(32) |
| மஹேல (இல.) | 1,032(27) |



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், மாட்டீன் றோட்டில் வாகன தரிப்பிட வசதி உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

அரச/அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0786173033



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த பதில் நீதிவானும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் எனது ஆருயிர் நண்பனுமாகிய A.K. நடராசா [நடா] அவர்களின் சிரேஸ்ட புதல்வனும் எனது மாணவனுமாகிய

**நடராசா ராஜீவன் LLB**

அவர்கள் 13.12.2011 செவ்வாய்க் கிழமை [இன்று] இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

இவர் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி LLB பட்டம் பெற்றவரும் காணிச்சட்டத்தில் தங்கப் பதக்கத்தைப் பெற்றதுடன் இலங்கைச் சட்டக் கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் சட்டத்துறையில் உயர் பதவிகள் வகிக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டி நிற்கின்றோம்.

ப.ஈஸ்வரநாதர் குடும்பம்
Raveens English Medium Class
Karaveddy


## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழல் தமிழ் மக்களுக்கு விருப்பமானதாக உள்ளதா? என்று அவர்கள் ஆராய்ந்தனர். நடைபெற்று முடிந்த தேர்தல்களில் மக்களின் பிரதிபலிப்புகள் எவ்வாறு இருந்தன? என்பது தொடர்பிலும், தேர்தல் நீதியான முறையில் நடைபெற்றதா? என்றும் தேர்தல் கால வன்முறைகள் எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டன? என்பது தொடர்பிலும் அவர்கள் கேட்டறிந்தனர்.

இடம்பெயர்ந்து அகதிகளாக வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்கள் இங்கு திரும்பி வந்தால் வாழக் கூடிய சூழ்நிலை உள்ளதா? என்றும் அவர்களால் இங்கு முதலீடு செய் வதற்கான வாய்ப்புகள் எந்தளவிலும் உள்ளன? என்பது குறித்தும் அவர்கள் கலந்துரை யாடினர்.

கனேடிய அதிகாரிகளுடனான கலந்துரையா டலின் போது, யாழ்ப்பாணத்தில் அரசியல் நிலைவரங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பது குறித்தும் இராணுவச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழல் இருக்கின்றதா? என்பது தொடர்பிலும் அவர்களால் கேள்விகள் எழுப்பப்பட்டன.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் மக்கள் மீளக்குடியமராதது ஏன்? எனவும், அவர்களுக்கு எவ்வாறான சவால்கள் இருக்கின்றன? அவர்களின் தேவைகள் என்ன? என்பது தொடர்பிலும் அவர்கள் என்னிடம் கேட்டனர். அத்துடன் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா? என்றும் ஆராய்ந்தனர்.

இதற்கு என்னால் மக்கள் தொடர்பான சரியான, சாதகமான பதில்களே வழங்கப்பட்டன. அத்துடன் எங்களது மக்களின், குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது என்று அவர்களிடம் கூறினேன் - என்றார் அரச அதிபர். (த-15)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகல் வேளையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. கோப்பாய் பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். சடலம் பிரேத பரிசோதனையின் பின் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

கைதடி மேற்கில் கயிற்றில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான முத்துவேலன் ரவி (வயது -37) என்ற குடும்பஸ்தர் ஆவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு மது போதையில் வந்து வீட்டில் ஒரு அறையில் படுத்துவிட்டார். வீட்டில் இருந்த மனைவி யும் இரு பிள்ளை களும் மற்றொரு அறையில் உறங்கி உள்ளனர்.

இறந்தவரின் மூத்த மகன் நேற்றுக்காலை ஆரம் பமான ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்தார். அவர் நேற்றுக் காலை தந்தை படுத்திருந்த அறையைத் திறக்க முற்பட்டார். ஆனால் அது பூட்டப்பட்டிருந்தது. இதனால் அறையின் பின்பக்கம் உள்ள ஜன்னலைத் திறந்து பார்த்தபோது, தந்தை கயிற்றினால் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார். சாவகச்சேரி பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை கடந்த வியாழக் கிழமை நீர்வேலி இராஜ வீதியில் கணவனும் மனைவியும் கோடரியால் வெட்டிக்படு கொலையுண்ட சம்பவமும் பதிவாகியுள்ளது.

(ஓ-319-207-288)


லிங்கவாசா, உடுப்பிட்டி வீதி, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்தவரும் பதில் நீதிவானும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான அ.க.நடராஜா அவர்களின் சிரேஸ்ட புதல்வருமான

**நடராஜா ராஜீவன் LLB**

அவர்கள் இன்றைய தினம் (13.12.2011) இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்வதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (LLB) பட்டம் பெற்றவர் என்பதும் காணிச்சட்டத்தில் பல்கலைக்கழகத்தில் Placidus Wijeyesekera Gold Medal for the best Student in the Course on Land Low gifted by prof D.S. Wijeyesekera) தங்கப்பதக்கம் பெற்றவரும் இலங்கை சட்டக்கல்லூரியின் இறுதியாண்டு பரீட்சையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவருமாவார்.




வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, அம்மம்மா,
சகோதரர்கள்:
ந.சஜீவன் (சட்டமாணவன் - இலண்டன் மெற்றோபொலிட்டன் பல்கலைக்கழகம் - இலண்டன்)
ந.சுஜீவன் (மாணவன் - இலங்கை சட்டக்கல்லூரி)
சகோதரி : ந.மிதுனா (மாணவி-கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி)
மாமன்மார்:
ப.தயாபரன் குடும்பம் (இலண்டன்)
ப.தயாலிங்கம் குடும்பம் (கனடா)
சித்தி
முரசொலிமாறன் தயாவாணி குடும்பம் (கனடா)

(J&6741)(1,6)



## பிறப்பின் நூறாம் ஆண்டில் விண்ணக வாழ்வின் இருபத்தைந்தாம் ஆண்டு

"என்னில் நம்பிக்கை கொள்பவர்
இறப்பிலும் வாழ்வார்" (யோ 11:25)

மண்ணில் பிறப்பு
1911 * 10 * 13



விண்ணில் பிறப்பு
1987 * 12 * 13

**அமரர் செபமாலை அன்னம்மா**

பெரியம்மா என்று அன்புடன் அழைப்போம் உங்களை
பிள்ளைகள் நாம் மூவரும் உங்களை
பிறப்பின் நூறாம் ஆண்டதனில்
உங்கள் விண்ணக வாழ்வின் இருபத்தைந்தாம் ஆண்டதையும்
நினைவில் கொண்டு
தொட்டம்மாவாக எம் தம்பியை மட்டுமல்ல
எம்மை சீராட்டிப் பாராட்டி வளர்த்த பெருமை கண்டோம்
என்றும் மறவோம் எம் வாழ்வில் உங்களை
உங்கள் ஆன்மா என்றும் இறைவனில்
இளைப்பாற இறைவனை வேண்டிடும் பிள்ளைகள்-

திரு.திருமதி மல்லிகா ஜோண் அரியதாஸ்
திரு. திருமதி அருட்பிரகாசம் (இத்தாலி)
திரு.திருமதி அருளானந்தம் (பிரான்ஸ்)
குடும்பத்தினர்.

சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம்.



## காரைநகர் - பிரதேச சபை
## பகிரங்க அறிவித்தல்

காரைநகர் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்ட உரிமை கோரப்படாத கட்டாக்காலிகள் எதிர்வரும் 15.12.2011 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு குறித்த கால்நடைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். கால்நடை அதிகாரியினால் வழங்கப்படும் சௌக்கிய சான்றிதழுக்காக கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு கால்நடைக்கும் ரூபா 50 அறவிடப்படும்.

வே.ஆனைமுகன்,
தலைவர், காரைநகர் பிரதேச சபை.
12.12.2011

குறிப்பு: சின்னாலடி காரைநகரில் அமைந்துள்ள பராமரிப்பு நிலையத்தில் ஏலவிற்பனை செய்யப்படும்.

குறித்த தினத்தில் ஏலத்தில் விடப்படுகின்ற கால்நடைகள் பிரதேசத்திலிருந்து வெளியே கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (சி-6862)(1,6)



## விலை மனுக் கோரல்

எமது அலுவலகத்தில் அலுவலக பாவனைக்காக பாவிக்கப்பட்ட பொருள்கள் [தளபாடம், இரும்புப் பொருள்கள்] விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் வந்து பார்வையிட்டு விலை மனுக்கோரல் செய்யலாம்.

இடம்: World Vision Lanka
இல. 12 சோமசுந்தரம் லேன், யாழ்ப்பாணம்.
காலம்:
13th Dec 2011 - 16th Dec 2011

(11500)(1,6)



## 4 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



பிறப்பு: 1961.11.11
இறப்பு: 2007.11.27

**செல்வராசா சிவகுமாரன்**
(சிவா)
[முன்னாள் உரிமையாளர், தமரன் புடைவையகம், கிளிநொச்சி]
திதி: 13.12.2011

அன்பான அப்பாவே! அந்த அவலப் பொழுதில்
நாங்கள் உடனிருக்கவில்லை நீங்கள் சொல்ல
நினைத்த நிறைவுச் சொற்களை அறிவோம்
என்ன வார்த்தைகள் சொல்ல நினைத்தீர்கள் அப்பா!
அவனியில் யான் வாழும் வரை உங்கள் பொற்பாதம் தொழுது
நின்று காத்திடுவேன் எம் பிஞ்சுகளை.
உறவுகள் எமக்கு அருகில் நாங்களோ உங்களைத் தேடி.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

இல.232, திருநகர், கிளிநொச்சி.

(14032)(3,6,7)

## பிரான்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றொடிச்சன், யாழ். மாவட்ட அரச அதிபருடனான சந்திப்பின்போது தெரிவித்தார். பிரான்ஸ் தூதுவருக்கும் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை மாலை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

பிரான்ஸ் தூதுவர் குடாநாட்டின் சகல விடயங்கள் தொடர்பாக அறிவதிலும் முழுமையாக கவனம் செலுத்தினார். இங்கு நேரடியாக இடங்களைப் பார்வையிட்ட அவர் அரசின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்ற போதும் தனியார் கட்டமைப்புகள் ஊடான அபிவிருத்திகள் இடம்பெறவில்லை எனத் தெரிவித்தார்.

மேலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன? மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் தொடர்பாக மக்களிடமிருந்து ஏதாவது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளனவா என்றும் அவர் என்னிடம் கேள்விகளை எழுப்பினார். அத்துடன் பிரான்ஸில் சட்டரீதியான பிரஜையாக உள்ள இலங்கையர்கள் இங்கு தமது குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ விரும்பினால் விண்ணப்பிக்கலாம். அதனைத் தமது தூதரகம் சாதகமாகப் பரிசீலிக்கும் என்றும் தெரிவித்தார்- என்றார் அரச அதிபர். (த-15)

## நாகர்கோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றப்படாமல் உள்ளதால் வயல் காணிகள், வீடுகள் என்பனவும் பயன்படுத்த முடியாது உள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை- நாகர் கோயில் கிழக்குப் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் அடுத்த மாதத்துடன் முடிவடையும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மற்றைய பகுதியான நாகர் கோயில் தெற்குப் பகுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் சூனியப் பிரதேசமாக இருந்தது. இப்பகுதியில் கண்ணிவெடிகள் அதிகளவில் புதைக்கப்பட்டுள்ளன. அப்பகுதி இன்னும் விடுவிக்கப்படவில்லை. நாகர் கோயில் கிழக்கு டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு, ஹலோரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகியன கண்ணிவெடி அகற்றுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. (த-319)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பேரின்பமணி வாமதேவன் (இன்பம்)



கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேரின்பமணி வாமதேவன் (இன்பம்) நேற்று (12.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவனின் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் தம்பித்துரை (எகலியகொட) மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் (நயினாதீவு) அன்பு மருமகளும், பத்மநாதன் (கனடா), பாலச்சந்திரன் (அமெரிக்கா), பாலகிருஷ்ணன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ராதா, றூபா (ஜேர்மனி) சாந்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்கை (கனடா), சரஸ்வதி(அமெரிக்கா), ஜெயசோதி, ஜெகநதன் (ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்), ஒகஸ்ரின் (ஜேர்மனி), பவாகரன்(கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை 63/13, பரவைக்குளம் வீதி, (சிவன் வீதி), திருநெல்வேலி இல்லத்தில் நண்பகல் 12 மணி அளவில்நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப2 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63/13, பரவைக்குளம் வீதி,
(சிவன் வீதி), திருநெல்வேலி.

தகவல்: த.பாலகிருஷ்ணன் (ஆசிரியர்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

## திருமதி செல்லையா பாக்கியம்



கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா பாக்கியம் நேற்று (12.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவலோகநாதன் (சந்திரன்- முன்னாள் முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி), பரமநாதன் (பபா), நவரத்தினராசா (முன்னாள் ஊழியர், நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), கௌரிமலர், (ஆசிரியை, றோமன் கத்தோலிக்க பாடசாலை, இருபாலை), ஜெகநாதன் (வர்த்தகர், திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயும், கமலேஸ்வரி, பாஸ்கராதேவி, சுபாசினி, மு.ரவிக்குமார்(காந்தி- உரிமையாளர், காந்தி ஸ்ரோர்ஸ், கட்டைப்பிராய்), குமுதினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கட்டைப்பிராய். குடும்பத்தினர்.

## திருமதி சின்னையா பாக்கியம்

காரைநகர் சக்கலாவோடையைப் பிறப்பிடமாகவும், களபூமி, சத்திரந்தையை வசிப்பிடமாகவும், தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சின்னையா பாக்கியம் நேற்றுமுன்தினம் (11.12.2011) திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

பூதவுடல் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் மு.ப 11 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கல்கிசை இந்த மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.05 4/2, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06

தகவல்: பிள்ளைகள்.

## எனது மரணச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கியில் கடன் எடுக்கப்பட்ட விடயம் தெரிய வந்தது. அத்துடன் அந்தப் பெண்மணியின் பெயரில் உள்ள காணி அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டமையும் கண்டு பிடிக்கப்பட்டது. குறித்த பெண் 1991 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூட் டில் இறந்ததாகவும் அவரது உடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டதாகவும் அவரது தந்தையார் தகவல் வழங்கியதாகத் தெரிவித்துப் போலி மரணச் சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்தப் போலி மரணச் சான்றிதழின் பிரகாரமே காணி உறுதி மாற்றப்பட்டு வங்கியில் கடன் பெறுவதற்காக, ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுவிஸிலிருந்து திரும்பிய குறித்த பெண் வங்கியில் உள்ள தனது மரணச் சான்றிதழைப் பெற்றுத் தருமாறு தன்னிடம் கோரியதாக அரச அதிபர் தெரிவித்தார். அத்துடன் குறித்த மரணச் சான்றிதழை மாவட்ட செயலகம் வழங்கவில்லை எனவும் போலிக் கச்சேரி நடத்துவோரே அதைத் தயாரித்து வழங்கியுள்ளதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் கூறினார். (த-15)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நான் நடவடிக்கை எடுப்பேன். யுத்தம் முடிவடைந்தபோதிலும் இந்த மீனவர் கள் ஆழ்கடலில் மீன் பிடிக்க பாஸ் நடைமுறை விதிக்கப்பட்டுள்ளது. இதை நீக்குவது தொடர்பாக நான் பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளேன்.

வடபகுதியிலிருந்து மீன்களைக் கொள்வனவுசெய்து தெற்கிற்குக் கொண்டுசெல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை. நாம் அவ்வாறு பெற்றே வடக் கில் மீன்களை கொள்வனவு செய்கிறோம் என்று தெற்கு வர்த்தகர்கள் கூறுவது ஒரு மோசடியாகும்.

தென்பகுதி மீனவர்கள் வடக்கில் மீன் பிடிப்பதற்கும் நாம் அனுமதி வழங்கவில்லை. கடற்றொழில் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் கடற்றொழில் அமைச்சுக்கு உள்ளது - என்றார்.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'அரசியல் கைதிகளை உடன்விடுதலை செய்', 'காணாமல் போனவர்களின் நிலை என்ன?', 'தமிழ், சிங்கள உறவுக்கு யாழில் அரசு தடை' போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திர தொழிலாளர் மத்திய நிலையம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு, காணாமற்போனோரை தேடியறியும் குழு, கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம் உள்ளிட்ட அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டன.

''எனது மகன் கடத்தப்பட்டுள்ளதால் நானும் எனது குடும்பமும் நிம்மதியின்றி தவிர்க்கின்றோம்'' என தந்தையொருவர் மனங்கலங்கினார்.

''எனது மகன் கடந்த 2007ஆம் ஆண்டு இனந்தெரியாத நபர்களால் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டுள்ளார். இரவு வேளையில் எனது வீட்டிற்கு வீட்டிற்கு வந்த அந்த இனந் தெரியாத நபர்கள் வீட்டிலிருந்த நகைகளையும் மோட்டார் சைக்கிளொன்றையும் எடுத்துச் சென்றதுடன், எனது மூத்த மகனையும் கடத்திச்சென்றுள்ளனர்.

''எனது மகன் கடத்தப்பட்டமை குறித்து பொலிஸார், மனித உரிமைகள் அமைப்பு உள்ளிட்டவற்றிற்கு முறைப்பாடு செய்துள்ள போதிலும், இதுவரையில் எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

''எனது மகன் கடத்தப்பட்ட நிலையில் அவர் எங்குள்ளாரென்பது தொடர்பில் தெரியவில்லை. அவர் இன்னமும் கடத்தப்பட்ட நிலையிலுள்ளாரா அல்லது மரணித்து விட்டாரா என்பது தொடர்பில் எதுவும் தெரியாத நிலையில் தவிக்கின்றேன்.

''எனது மகன் கடத்தப்பட்டமையை நினைத்து நினைத்து வருந்திக் கொண்டிருந்த எனது மனைவியும் இறந்து விட்டார். இன்று நானும் எனது ஏனைய பிள்ளைகளும் கடத்தப்பட்ட எனது மூத்த மகனை நினைத்து நினைத்து தினமும் துன்பத்தில் துடிக்கின்றோம்'' - என்று கடத்தப்பட்ட இளைஞனின் அந்தத் தந்தை கண்ணீருடன் தெரிவித்தார்.

## தனியார் பஸ் சாரதிகள் மீது தாக்குதல்

நேற்று இரவு 7.30 மணியளவில் பண்ணைப் பகுதியில் தனியார் பஸ் சாரதிகள் சிலர் படையினரால் தாக்கப்பட்டதாக தெரிய வருகிறது. இத்தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது என்பது குறித்து உறுதியான தகவல்களைப் பெறமுடியவில்லை. (ங-சி)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலன் எவலின் குறோஜர் ஆகியோர் அடங்கியிருந்தனர். இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்தக் குழுவினர் நேற் றுத் திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கண்டாவளைக்கு சென்றனர். அங்கு வெலிக்கண்டல் என்னும் இடத்தில் ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் 'டாஷ்' நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் மிதிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டனர்.

அத்துடன் கண்ணி வெடி அகற்றும் பணிகளின் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்தும் இந்தக் குழுவினர் 'டாஷ்' நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்கள். (த-6)

**கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு**

2200 சதுர அடி நிலப்பரப்பளவைக் கொண்ட G +2 தள கடைத் தொகுதி சுன்னாகத்துக்கும் மல்லாகத்துக்கும் இடையில் கே.கே.எஸ். வீதியில் உண்டு.

தொடர்புகளுக்கு
KR Building Constructions
(Gopi) - கோபி- 0771726642
(Siri) - சிறி - 0779003780

# கண்ணீர் அஞ்சலி



யா/ வயாவிளான் மத்திய
மகாவித்தியாலய க.பொ.த (உ/த) 2012
வணிகப்பிரிவு மாணவன்
**அமரர் யோகேஸ்வரன் புதர்சன்**
(உதவி சிரேஷ்ட மாணவ தலைவன், யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)
[11.12.2011] அன்று அமரத்துவம்

அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ வயாவிளான் ம.ம.வி.
வயாவிளான். பாடசாலை சமூகம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் திருமதி இ.இராஜலிங்கம்
அவர்களின் மாமியார்
**கந்தையா இலட்சுமி**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காணி மாவட்டப் பதிவகம்,
யாழ்ப்பாணம். ஊழியர் நலன்புரி சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் முன்னாள் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்று கடந்த 07.12.2011 புதன்கிழமை இறைபதம் எய்திய

**திருமதி சிவசோதியம்மா வேலுப்பிள்ளை**

அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யாழ்/கைதடி குருசாமிவித்தியாலயம்.

# மரண அறிவித்தல்



## குமாரசாமி பத்தர் அற்புதராசா

(கிப்ரி நகைத் தொழிலகம், கச்சாய் வீதி, சாவகச்சேரி)

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பத்தர் அற்புதராசா நேற்று (12.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி பத்தர்- யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் வரலட்சுமியின் அன்புக் கணவரும் பிரதீபன், சுமலதா, இந்துமதி, யமுனா, காலஞ்சென்ற திலீபன் ஆகியோரின் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை. மனைவி, பிள்ளைகள்.

நெல்லியடியில் ஆரம்பமாகவிட்டது
LONDON COLLEGE OF ACHIEVERS

Professional Courses

- AAT (Tamil & English Medium)
- Banking Courses (CBF & DBF)
- IELTS & KET
- External Degrees(GAQ,BA & First in Com)

O/L & A/L Classes ( English& Tamil Medium)

சிறுவர்களுக்கான British Council ஆல் வடிவமைக்கப்பட்ட ஆங்கிலப் பாட கற்கைநெறி (வயது 6-16)

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி.0212264206

உடனடித் தொடர்புகளுக்கு:0770424588

உங்கள் மழலைகளின் பிரகாசமான எதிர் காலத்திற்கு!!!!!
உங்கள் கனவு உங்கள் மழலை பற்றியதா!!!!!!!!!!
உங்கள் கனவு நிஜமாக வேண்டுமா!!!!
யாழ் மண்ணில் இதோ விரைவில் உதயமாகிறது
பாலர் முன்பள்ளி(ஆங்கில மொழி மூலம்)



மிகவிரைவில் ஆரம்பம்
ஆங்கில மொழி மூலம்
(English Medium)
Lake land inter - American School
Montessori & day care centre

★ கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் Lake land inter - American School இன் பாலர் முன்பள்ளி [ஆங்கில மொழி மூலம்] தற்போது யாழ்.மண்ணில் எதிர்வரும் தைமாதம் முதலாம் திகதி [15.01.2012]-2012 ஆரம்பிக்கப்பட உள்ளது இந்த முன்பள்ளியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உங்களுடைய இடத்திற்கு முந்துங்கள் தாமதிக்கவேண்டாம்.

குறிப்பு:
★ இருபாலருக்குமான விண்ணப்பங்கள் பெற்றோர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.
★ வயதெல்லை - 03 வயது தொடக்கம் 05 வயது வரை

விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் முகவரியில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் சனிக்கிழமைகளில் 12.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

**Our Vision**
To become a model school which transforms personalities into academically sound,physically healthy,Multi - skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

154, பிறவுண் வீதி,
(Aerolanka Office அருகில்),யாழ்ப்பாணம்.
இயக்குநர்.
(021-4923390)

# மரண அறிவித்தல்

## யோகேஸ்வரன் புதர்சன்

(மாணவன் A/L 2012 வர்த்தகப்பிரிவு, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் புதர்சன் 11.12.2011 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் யோகேஸ்வரன்-கமலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் தவீசன் (யாழ்.பல்கலைக்கழகம், முகாமைத்துவபீடம் 2ஆம் வருடம்), நிரூபன் (A/L கலைப்பிரிவு 2013, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணிக்கு பூதவுடல் எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Study in the UK
AZAD UNIVERSITY
OXFORD welcome students from Sri Lanka
AUO
AZAD UNIVERSITY (IR) IN OXFORD

Door opens for
January / February
2012 INTAKE




Spot Admissions by AZAD University official.
Mr. Kathir Suhanthan International Student Recruitment Officer from AZAD University will conduct Spot Interviews.The suitable candidates can receive an offer letter...

Foundation Programmes
Undergraduate Courses
Postgraduate Courses
Business Management
Computer Science and IT
English language programme

Limited Scholarships worth £1500 available

International foundation year with IELTS 4.5 & only with G.C.E O/L at special fees of £4300

Partner Universities
Bangor University | City University London | Exeter University | Glasgow University | Kingston University | University of Hertfordshire

PhD from Southampton University and City University London with 20 hours work rights

Spot Interviews on 13th of December 2011
Place: Green Grass Hotel & Restaurant,Jaffna.
Address: 33 Aseervatham Lane,Hospital Road, Jaffna.
Time : 10.00am to 5.00pm
Please bring original educational certificates and other supporting documents

For More Information
Tel - +44 (0) 1865 884350
Stroud Court, Eynsham
Oxford Road, Oxford, OX29 4DA
United Kingdom

www.auo.org.uk and admissions@auo.org.uk

University Representative Office
No: 14, Castle Lane, Colombo 04
Tel: - 0094112555243
Please, Call Now to book Appoinment:- 0774630899
Email: – :-k.suhanthan@auo.org.uk

# விரிவுரைகள் வழமைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்.பல்கலைக்கழக, கலைப்பீட மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் முடிவுறுத்தப்பட்டதாகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்ததைத் தொடர்ந்து நேற்று திங்கட்கிழமை முதல் கலைப்பீட விரிவுரைகள் அனைத்தும் வழமை போன்று நடைபெற்றன. (ங-319)

ஸ்கிறீன், ஒவ்செற் பிறிண்டிங் வசதியுடன்
2012 கலண்டர்கள், டயரிகள்,
சகலவிதமான பிறிண்டிங்
வேலைகளுக்கும் நியாயவிலை,
உயரிய தரம்
யாழில் M கொழும்பு பிறிண்டேர்ஸ்,
666, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

வேலைவாய்ப்பு
★ கணினி ரைப் செற்றிங் செய்வதில் திறமை உள்ளவர்.
(முன் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை)
★ அலுவலக எழுதுநர்கள்
★ வாகனச் சாரதி(வேன்)
தொடர்பு:0775040714
கஜன் - யாழ்ப்பாணம்

கணினி மலிவு விற்பனை
Full Set Computers

| | |
|---|---|
| PIV 2.8 GHZ | 23750/= |
| HT 3.0 HP | 24750/= |
| D/C 3.4 IBM | 31750/= |

LCD Monitor, Multi K/B, Mouse, Speaker, Head Phone
Free: Web Cam/ 4GB Pendrive
1 Year Warranty

Core 2 Duo Laptop
Dlcore 3.06 GHZ
Core i 3 Laptop
Pen Drivers
650 VA UPS
Colour Printers
Laser Printers

Three Years Warranty
7.2 MbpS Dongle 3G
162, Main Street, Jaf.
TP. NO :- 222-1417-
737 Kks Road, Jaf.
2224865
0750698608
Sky Computer System.

உங்கள்
வியாபாரம்
பெருக
உதயனில்
விளம்பரம்
செய்யுங்கள்.

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு உதயகுமார்

(அஞ்சல் ஊழியர், புத்தூர்)

## திருமதி உதயகுமார் வசந்திமாலா



புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு உதயகுமார், திருமதி உதயகுமார் வசந்திமாலா ஆகியோர் (08.12.2011) வியாழக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்கள்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் புத்தூர் கிந்துப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் வீதி, புத்தூர். (11476) (2-6)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னப்பு சுந்தரலிங்கம்



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைச் சேர்ந்த சின்னப்பு சுந்தரலிங்கம் 11.12.2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின் னப்பு - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் நவநீதன் (நீதன்), யசோதினி (ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), டாக்டர் கலாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருணகிரிநாதன், சசிதரன் (நோர்வே), தர்சினி ஆகியோரின் மாமனாரும் சங்கீதன், யதுசன், திவா னுஜா, பிரணவி ஆகியோரின் பேரனும் சிவப்பாதசுந்தரம், தவலிங்கம், பரமேஸ்வரி, புனிதவதி (மலேசியா), பசுபதி மற்றும் காலஞ்சென்றவர்களான குருமணி காசிலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (11496) (1,6,7)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கதிரேசு கனகநாயகம் (குழந்தை)



உடுவில், காளிகோயிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு கனகநாயகம் (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற நடராஜா மற்றும் மனோன்மணி தம்பதி யரின் அன்பு மருமகனும் காளி தர்சினியின் அன்புக் கணவரும், நிஷாந்தி, நிலானி (M.P.C.S நல்லூர்), கேசவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற ஈஸ்வரி மற்றும் நவரட்ணம், செல்வரட்ணம், பத்மநாதன், செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத் தின் ஒன்றுவிட்ட சகோதரனும், தங்கமலர் யோக வதி, ஜெயநாயகி, கௌசலா பவானி, சிறீகாந்தன், தியாகராஜா, சற்குணராஜா ஆகியோரின் சகலனும் மனோரஞ்சிதம், கமலகுமாரி, சிவகுமார், பாலகுமார், தனரஞ்சினி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2011) செவ்வாய்க் கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
உடுவில். (11535) (2-6-7)

தகவல்:
- குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.